அலையும் மனமும் வதியும் புலமும்

சந்திரவதனா

சந்திரவதனா

அலையும் மனமும் வதியும் புலமும்

பத்திகள்

மனஓசை

Chandravathanaa Selvakumaran

Alaiyum Manamum Vathiyum Pulamum

Column

MANAOSAI

First Edition: May 2019
Language: Tamil
Copyright © May 2019 Manaosai Verlag
Published by Manaosai Verlag, Germany
Printed in Stuttgart, Germany

Copyright © Chandravathanaa Selvakumaran
Compilation: Visaly
Cover Design: Muunaa

ISBN: 978-3-9813002-6-0

இவை
இருப்பை இடம் பெயர்த்து
இன்னொரு புலத்துக்கு மாற்றி விட்டு
விருப்போடு அமர முடியாது
வாடியிருந்த பொழுதுகளையும்
காலநிலை, மொழி,
கலாச்சாரம், பண்பாடு... என்று
எல்லாவற்றிலும் மாறுபட்ட
புலம்பெயர் தேசத்தில்
வசப்பட்ட வாழ்வையும்
கூறும் கதைகள்!

நட்புடன்
சந்திரவதனா

சந்திரவதனா (1959) ஈழத்தில் மேலைப்புலோலியூர், ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1986 இலிருந்து தனது குடும்பத்துடன் ஜெர்மனியில் வாழ்ந்து வருகிறார்.

1975 இலிருந்து எழுதிக் கொண்டிருக்கும் இவரது பன்முகப்பட்ட படைப்புகள் வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணைய இதழ்கள் என பல தளங்களிலும் வெளிவந்திருக்கின்றன.

இவரது முதல் தொகுப்பான 'மனஓசை' முப்பது கதைகளுடன் 2007 இல் வெளியானது. இது இவரது இரண்டாவது தொகுப்பு.

உள்ளடக்கம்

1. அந்த நாட்கள் 07
2. கரண்டி...13
3. அழைப்புமணி 20
4. ஒரு சனிக்கிழமை 27
5. அவள் வருகிறாள் 35
6. சில பக்கங்கள் 41
7. தவிர்க்க முடியாதவைகளாய் 51
8. அக்கரைப்பச்சைகள் 59
9. தீர்வுகள் கிடைக்குமா? 65
10. விவாகரத்து...72
11. பயணம்..77
12. உபதேசம்...83
13. சில நேரங்களில் சில சந்திப்புகள்.......................87
14. குட்டைப்பாவாடைப் பெண் 94
15. எமக்கான கதவு.. 97
16. பொட்டு 101
17. அவன் ஆம்பிளை நான் பொம்பிளை..............103
18. ஓர் அசாதாரண நாள் 108
19. வாய் இருந்தால் வங்காளம் போகலாம் 111

அந்த நாட்கள்

***பொ**ன்னிலும், பளிங்கிலும் ஜேர்மனி பளபளக்கும் என்ற சிறுவயதிலான மேலைநாடுகளைப் பற்றிய கனவு ஐந்து நாட்களுக்கு முன் மொஸ்கோவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட போது கலைந்து போய் விட்டது.*

ஏஜென்சியைப் பிழை சொல்லி என்ன பயன். மீண்டுமான முயற்சியில் மீண்டுமாய் பணத்தைக்கொட்டி விட்டு இன்னொரு ஏஜென்சியை நம்புவதுதான் அப்போ தைக்குச் செய்யக் கூடிய காரியமாக இருந்தது. பணம் போய் விட்டதையும் விட முதல்தரப் பயணத்துக்கு காசு கொஞ்சம் குறைகிறது என்ற போது தம்பி செய்து தந்த சங்கிலியை அவசரமாய் ராணி நகைமாளிகையில் விற்ற போதிருந்த கவலை அடிமனதின் ஒரு ஓரத்தில் இன்னும் உரசியது. பொன் போய் விட்டதில் கவலை இல்லை. தம்பியின் அன்பினால் பின்னப் பட்ட ஒன்று போய் விட்டது என்பதில்தான் கவலை. கை மாறிய போது கண்களில் எட்டிப்பார்த்த துளிகளை யாருக்கும் தெரியா மல் சட்டென்று துடைத்து விட்டேன். மனதை அப்படித் துடைத்தெறிய முடிவதில்லைத்தானே.

விமானம் பிராங்பேர்ட்டில்(Frankfurt) தரையிறங்கு கிறது என்ற போது அத்தனை சோர்விலும் மனம் பட படத்தது. எல்லாவற்றையும் சரியாகச் சொல்லி சமாளித் துக் கொள்வேனா என்ற பயமும் கூடவே வந்தது. "மூன்று பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு தன்னந் தனியாக விமானம் ஏறப் போகிறாளோ" என்று முகத் தைச் சுளித்தவர்களும் நாடியைத் தோள்பட்டையில் இடித்தவர்களும் அந்த நேரத்திலும் மனசுக்குள் எட்டிப் பார்த்தார்கள்.

எனக்கு வேறுவழி தெரியவில்லை. என் பிள்ளை களைக் காப்பாற்றி விடவேண்டும் என்ற சுயநலம் மற் றைய எல்லாவற்றையும் அடித்துப் போட்டுவிட்டிருந்தது. பெற்றவர்களையும் உடன்பிறப்புகளையும் உற்றவர்களை

யும் விட்டு விட்டு போர் சூழ்ந்த நாட்டில் இருந்து ஓடி வருவதில் உள்ள சரி, பிழைகளை எல்லாம் ஆழமாகச் சிந்தித்து ஆராய்ந்து கொண்டிருக்க அப்போது அவகாசம் இருக்கவில்லை. அன்றையபொழுதில் எனக்கு அயோத்தி ஜேர்மனிதான் புறப்பட்டு விட்டேன்.

துவண்டு போயிருந்த மூன்று குழந்தைகளையும் உஷார் படுத்தி விட்டு தலைக்கு மேலிருந்த கதவைத் திறந்து ஹான்ட்லக்கேஜை இழுத்தெடுத்தேன். மூத்தவன் அப்படியே விமான இருக்கையில் தன்னைக் குறுக்கிக் கொண்டு இன்னும் தூக்கக் கலக்கத்தில் இருந்தான். சின்னவனைத் தூக்கிக் கொண்டு ஹான்ட்லக்கேஜையும் இழுத்துக் கொண்டு வரிசையில் நகர, மகளும் பின்னால் வந்தாள். சின்னவனையும் லக்கேஜையும் வெளியில் விட்டு விட்டு மீண்டும் வந்து மூத்தவனைக் கூட்டிச் செல்லும் எண்ணத்தில் விமானப் படிகளில் இறங்கி லக்கேஜை வைத்து விட்டு நிமிர்ந்த போது விமானப் பணிப்பெண்களில் ஒருத்தி மூத்தவனை கையில் பிடித்து அணைத்தபடி கீழே இறங்கிக் கொண்டிருந்தாள். மிக வும் நன்றியாக இருந்தது.

சில்லென்ற காற்று உடைகளையும் தாண்டி மேனியைத் தீண்டியது. மே மாதம் குளிராது என்றுதான் சொல்லியிருந்தார்கள். ஆனாலும் ஜேர்மனி குளிர்ந்தது. பிராங்பேர்ட் விமான நிலையம் பெரிதாக இருந்தது. உள்ளே போய் அகதி அந்தஸ்து கோருவது அத்தனை சுலபமாக இருக்கவில்லை. கேள்விகளால் துளைத்தார் கள். அவர்களது ஜேர்மனிய மொழியில் ஒரு சொல்லே னும் எனக்குத் தெரியவும் இல்லை, புரியவும் இல்லை. பாடசாலையில் படித்த ஆங்கிலம் தான் அப்போது கை கொடுத்தது.

மூன்று குழந்தைகளும் எனது குழந்தைகள்தான் என்பதை அவர்களுக்கு நம்ப வைப்பதே பெரும்பாடாக இருந்தது. அதிசயப்பூச்சிகளைப் பார்ப்பதுபோல எம்மைப் பார்த்து, ஸ்ரேற்மென்ற் (Statement) எடுத்து, புகைப்படம் எடுத்து சிலமணிகளின் பின் விமான நிலையத்தின் இன்

னொரு அறையில் விட்டார்கள். அந்த அறை எட்டு இரண்டடுக்குக் கட்டில்களால் நிறைந்திருந்தது. அனேக மான கட்டில்களில் போர்த்திய படி வேற்றுநாட்டவர்கள் படுத்திருந்தார்கள். எமக்காகக் கதவு திறக்கப்பட்ட போது எழுந்தசத்தத்தில் சிலர் ஆமைகள் போலத் தலைகளை நீட்டிப் பார்த்து விட்டு மீண்டும் போர்வைக்குள் முடங்கிக் கொண்டார்கள்.

எனக்கும் மூன்று பிள்ளைகளுக்குமாக ஒரு கட்டில் தரப்பட்டு அரைமணியில் சாப்பாடு வந்தது. சாப்பாடு எதுவும் எனக்கோ பிள்ளைகளுக்கோ பிடிக்க வில்லை. ஆளுக்கொரு அப்பிளை மட்டும் எடுத்துச் சாப் பிட்டோம். அது அர்த்தஜாமம் என்று அங்கிருந்த ஒரு ஆப்கானிஸ்தான் பெண் சொன்னாள். எங்களைப் படுத்து விடும் படியும் சொன்னாள். எங்களால் படுக்க முடியவில்லை. அதனால் வெளியில் போனோம். சந்நிதி, திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயமடங்களில் தங்கியிருப் பவர்கள் சுருண்டிருப்பது போலப் பலர் விமான நிலை யத்தின் வாங்கில்களிலும் நிலங்களிலும் சுருண்டு படுத் திருந்தார்கள். ஏதோ ஒரு விமானம் அன்று பறக்க வில்லையாம்.

அன்றைய அந்த இரவை ஜேர்மனியுடன் ஒட்ட வைப்பது என்பது எனக்கோ, பிள்ளைகளுக்கோ முடி யாத காரியமாகவே இருந்தது. இரவு நீண்டிருந்தது. உதடுகள் வெடித்தன. கால்கள் பொருக்குப் பூத்தது போல குளிரில் வெளிறின.

அடுத்த நாள் விமானநிலையத்துக்கு அருகிலேயே உள்ள அகதிகள் முகாமொன்றில் எங்களைக் கொண்டு போய் விட்டார்கள். அங்கும் பிடித்தமான சாப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை. தஞ்சம் கோரி வந்த எங்க ளுக்கு மீண்டும் ஒற்றை அப்பிள்தான் தஞ்சம். ஊரில் சுண்டக் காய்ச்சிய பாலையே குடிக்கப் பஞ்சிப்படும் என் பிள்ளைகள் அவர்கள் தந்த பச்சைப் பாலைத் தொடக் கூட மறுத்து விட்டார்கள். அந்த அகதிகள் முகாமில் ஆப்கானிஸ்தானியர், ஆபிரிக்கர், பாகிஸ்தானியர், ஈழத்

தவர்... என்று பல நாட்டவர்களும் இருந்தார்கள்.

எமக்குத் தரப்பட்ட பெரியஅறையில் இரண்டு பெரிய அடுக்குக் கட்டில்கள் இருந்தன. அந்த அறை ஈழத்தமிழர்களுக்கென ஒதுக்கப் பட்டிருந்தது. ஒரு கட்டி லின் மேற் தட்டில் நானும் பிள்ளைகளும் படுப்பதாகத் தீர்மானித்துக் கொண்டோம். கீழே மணிமேகலையும் சாம்பவியும் படுத்தார்கள். மற்றைய கட்டிலின் கீழ்த் தட்டில் ராசாத்தியும் அவளது இரண்டு வயதுக் குழந் தையும். அவர்களுடன் கூடவே சாந்தியும் இன்னும் இரண்டு பெண்களும். எல்லாப் பெண்களுமே அவரவர் கணவன்மாரையோ அன்றி கணவனாகப்போபவரையோ நம்பி வந்தவர்கள். கட்டிலின் மேற்தட்டில் இரண்டு இளைஞர்கள். உயிர் காப்பது ஒன்றே குறியாகக் கொண்டு ஓடிவந்தவர்கள். எந்தச் சொந்தமோ பந்தமோ அவர்களுக்காக ஜேர்மனியில் இல்லை. அவர்களது கண் களில் ஒருவித மிரட்சியும் அயற்சியும் குடிகொண்டிருந் தன.

இதற்கிடையில் நான் தொலைபேசியில் எனது கணவருக்கு நாம் வந்து சேர்ந்து விட்டதைத் தெரிவித் திருந்தேன். அவர் ஸ்வெபிஸ்ஹால் நகரிலிருந்து இரண் டாம் நாள் இரவு எம்மிடம் வந்து சேர்ந்தார். ஸ்வெபிஸ் ஹால் நகரிலிருந்து வேறெங்கும் செல்ல அவருக்கு அனு மதியில்லை. பிடிபட்டால், உடனடியாகப் புகைவண்டி யில் ஏற்றி ஸ்வெபிஸ்ஹால் நகருக்கே திருப்பி அனுப்பி விடுவார்கள். அது மட்டுமல்ல தண்டனையாக 400 ஜேர் மனிய மார்க்குகளைக் கட்டவும் சொல்வார்கள். 350 மார்க் சமூகநல உதவிப்பணத்துடன் வாழும் எனது கண வரின் அப்போதைய நிலை அது.

அந்த இரவே மற்றையவர்களின் கணவர்களும் வந்து சேர்ந்து விட, அந்தக் கட்டில்களையே பகிர்ந்து அன்றையஇரவைத் தூங்கியும் தூங்காமலும் கழித்தோம். அடுத்த நாள் காலை, மூன்றாம் நாள், எங்களுக்கு 'அகதி அந்தஸ்து கோரியுள்ளார்´ என்பதற்கான தற்காலிக அகதி அடையாள அட்டை தந்து இன்னொரு அகதி

முகாமுக்கு அனுப்புவதற்காக பேரூந்தில் ஏற்றினார்கள். கூடவே இன்னும் சில தமிழ்ப்பெண்கள். எனது கண வரும் அவரைப் போலவே அனுமதியின்றி வந்த ராசாத்தி யின் கணவரும் செய்வதறியாது நிற்க, எங்களை ஸ்வல் பாஹ்(Schwalbach) அகதி முகாமுக்கு அனுப்பி விட்டார் கள். பேரூந்தில் சில மணி நேரங்கள் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

அந்த முகாமில் ஓரளவு தமிழர்கள் இருந்தார்கள். ஆனால் என்னைப் போல மூன்று பிள்ளைகளுடன் வந்தவர்கள் யாரும் அங்கில்லை. களைத்துப் போன எனதும் பிள்ளைகளதும் முகங்கள் அவர்களுக்கு எங்கள் மீது இரக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கிட்ட வந்து அன்பாகவும் உதவும் நோக்குடனும் கதைத்தார்கள். எம்மைச் சாப்பிட வரும்படி அழைத்துச் சென்று ஒரு பெரிய ஹோலில் விட்டார்கள்.

அது கன்ரீனுடன் சேர்ந்த பெரிய ஹோல். ஹோல் நிறைய பலவித மொழிகள் பேசும் பலவிதமான மக்கள் கசா முசா என்று கதைத்த படி இருந்தார்கள்.

நானும் பிள்ளைகளும் 'இன்றைக்காவது சாப்பிடு வோம்´ என்ற நம்பிக்கையோடு காத்திருக்க, அந்தத் தமிழர்களே எமக்கான சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வந்து தந்துவிட்டுப் போனார்கள். ஆவலுடன் சாப்பாட் டுக்காகக் காத்திருந்த எனது மூத்தவனின் முகம் சாப்பாட் டைக் கண்டதும் ஏமாற்றத்தில் துவண்டு போனது. வந்த சாப்பாடு நாம் வாழ்க்கையில் முதல் முதலாகச் சந்திக்கும் பிற்சா (Pizza). சிப்பி, சோகியெல்லாம் அதன் மேல் போட்டிருந்தார்கள்.

"இதையெப்பிடிச் சாப்பிடுறது..?"

கோபம், ஏமாற்றம், அழுகை எல்லாம் கலந்த கேள்வி அது. ஏற்கெனவே எனது கணவர் எப்படி இங்கே வந்து சேரப் போகிறார்? என்ற யோசனையும் கவலையும் எனக்குள். அதைமிஞ்சிய வயிற்றுப்புகைச்சல்.

என் மகனும் இப்படிக் கேட்க, உடனேயே எனக்கு எங்கள் மேல் தாங்கமுடியாத பச்சாத்தாபம் ஏற்பட்டது. திரும்பிப் போய்விடுவோம் என்ற அங்கலாய்ப்பு வந்தது. போய் அம்மாவின் கையால் அம்மாவின் சமையலைச் சாப்பிடவேண்டும் என்ற அவா எழுந்தது. எல்லாமுமாய் அழுகையே வந்தது. மூன்று நாள் ஜேர்மனிய வாழ்க்கை போதுமென நினைத்துக் கொண்டேன்.

அந்த நேரம் எனது மகன் என்ன செய்தான் தெரியுமா..?

அவர்கள் மெனக்கெட்டு பக்குவமாகத் தயாரித்த பிற்சாவின்(Pizza) மேலே இருந்த எல்லாவற்றையும் ஒரேயடியாக கோப்பைக்குள் வழித்துக் கொட்டி விட்டு கீழேயுள்ள ரொட்டித் துண்டைச் சாப்பிடத் தொடங்கினான்.

´அட இவனுக்கு எப்படி இப்படியொரு மூளை வந்தது!' வியந்தேன்.

மற்றைய மூன்று பிற்சாக்களிலும் இருந்த எல்லாவற்றையும் என் கண்ணீரோடு சேர்த்து வழித்துக் கொட்டி விட்டு ஒன்றுமில்லாத வெறும் ரொட்டியை மற்றப் பிள்ளைகளுக்கும் கொடுத்துச் சாப்பிடத் தொடங்கினேன்.

-1999

யுகமாயினி (October 2008)

கரண்டி

'அக்கா,அக்கா...'

மெல்லிய, இனிய அந்தக் குரல் மணிமேகலையினுடை யதுதான். நான் அவசரமாய் எழுந்து எனது அறை மேசையில் ஆயத்தமாக எடுத்து வைத்திருந்த நீள் சதுரத் தட்டை (Tray) எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

என்னவனும் குழந்தைகளும் இன்னும் கட்டில் களிலேயே. மணிமேகலை வரமுன் ஆயத்தமாகி விட வேண்டுமென்பதால் நான் அரைமணி முன்பதாகவே எழுந்து எமது அறையிலிருந்து எட்டு அறைகள் தள்ளி யிருக்கும் குளியலறைக்குச் சென்று பல்துலக்கி முகம் கழுவி வந்து விட்டேன். அதிகாலையில் வெறிச்சோடிக் கிடக்கும் ஐந்தாவது மாடியின் அந்த நீண்ட கொரிடோ ரில் தனியாக நடந்து போய் வரும் போது சற்றுப் பயமாகத்தான் இருக்கும். குளியலறை இன்னும் அதீத பயத்தைத் தரும்.

அதற்குள்ளே ஒரே நேரத்தில் ஆறுபேர் குளிக்கக் கூடியதாக ஆறு சவர்களும் 12 பேர் முகம் கழுவக் கூடிய தாக 12 சிங்குகளும் உள்ளன. அந்தப் பெரிய குளிய லறையில் அந்த அதிகாலையில் நான் மட்டும் நின்று முகம் கழுவும்போது ஏதோ ஒரு அசாதாரணத்தில் உடல் சில்லிடும். மூச்சைப் பிடித்துக் கொண்டு அவசரமாய் முகத்தைக் கழுவிக்கொண்டு ஓடி வந்து விடுவேன்.

அது மேமாதம். வசந்தகாலம். ஆனாலும் எனக்குக் குளிர்ந்தது. என்னவனும் என் குழந்தைகளும் என்னருகி லேயே இருந்தாலும் மனசு அமைதி கொள்ள மறுத்து அலைந்து கொண்டிருந்தது. என்னைப் பெற்றவர்கள், எனது உடன்பிறப்புகள் அத்தனை பேரையும் விட்டிட்டு வந்து கிட்டத்தட்ட இரண்டுவாரங்கள் ஓடிவிட்டிருந்தன. அகதி அந்தஸ்து இன்னும் தரப்படா விட்டாலும் நான் இப்போது ஐரோப்பிய அகதி.

ஜேர்மனியின் ஸ்வல்பாஹ்நகரில் அழகாக வீற்றி ருக்கும் அந்தப் பெரிய அகதிமுகாம் முன்னர் ஒரு அரண் மனையாக இருந்திருக்க வேண்டும். பென்னாம் பெரிய வளாகத்தில், காவல் அரண்களும் பல அடுக்குமாடிகளும் சுற்றி வளையும் பாதுகாப்புப் பாதைகளும் மேடைகளும் என்று பரந்து விரிந்திருந்த அந்தக் கோட்டை அப்போது பல் வேறு நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற பல அகதிகளால் நிறைந்திருந்தது. அவர்களுள் குழந்தைகளும் பெரியவர்களுமாக ஐம்பதுக்கும்மேற்பட்ட ஈழத்தவர்களும் இருந்தார்கள். அகதிகளுக்கு உதவுவதற்கு என்றே சமூகநல உதவிகளில் அக்கறையுள்ளவர்கள் பலர் சிரித்தமுகங்களோடும் கனிவானபார்வைகளோடும் அங்கு திரிந்தார்கள். அலுவலகஅறைகளில் அமர்ந்திருந்து உதவினார்கள். தெரியாத பாஷையில் தடுமாறும் ஒவ் வொருவரோடும் சைகைகளாலும் வார்த்தைகளாலும் பிரயத்தனங்கள் செய்து பரிவோடு பேசினார்கள்.

இத்தனை பேரில் யாரேனும் ஒருவரேனும் அந்த அதிகாலையில் பல் துலக்குவதற்காகவோ அன்றில் குளிப் பதற்காகவோ அந்தக் குளியலறைப் பக்கம் வருவதை நான் காண்பதில்லை. இலங்கையர்கள் எமக்கு காலை எழுந்ததும் பல் துலக்கி, முகம் கழுவுவதுதான் முதல் வேலையாக இருக்கும். ஐரோப்பியருக்கோ அன்றில் அங்கு அகதிகளாக வந்தேறியவர்களுக்கோ அதிகாலைப் பல் துலக்கல் என்பது அர்த்தமற்ற விடயம் போன்றது. காலை உணவுக்குப் பின்னரே அவர்கள் பல் துலக்கு வார்கள். சிலர் அப்போது கூட இல்லை. சூயிங்கத்தை மென்றுமென்றே பல் துலக்காமல் தவிர்ப்பார்கள்.

மணிமேகலை புகைப்படத்தில் மட்டுமே பார்த்த ஆடவன் ஒருவனைக் கணவனாக்கிக் கொள்ளும் எதிர் பார்ப்புடன் ஜேர்மனிக்கு வந்திருக்கிறாள். ஒன்றரை வருடப் பிரிவுக்குப் பின் எனது கணவரைச் சந்திக்க இருந்த எனது எதிர்பார்ப்புகளுக்கும் என்றைக்குமே காணாத ஒருவனை மணாளனாக்கப் போகும் அவளது எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் கண்டிப்பாக நிறைய வித்தியாசங்கள் இருந்திருக்கும். ஆனாலும் அவளுக்கும்

எனக்கும் இடையில் எப்படியோ ஒருவித இனிமையான நட்பு உருவாகியிருந்தது. அவள் அவளுக்கு கணவனாகப் போபவனின் அக்கா சாம்பவியோடுதான் பயணித்திருந் தாள். சாம்பவி அதிகம் கதைக்க மாட்டாள். அவளது கணவனும் எனது கணவரைப் போலவே ஜேர்மனிக்கு வந்து ஒன்றரை வருடங்கள் ஆகி விட்டிருந்தன.

நானும் மணிமேகலையும் ஆளுக்கொரு தட்டோடு ஐந்தாவது மாடியிலுள்ள அந்தக் கொரிடோரில் நடந்து, மூன்று அறைகள் தள்ளியுள்ள ராசாத்தியின் அறைக் கதவைத் தட்டினோம். அவளும் ஏற்கெனவே ஆயத்த மாகி இருந்து தட்டோடு வெளியில் வந்தாள். அவளுக்கு ஒரு குழந்தை. அவளது கணவருக்கும் எனது கணவரைப் போலவே அங்கு வர அனுமதியில்லை. ஆனாலும் வந்தி ருந்தார்.

இன்னும் சில அறைகளையும் கீழிறங்கும் மாடிப்படி களையும்தாண்டி ஜெயந்தியின் அறையைத் தட்டினோம். ஜெயந்தி தட்டுடன் ஓடி வந்தாள். அவள் கணவனுடன் சேர்ந்தே ஜேர்மனிக்கு வந்திருக்கிறாள். திருமணமாகி சில மாதங்கள்தான் ஓடியிருக்கின்றனவாம். கொஞ்சம் ஹனி மூன் மூட்டில்தான் அவள் எப்போதுமிருந்தாள். என்னை விட ஒரு மாதம் முதலே அவள் அந்த அகதி முகாமுக்கு வந்துவிட்டாள். குறிப்பிட்ட ஒரு நகரைத் தமக்குத் தரும் படி அவளும் கணவனும் கேட்டிருந்ததால் இன்னும் அனுப்பப்படாமல் அங்கேயே இருந்தார்கள்.

பலபடிகள் ஏறி இறங்கி கன்ரீனுக்குப் போய்ச் சேர் வதற்கிடையில் மணிமேகலையும் ராசாத்தியும் நானும் நிறையவே கதைத்து, வயிறு குலுங்கச் சிரித்து சோகங்க ளைத் தற்காலிகமாக மறந்திருந்தோம்.

கன்ரீனில் கரண்டிகளினதும் கத்திகளினதும் கோப் பைகளினதும் சத்தங்களையும் மீறிய பல மொழிகள் கலந்த கசமுசாச் சத்தம். அனேகமான வேற்றுநாட்டவர் கள் சாப்பாடுகளை வாங்கி அங்கேயே இருந்து சாப் பிட்டு விட்டுச் செல்வார்கள். இலங்கையர் நாம் அப்படி

யல்ல. நீண்ட வரிசையில் காத்திருந்தோம். எங்களுக்கு முன்னால் சாந்தியின் கணவர் நின்றார். சாந்தியும் புகைப்பட நாயகனைத் தேடிவந்தவள்தான். வந்து ஒரு மாதத்துக்குள் கர்ப்பமாகி விட்டதால் மிகவும் சங்கடப் பட்டுக் கொண்டிருந்தாள். அவள் எங்களைப் போல கன்ரீனுக்கு வருவதில்லை. கணவர்தான் வந்து எடுத்துப் போவார்.

பிராங்பேர்ட் விமான நிலையத்தில் வைத்தே பாஸ் ஒன்று எங்களுக்குத் தந்திருந்தார்கள். ஒரு பாஸ் போர்ட்டின் அளவில் இரண்டாக மடித்த பழுப்புநிறமான அந்தப் பேப்பர்தான் எமக்கு அப்போது எல்லாமுமாக இருந்தது. சாப்பாட்டுத் தட்டை நீட்டும் போது அதையும் கொடுக்க வேண்டும். அதில்தான் எனக்கு எத்தனை பிள்ளைகள் என்ற விபரம் உள்ளது. அதற்கேற்பதான் சாப்பாடு, உடைகள்... என்று எல்லாச் சலுகைகளும் வழங்கப்படும்.

எனது முறை வந்த போது தட்டோடு அந்தப் பாஸையும் கொடுக்க, எனக்கும் மூன்று பிள்ளைகளுக்கு மாக நான்கு பணிஸ்கள், நான்கு சிறிய பட்டர் துண்டுகள், நான்கு சிறிய ஜாம் பக்கற்றுகள், நான்கு சிறிய சீஸ் பக்கற்றுகள், நான்கு அப்பிள்கள், நான்கு தேநீருடனான கோப்பைகள் என்று வைத்துத் தட்டைத் திருப்பித் தந்தார்கள். மணிமேகலை, தனதும் சாம்பவி யினதும் பாஸைக் கொடுத்ததால் அவளுக்கு எல்லாவற் றிலும் இரண்டு. ராசாத்திக்கு குழந்தை சிறிதென்பதால் எல்லாவற்றிலும் ஒன்று கொடுத்து குழந்தைக்குப் பாலும் கொடுத்தார்கள். திரும்பும்போது தேநீர் தளம்பி ஊற்றுப் பட்டுவிடாமல் மிகுந்த அவதானமாகத் தட்டுகளை ஏந்திக் கொண்டு திரும்பினோம்.

எனது அறைக்குள் நான் நுழைந்த போது பிள்ளை களும் கணவரும் சாப்பிடுவதற்கு ஆயத்தமாக இருந்தார் கள். நான்கு பேருக்கான உணவுகளையும் பழங்களையும் ஐந்து பேருமாகப் பகிர்ந்துண்டோம். மதியத்துக்கும் மீண் டும் தட்டுடன் போகவேண்டும். மதியஉணவை எம்மால்

சாப்பிட முடிவதில்லை. உறைப்பு, புளிப்பு.. என்று எது வுமே இல்லாத அந்த உணவால் இந்த இரண்டு கிழமை களிலும் பல தடவைகள் மனமும் கண்களும் கலங்கி விட்டன. ஆனாலும் கூடவே கிடைக்கும் பழங்களுக்காக அந்தச் சாப்பாடுகளை வாங்கி வந்து அரையும் குறையு மாகச் சாப்பிட்டு விட்டு எறிவோம்.

பிள்ளைகளும் நானும் சாப்பிட முடியாமல் படும் அவஸ்தையைப் பார்த்து விட்டு எனது கணவர் அங் குள்ள இன்னும் சில ஆண்களுடன் சிலமைல்கள் நடந்து சென்று ஒரு மின்சார ஒற்றை அடுப்பும் தூளும் வாங்கி வந்தார்.

அது பச்சைத் தூள். ஊரில் போடுவது போல சரக்குகள் எதுவும் போடப்படாத, வறுக்கப்படாத மிள காய்த்தூள். ராசாத்தியின் கணவரும் ஒரு ஒற்றை அடுப் பும் பிட்டுஅவிப்பதற்கேற்ற கண்ணுள்ள சட்டியொன்றும் வாங்கி வந்தார்.

அதன் பின் மதியம் கிடைக்கும் அவித்த அல்லது அரைப்பதமாகப் பொரித்த பெரிய இறைச்சித் துண்டு களை தூள்போட்டு, தேங்காய்பால் இல்லாமல் மீண்டும் ஒரு முறையாகச் சமைத்தோம். சமையல் முடிந்த கையோடு மின்சார அடுப்பை கட்டிலுக்குக் கீழ் ஒழித்து வைத்தோம். சமைப்பதுதெரிந்தால் அடுப்பையே தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள். இரவில் ராசாத்தி எப்ப டியோ தேங்காய்ப் பூ போடாத பிட்டு அவித்து, எங்க ளுக்கும் கொண்டு வந்து தந்தாள்.

அடிக்கடி கரண்டி தேவைப்படும் போது மணி மேகலை தனது அறையிலிருந்து ஒரு எவர்சில்வர் தேக் கரண்டி கொண்டுவந்து தருவாள். பின்னர்தான் தெரிந் தது அது சாம்பவியின் கரண்டி என்பது.

ஐந்தாவதுகிழமை, இன்னும் ஒருவாரத்தில் எம்மை வேறு ஒரு முகாமுக்கு அனுப்பப் போவதாக அறிவித்தார் கள்.

"போகும்போது கரண்டியை மறக்காமல் தந்திடுங் கோ" என்று சாம்பவி இரண்டு மூன்று தடவைகளாக ஞாபகப் படுத்தினாள்.

ஆறாவது கிழமையில் நாங்கள் அத்தனை பேரும் வெவ்வேறு முகாம்களுக்கு அனுப்பப் பட்டோம். மணி மேகலை அவளது கணவன் இருக்கும் நகரத்தை ஒட்டிய முகாமுக்கு. அதே போல ராசாத்தி அவளது கணவன் இருக்கும் நகரத்தை ஒட்டிய முகாமுக்கு. சாந்தி இன்னு மொரு இடத்துக்கு. நானும் பிள்ளைகளும் கார்ள்ஸ் றூகே *(Karlsruhe)* முகாமுக்கு.

எனது கணவருக்கு எமக்கான பேரூந்தில் வர அனுமதி இல்லை. அதற்குப் பொறுப்பாக இருந்த பெண் பல தடவைகள் எண்ணிப் பார்த்து ஒரு ஆள் கூடவாக இருக்கிறதே என்று குழம்பி பின் நிலைமையைப் புரிந்த வளாய் கண்டும் காணாதவள்போல் எம்மோடு பயணிக்க விட்டாள். ஆனாலும் கார்ள்ஸ்றூகே முகாமில் எனது கணவர் தங்குவதற்கு அவர்கள் அனுமதி தரவில்லை. இரண்டு கிழமைகளை பல்லைக் கடித்துக் கொண்டு அங்கே கழித்து விட்டு எனது கணவர் ஏற்கெனவே வாழும் ஸ்வெபிஸ் ஹால் நகரில் எமக்கெனத் தந்த வீட் டுக்கு நாம் வந்து சேர்ந்தோம்.

மெது மெதுவாக அந்த வீட்டோடு பழகுவதற்குப் பிரயத்தனம் பண்ணிக் கொண்டு முகாம்களில் இருந்து கொண்டு வந்த பொருட்களை அடுக்கும் போதுதான் மீண்டும் அந்தக் கரண்டி என் கண்களில் தென்பட்டது.

சாம்பவி அத்தனை சொல்லியும் நான் அந்தக் கரண்டியை என்னோடு கொண்டு வந்து விட்டேன். மிகுந்த சங்கடமான உணர்வு எனக்குள். அதை எடுத்துப் பத்திரப் படுத்தி வைத்தேன். எப்படியாவது சாம்பவியின் முகவரியைக் கண்டுபிடித்து அந்தக் கரண்டியை அனுப்பி விட வேண்டும் என்பதே என் எண்ணம்.

'ஜேர்மனியிலை உந்தக் கரண்டி ஒண்டும் பெரிய

விசயமில்லை. உதுக்காக வீணாக் கவலைப் படாதை" என்று எனது கணவர் சில தடவைகள் சொல்லியும் என்னால் அந்தக் குற்ற உணர்வில் இருந்து மீள முடியவில்லை. 'அந்தக் கரண்டியை அவள் ஊரில் இருந்து கொண்டு வந்திருக்கவேண்டும். ஒரு நினைவுச்சின்னமாக வைத்திருக்க விரும்பியிருக்கிறாள்' என்பதே என் எண்ணமாக இருந்தது.

என்னோடு முகாமிலிருந்தவர்களின் முகவரிகளைக் கண்டுபிடிக்க சிலமுயற்சிகளும் செய்துபார்த்துத் தோற்று விட்டேன். மொழி பிரச்சனையாக இருந்ததால் நினைத்தவைகளைச் செயற்படுத்தவும் முடியாதிருந்தது. வருடங்கள் பல ஓடின. ஆனால் அவர்களில் யாரது தொடர்பும் எனக்குக் கிடைக்கவில்லை.

ஒரு முறை வீடு மாறும் போது, பொருட்களை அடுக்கும் போது மீண்டும் அந்தக் கரண்டி என் கரங்களில் தவழ்ந்தது. அப்போதுதான் கவனித்தேன். அந்தக் கரண்டியில் Lufthansa என எழுதப் பட்டிருந்தது.

சாம்பவியும் மணிமேகலையும் Lufthansa விமானத்தில்தான் ஜேர்மனியை நோக்கிப் பயணித்ததாக மணிமேகலை சொன்னது ஞாபகத்தில் வந்தது.

இப்போது அந்தக் கரண்டி எனது சமையலறை லாச்சிக்குள் இருக்கிறது. எப்போது லாச்சியைத் திறந்தாலும் நினைவுகள் சிட்டுக்குருவியாய் அந்த முகாமுக்குப் பறந்து விடுகின்றன.

-30.9.2008

யுகமாயினி (நவம்பர் 2008)

அழைப்புமணி

நடுநிசியில் விழிப்பு வந்ததற்கான காரணம் சட்டென்று புரியவில்லை. நெஞ்சு படபடத்தது. உடல் பயத்தில் வெலவெலத்தது. யாராவது அழைப்புமணியை அழுத்தியிருப்பார்களோ?

பிரமையா, கனவா புரியவில்லை. குழப்பமாக இருந்தது. சிந்தனைகளின் மீது அறைவது போல மீண்டும் அழைப்புமணி. இப்போது அது கனவோ பிரமையோ அல்ல என்பது உறுதியாயிற்று. தூக்கம் முற்றாகக் கலைந்து நெஞ்சு இன்னும் அதிகமாகப் படபடத்தது. அசையவே பயமாக இருந்தது.

என் கணவர் என் அருகில்தான் படுத்திருந்தார். ஆனால் அவரும் அசைவற்றுக் கிடப்பது போலவே உணர்ந்தேன். தலையைத் திருப்பாமலே 'சத்தம் கேட்டதா?' என்றேன். 'ம்..' என்ற அவர் பதிலிலும் குழப்பம்.

வெறும் அழைப்புமணிக்கு இத்தனை குழப்பமேன்? என்ற கேள்வி உங்கள் ஒவ்வொருவரிடமும் எழலாம். அது அர்த்தஜாமம் என்பதையும்விட, நாம் ஜேர்மனிக்குப் புலம் பெயர்ந்து ஓரிரு வருடங்கள்தான் ஓடியிருந்தன.

ஓடியிருந்தன என்று சொல்வதை விட நகர்ந்திருந்தன என்று சொல்வதே சாலப் பொருந்தும். அந்த ஓரிரு வருடங்களிலும் நாம் சில மாதங்களை அகதி முகாம்களில் கழித்துவிட்டு, அந்த வீட்டுக்கு வந்து ஒரு வருடம்தான் ஆகியிருந்தது. ஜேர்மனியோடு ஒட்டவும் முடியாமல், விட்டிட்டு போர்சூழ்ந்த எமது நாட்டுக்கு ஓடவும் முடியாமல் அந்தரித்துக் கொண்டிருந்த 1987ம் ஆண்டுக் காலப் பகுதியின் ஒரு மாதம் அது.

அப்போதெல்லாம் குளிர் மூக்கு நுனியில் கொடுவாளாய் குந்தியிருக்கும். நாக்கு உறைப்புக்கும் புளிப்புக்குமாய் அந்தரிக்கும். கனவுகளிலும் நினைவுகளிலும் அம்மா

வும் அப்பாவும் சகோதரர்களும் நடமாடிக் கொண்டே இருப்பார்கள். ஊர்வீடும் வீதிகளும் மூளையின் ஏதோ ஒரு பகுதியில் வளைந்து, நெளிந்து கொண்டிருக்கும். இரவுகளின் விழிப்புகளில் தவிர்க்க முடியாததாய் துயர் படிந்திருக்கும். ஜேர்மனியின் எங்காவதொரு பகுதியில் யாரோ ஒரு வெளிநாட்டவரின் வீடு நாசிகளால் எரிக் கப்பட்டு விட்டது என்ற செய்தியோ அன்றி ஒரு வெளி நாட்டவர் நாசிகளால் நையப்புடைக்கப் பட்டு விட்டார் என்ற செய்தியோ இடையிடையே வந்து கிலிகொள்ள வைக்கும். பாதி இரவில் விழித்திருந்து ஊரில் வாழும் உறவுகளுக்காய் அழுவது அன்றாடநிகழ்வுகளில் ஒன்றாக இருக்கும்.

அன்றைய அர்த்தஜாம அழைப்புமணி இவைகளி லிருந்து சற்று வித்தியாசமானது. எமது அட்டவணைக் குள் அடங்காதது.

கனவா, பிரமையா எனச் சிந்திக்க வைத்த அழைப்புமணி நிமிடங்கள் கரையக் கரைய அடிக்கடி அழைத்து சிந்தனையையே மழுங்கடித்தது.

அந்த வாரத்தில் ஜேர்மனியில் மன்கைம் நகரை ஒட்டிய ஒரு கிராமத்தில் அகதிகள் அதிகமாகவாழும் ஒரு தொடர்மாடிக் கட்டிடத்தில் இலங்கைத் தமிழர் வாழும் பகுதிக்குள் நெருப்புக்குண்டு எறியப் பட்டு கணவன், மனைவி, மூன்று குழந்தைகள் என ஐவர் கொல்லப் பட்ட செய்தி எம்மையெல்லாம் கலக்கியிருந்தது.

நாம் வாழும் நகரம் மன்கைம் போன்று நாசிகள் வாழும் இடமல்ல. பழமைகளைப் போற்றிப் பாதுகாக்கும் ஒரு அமைதியான, அழகான நகரம். மாடிக்கு இருகுடும் பங்களாக ஆறுகுடும்பங்கள் வாழும் மூன்றுமாடிக் கட்டி டத்தில் இரண்டாவது மாடியில் எங்கள் குடியிருப்பு.

ஐந்து அறைகள்கொண்ட விசாலமானவீடு. ஊர் வீடுகள்போல விசாலமாக இல்லாது விட்டாலும் அகதி யாகத் தஞ்சம் கோரிய எங்களுக்கு வசதியாக அமைந்த

வீடே அது. ஐந்து ஜேர்மனியக்குடும்பங்களுக்கு நடுவில் நாம் ஒரு வெளிநாட்டவர். எமது நகரில் ஒன்றும் ஆகிவிடாது என்ற நம்பிக்கை இருந்தாலும் உயிர் காக்க ஓடி வந்து இன்னொரு நாட்டில் எரிந்து கருகி உயிரைக் கொடுத்தது எமது இலங்கைத்தமிழர்கள் என்ற செய்தி யில் நாமும் தடுமாறிப் போய்த்தான் இருந்தோம்.

இந்த நிலையில் நடுநிசியில் அழைப்புமணி கேட் டதும் ஓடிப்போய் கதவைத் திறக்கும் தைரியம் எனக்குத் துப்பரவாக இல்லை. எனது கணவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. என்ன நடக்கிறது பார்ப்போம் என இருவரும் அசையாது படுத்திருந்தோம்.

இப்போது எமது கதவில் பலமாக உதையும் அல் லது இடிக்கும் சத்தம் கேட்டது. முதலில் அழைப்பு மணி கீழே வீட்டுக்கு வெளியிலிருந்து அழுத்துவதால் வரு கிறதா அல்லது எங்கள் இரண்டாவது மாடிக்கே வந்து அழுத்தப்படுகிறதா என்பது தெரியாதிருந்தது. இப்போது திடமாகத் தெரிந்தது. ஒருவரோ அன்றிப் பலரோ இரண் டாவது மாடியில் உள்ள எமது வீட்டு வாசலில் நின்று கதவை இடிக்கிறார்கள் என்பது.

எனதுகற்பனைகள் இப்போது விரியத்தொடங்கி தலைக்குள் குருதி வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. கத்திகள், கோடரிகளுடன் வந்திருப்பார்களோ? கதவை இடித்துத் திறந்து வந்து எம்மை வெட்டுவார்களோ? கொட்டன்களால் அடிப்பார்களோ? நடுங்காத குறை. வீட்டுக்குள் பிள்ளைகள் மூவரினதும் நித்திரை மூச்சுக் களும் சுவர்க்கடிகாரத்தின் டிக், டிக் ஓசையும் தெளிவா கக் கேட்டன. என்ன செய்வதென்று தெரியாத அந்தப் பதட்டமான நிலையில் "பொலிசுக்குப் போன் பண்ணு வோம்" என நான்தான் எனது கணவருக்கு ஐடியாக் கொடுத்தேன்.

இப்போது கதவின் மீது இடைவிடாது இடி விழுந்துகொண்டேயிருந்தது. யாரோ உதைவது போன்ற சத்தமே அது. எனதுகணவர் ´கதவைத்திறக்கலாம்´ என்ற

முடிவுக்கு வந்து விட்டார் போலத் தெரிந்தது. நான் தடுத்து விட்டேன். எல்லாம் சைகைகளாலேயே. எமது கதை வெளியில் நிற்பவர்களின் காதுகளில் வீழ்ந்து விடக்கூடாது என்பதில் மிகுந்த கவனமாக இருந்தேன்.

வாசற்கதவுக்குப் பக்கத்தில் கொறிடோரில்தான் தொலைபேசி இருக்கிறது. இப்போது போல கைகளில் கொண்டு திரியக் கூடிய தொலைபேசியோ அல்லது மொபைலோ அப்போது ஜேர்மனியின் சாதாரண வீடு களில் இருக்கவில்லை. சுழற்றி அடிக்கும் தொலைபேசி மட்டுமே இருந்தது. வாசற்கதவிலிருந்து கொறிடோரின் இடதுபக்கம் வரவேற்பறை. அதைத் தொடர்ந்து மகளின் அறை. வலது பக்கம் சமையலறை. தொடர்ந்து மூத்தவ னதும் சின்னவனதும் அறைகள். கடைசிதான் எமது படுக்கையறை. வெளியில் நிற்பவர்கள் கதவை உடைத் தால் முதலில் எமது பிள்ளைகளின் அறைகளுக்குள் புகுந்து விடுவார்கள் என்ற எண்ணம் என் மூளையில் உறைத்துக் கொண்டிருந்தது. அதனால் நானும் கணவரு மாக மெதுமெதுவாகத் தொலைபேசியை நோக்கி நடந் தோம். கதவின் மீதான உதை நெஞ்சின் மீது விழுவது போன்ற உணர்வு. பயத்தில் கால்கள் பின்னின.

ஒருவாறு தொலைபேசியைச் சுழற்றி பொலிசுக்கு விடயத்தைச் சொல்லத் தொடங்கிய போது நாக்குழறி யது. ஜேர்மனிக்கு வந்து சிலவருடங்கள்தான் என்பதால் எனது மொழியறிவும் அந்த மாதிரித்தான் இருந்தது. ஒரு வாறு தட்டித்தடவிச் சொல்லிமுடிப்பதற்குள் பல தடவை கள் கதவு இடிக்கப்பட்டு விட்டது. சத்தம் பொலிசுக்கும் தொலைபேசி வழியே கேட்டதால் „எக்காரணம் கொண் டும் கதவைத் திறக்கவேண்டாம். நாங்கள் உடனே வருகி றோம்' என்று சொல்லி தொலைபேசியை வைத்தார்கள்.

அவர்கள் வந்து சேர்வதற்கு எடுத்த அந்தச் சில நிமிட நேரங்களுக்குள் எங்கள் வீட்டுக்கதவு உடைக்கப் பட்டுவிட்டது. ஒரு மல்லன் போன்ற தோற்றம்கொண்ட ஜேர்மனியன் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்தான். எனக்கு சப்தநாடிகளும் அடங்கி ஒடுங்கின.

வந்தவன் "ஏன் நீ இங்கே வந்தாய்? இது எனது இடம்" என்று சொல்லி, கோபமாகத் திட்டியபடி நேரே என் கணவரை நோக்கி விரைந்து கையை ஓங்கினான்.

எனது கணவர் சற்றுத் தாமதித்திருந்தாலும் அவனது உரத்த பெரிய கைகள் என் கணவரைப் பலமாகத் தாக்கியிருக்கும். அந்தக் கணத்தில் நான் என் உறைவு நிலையிலிருந்து விழித்து அலறிவிட்டேன். அவன் வெளி நாட்டவரை வெறுக்கும் நாசிதான் என்பது எனக்குள் உறுதியாயிற்று.

எனது கணவருக்கு அத்தனை பலம் எங்கிருந்து வந்தது என்று எனக்குத் தெரியாது. சடாரென்று அவனது இரு கைகளையும் பின் பக்கமாக மடக்கிப் பிடித்து ஏதோ ஒருவித பூட்டுப் போட்டார். அவனை அசைய விடாது அப்படியே நிலத்தில் வீழ்த்தி, அமத்திப்பிடித்தார். ஊரிலே சாண்டோமாஸ்டரிடம் அவர் மல்யுத்தம் பழகியிருந்ததும் எனது தம்பிமாருடன் விளையாட்டுக்கு பூட்டுப்போட்டு கழட்டச் சொல்வதும் அப்போதுதான் என் ஞாபகத்தில் வந்தன. எனக்கு இன்னும் நெஞ்சின் படபடப்பு அடங்கவில்லையாயினும் ஒருவித நிம்மதி பிறந்தது. பொலிஸ் வரும் வரை தாக்குப் பிடித்து விடுவோம் என்ற நம்பிக்கையும் கூடவே வந்தது.

என் கணவரை விட உயரத்திலும் சரி, பருமனிலும் சரி பெரியவனாகத் தோற்றமளித்த அவன் அந்தப் பூட்டிலிருந்து விடுபட முடியாத நிலையில் கத்திக் கொண்டிருந்தான். எங்களைப் பலமாகத் திட்டினான். "ஏன், இங்கே வந்தீர்கள்?" என்று அடிக்கடி கேட்டான்.

இந்த அமளியில் எனது மகளும் சின்னவனும் தூக்கம் கலைந்து எழுந்து வந்து விட்டார்கள். எனது அலறல்தான் அவர்களை எழுப்பியிருக்க வேண்டும். மூத்தவன் இன்னும் ஆழ்ந்த உறக்கத்திலேயே.

நான் அவனது அறைக்குச் சென்று, அவனைத் தட்டி எழுப்பி "வீட்டிலை என்ன நடக்குதெண்டு தெரி

யுமோ! எழும்பி வா" என்றேன்.

எழும்பி வந்தவன் நிலைமையைப் புரிந்தவனாய் ஓடிச்சென்று தும்புத்தடியை எடுத்துவந்து, விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல, அந்த ஜேர்மனியனின் பின் புயத்தில் இரு அடி கொடுத்து "ஏன் எங்கடை வீட்டை வந்தனி?" என்று உரத்துக் கேட்டான். அவன் அடித்த அடியில் தும்புத்தடி இரண்டாக முறிந்து விட்டது.

இதற்குள் பொலிஸ்காரர்கள் இருவர் வந்து விட எனது கணவர் தான்போட்ட பூட்டைத்தளர்த்தி அவனை விடுவித்தார். ஒரு பொலிஸ் அவனிடம் ஓரிரு கேள்வி கள் கேட்டு விட்டு அவனை வெளியில் அழைத்துச் செல்ல மற்றைய பொலிஸ் எம்மிடம் நடந்தவைகளைக் கேட்டு, எழுதி, கையெழுத்தையும் வாங்கிக் கொண்டு வெளியில் சென்றான்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள் கழித்து மீண்டும் இரு பொலிசுமாக வந்து அசௌகரியங்களுக்கு வருந்துவ தாகச் சொல்லி "நாளை காலையில் ஆட்களை அனுப்பு கிறோம். வந்து கதவைத் திருத்தித்தருவார்கள்" என்றும் சொல்லிச் சென்றார்கள்.

எல்லாம் ஓய்ந்தது போல இருந்தாலும் எம்மால் உள்ளார ஓய முடியவில்லை. கதவு உடைந்திருப்பதால் வீட்டைப் பூட்ட முடியாதிருந்தது. யாராவது மீண்டும் வீட்டுக்குள் வந்து விடுவார்களோ என்ற பயத்தில் சின்னவனும் மகளும் தமது படுக்கைகளில் படுக்க மறுத்து எமது படுக்கையறைக்குள் புகுந்து விட்டார்கள்.

எவரும் சட்டென்று கதவைத் திறந்து வீட்டுக்குள் வந்து விட முடியாதபடி வீட்டிலுள்ள கதிரைகள், மேசை என்று எல்லாவற்றையும் கதவோடு அண்டி வைத்தாலும் என்னாலும் கணவராலும் கூட அதற்கு மேல் நிம்மதி யாகத் தூங்க முடியவில்லை.

விடியுது விடிய முன்னமே எமதுவீட்டு வாசலில்

இரு தச்சர்கள் வந்து நின்றார்கள். கதவை அழகாகத் திருத்தி விட்டு எம்மிடம் கையெழுத்து மட்டும் வாங்கிச் சென்றார்கள். அதற்கான கட்டணத்தை உடைத்தவனே கட்ட வேண்டும் என்றார்கள்.

இரவின் தாக்கம் எமது அடுத்தநாள் காலையை யும் அசாதாரணமாக்கியிருந்தது. ´தொடர்ந்து ஜேர்மனி யில் வாழ முடியுமா´ என்ற குழப்பம் நிறைந்த கேள்வி எங்களுக்குள். அன்று சனிக்கிழமை என்பதால் பிள்ளைக ளும் வீட்டில்தான் நின்றார்கள்.

ஒரு பதினொரு மணியளவில் எமது வீட்டின் அழைப்பு மணி. நான்தான் ஓடிப்போய் சாத்தியிருந்த கதவைத் திறந்தேன். அவனேதான். இரவு எங்களைக் குழப்பிய அதே ஜேர்மனியன் வாசலில் நின்றான். நான் அதிர்ந்து போய் அலறுவதற்கிடையில் "பயப்படாதே. நான் மன்னிப்புக் கேட்கத்தான் வந்திருக்கிறேன்" என் றான்.

நான் கொஞ்சம் அமைதியாகினேன்.

"இரவு தந்த அசௌகரியத்துக்கு மன்னித்துக் கொள். நான் நேற்று ஒரு பார்ட்டியில் நிறையக் குடித் திருந்தேன். என்னசெய்கிறேன் என்றே எனக்குத் தெரிய வில்லை. அப்போதுதான் வெளியிலிருந்து வந்தேன். மாறித்தான் உனது வீட்டைத் தட்டினேன். உனக்கு மேலே மூன்றாவது மாடியில்தான் நான் எனது குடும்பத் துடன் வசிக்கிறேன். குடி போதையில் மூன்றாவது மாடிக்குப் பதிலாக இரண்டாவது மாடியிலுள்ள உனது வீட்டுக்குள் நுழைந்து விட்டேன். மன்னித்துக் கொள்" என்றான்.

-12.6.2008

யுகமாயினி (July 2008)

ஒரு சனிக்கிழமை

கோடை அவரசரமாக ஓடிவிட்டது போலிருந்தது. குளிர் நகரமெங்கும் பரவிக் கிடந்தது. மரங்கள் இலைகளை உதிர்த்துக் கொண்டிருந்தன. மனிதர்கள் வழமை போலவே நடமாடிக் கொண்டிருந்தார்கள். கனடாவின் தேசியச் சின்னம் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த மேப்பிள் இலைகள் குவியல் குவியலாய் வீதியோரங்களில் ஒதுங்கியும் சப்பாத்துக் கால்களுக்குள் மிதிபட்டும் காற்றோடு அலைந்து கொண்டும் திரிந்தன.

நானும் கணவரும் அன்றைய சனிக்கிழமை வழமைக்கு மாறாக எனது பகுதிநேர வேலைகளில் ஒன்றின் அதிகாரியான திருமதி சீக்கிளர் வீட்டை நோக்கிப் பயணித்தோம்.

திருமதி.சீக்கிளர் என்னிடம் ஒருஉதவி கேட்டிருந்தாள். எனது கணவர் அவளது கணவருக்கு கணினியில் ஒரு டிஷைன் போட்டுக் கொடுக்க வேண்டும். எனது கணவர் வரைவதில் நிறைய ஆர்வம் உள்ளவரும் கணினியில் இந்த வழியில் நிறைய அறிந்து வைத்திருப்பவரும் என்பது அவளுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்ததாலேயே இந்த உதவியைக் கேட்டிருந்தாள்.

நாமும் மறுக்கவில்லை. ஜேர்மனியருக்கு இப்படியான உதவிகள் செய்வதில் தயக்கம் காட்டவேண்டிய அவசியம் பெரிதாக இல்லை. நேரம் இருக்கும் பட்சத்தில் செய்யலாம். உதவி செய்த நேரத்தையும் செய்த உதவியின் கனத்தையும் கணக்கிட்டு அதற்குரிய ஊதியத்தைத் தந்து விடுவது அவர்களது நல்ல பழக்கங்களில் ஒன்று.

எங்கள் வீட்டிலிருந்து எட்டுக் கிலோமீற்றர்கள் தூரத்தில் இருக்கும் அந்த வீட்டைக் கண்டு பிடிப்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. முதல்நாள் இரவே கணினியில் அந்த வீட்டு முகவரியைக் கொடுத்து பாதையைப்

பிறின்ற் பண்ணி எடுத்திருந்தோம்.

ஐந்து மாடிகளைக் கொண்ட அந்த வீடு நாம் வாழும் ஸ்வெபிஸ் ஹால் நகரையொட்டிய உன்ரர் முன்கைம் என்னும் சிறிய கிராமத்தில் அமைந்திருந்தது.

அந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் ஆஹோர்ன் (மேப்பிள்), பியர்க்கே (அரசு)... போன்ற பெரிய பெரிய விருட்சங்கள் இலைகளை உதிர்த்துக் கொண்டு நின்றன.

வீட்டின் வாசற்கதவில் அனேகமான எல்லா ஜேர்மனிய வீடுகளும்போலவே மேப்பிள் இலைகளோடு வேறும் சில குறிப்பிட்ட இலைகளும் வாடாமல்லிகை போன்ற பூக்களும் கலந்து செய்யப்பட்ட மலர்வளையம் தொங்கியது. எமது நாட்டில் பேயைக் கலைக்க வேப் பிலையைப் பயன்படுத்தியது போல ஜேர்மனியில் மேப் பிள் இலைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். வீட்டு வாசலில் மேப்பிள் இலைகள் தொங்கினால் பேய் வீட்டை நெருங்காதென்பது ஜேர்மனியர்களின் நெடுங் கால நம்பிக்கை. ஆனாலும் ஏன் அதைக் கொழுவு கிறோம் என்றே தெரியாமல் வெறுமனே அழகுக்காகக் கொழுவுபவர்கள்தான் அதிகமானோர்.

நாம் அழைப்புமணியை அழுத்த முன்னரே திரு வாளர். சீக்கிளர் கதவைத் திறந்து, கைகுலுக்கி எம்மை வரவேற்றார். நான் வேலை பார்க்கும் அலுவலகத்தில் ஓரிரு தடவைகள் அவரைச் சந்தித்திருக்கிறேன்.

ஜேர்மனிய மொழியில் பிரசுரமான புத்தகங்களில் நல்ல படைப்புகள் அடங்கிய புத்தகங்களைத் தேர்ந் தெடுத்து அவைகளை ஒலி வடிவத்துக்கு மாற்றுவதே அந்த அலுவலகத்தின் வேலை. ஆனால் அது திருமதி சீக் கிளருக்குச் சொந்தமான அலுவலகம். திருவாளர் சீக்கிளர் விளம்பர சம்பந்தமான இன்னொரு அலுவலகத்தை வேறிடத்தில் சொந்தமாக நடாத்துகிறார். கோர்ட், சூட்

அணிந்து அதிகாரி என்ற பிரதிபலிப்போடு மட்டுமே எனக்குத் தெரிந்த அவர், வீட்டிலே கட்டைக் காற் சட்டையுடன் ரீ சேர்ட் மட்டுமணிந்து மிகவும் சாதாரண மாகக் காட்சியளித்தார். சிரிப்பு மட்டும் எப்போதும் போல் அப்பாவித்தனமாக ஆனால் அழகாக இருந்தது.

வீடு வெப்பமூட்டப்பட்டு மிகுந்த கதகதப்பாக இருந்தது. வரவேற்பறை அமெரிக்க ஸ்ரைலில் சமைய லறைக்கும் சாப்பாட்டறைக்கும் விருந்தினர் அறைக்கும் இடைகளில் சுவர்களோ மறிப்புகளோ இல்லாமல் பெரி தாக அமைந்திருந்தது. தளபாடங்களிலும் மேசைவிரிப்பு களிலும் திரைச்சீலைகளிலும் அழகை விட அதிகமாகப் பணம் மிளிர்ந்தது. மெத்தென்ற பெரிய சோபாவில் அமர்ந்தபோது நேர்எதிரே இருந்த பிளாஸ்மா தொலைக் காட்சி எங்கள் ஊர் திரையரங்குகளை ஞாபகப் படுத் தியது. அவரும் எம்மோடு அமர்ந்து கதைக்கத் தொடங் கினார்.

„எங்கே திருமதி சீக்கிளர்?' கேட்டேன்.

„அவளுக்குக் கொஞ்சம் தலையிடி. சரியான அலுப்பு. இன்னும் படுக்கையில் இருக்கிறாள்" என்றவர் „உங்களுக்காக சைலோன்(சிலோன்) தேயிலை வாங்கி வைத்திருக்கிறேன். தேநீர் அருந்துகிறீர்களா?' என்று கேட்டார்.

„இல்லையில்லை. இப்போதுதான் காலையுணவை எடுத்தோம். திருமதி.சீக்கிளரும் எழுந்த பின் அருந்தலாம். இப்போது வேலையைத் தொடங்கலாம்' என்றோம்.

„நல்லது' என்ற படி எழுந்த அவர் சாப்பாட்டு மேசைக்கு 'லப்ரொப்'பைக் கொண்டு வந்தார். எனது கணவர் தனது வேலையைத் தொடங்கினார். நான் சோபாவில் அமர்ந்தபடியே புத்தகக்கூடைக்குள் அடுக்கப் பட்டிருந்த சஞ்சிகைகளில் இருந்து ஒரு ஜேர்மனியச் சஞ்சிகையை எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். மனம் சஞ்சிகையில் முழுவதுமாக லயிக்காமல் கவனங்கள்

சிதறிக் கொண்டேயிருந்தன.

திருவாளர் சீக்கிளர் கோப்பிக்கொட்டைகளை கோப்பி மெஷினுக்குள் கொட்டி உரிய பொத்தானை அழுத்தினார். கோப்பிக் கொட்டைகள் அரைபடும் சத்தத்தைத் தொடர்ந்து கோப்பி சிந்தத் தொடங்கியது. தண்ணீரைக் கொதிக்க வைத்து தேநீரும் தயாரித்தார். குளிர்சாதனப் பெட்டியில் இருந்து பட்டரை வெளியில் எடுத்தார். பாணை மெஷினில் மெல்லிய துண்டுகளாக வெட்டி பட்டரைப் பூசினார். ஒரு தட்டு (Tray) எடுத்து கோப்பிக் குவளை, தேநீர்க் குவளை, பாண் வைக்கப் பட்டிருந்த கோப்பை, குடிகோப்பை, சீனி, பால், கரண்டி எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு வரவேற்பறை வாசலோடு ஒட்டியிருந்த படிகளில்ஏறி மேலே கொண்டு சென்றார்.

மேலேதான் படுக்கையறை இருக்கிறது என்று முதலே சொல்லியிருந்தார். தனது மனைவிக்குத்தான் காலை உணவை எடுத்துச் செல்கிறார் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.

பல் துலக்காமலே கட்டிலில் அமர்ந்த படியே காலை உணவை உண்பது இவர்களின் வழக்கங்களில் ஒன்று. எம்மைப் போல முதலில் தேநீர் அருந்தி, பின்னர் காலை உணவு என்பது இவர்களிடம் இல்லை. தேநீர், கோப்பி, காலை உணவு எல்லாமே ஒன்றாகத் தான் நடக்கும்.

மேலே அவர்கள் மிகமிக மெதுவாகக் கதைதக்கும் சத்தம் கேட்டது.

மீண்டும் அவர் கீழே வந்து எம்மோடு சில கதை களும் வீட்டின் வேலைகளும் என்று செய்து கொண்டி ருந்தார். துடைத்தார். அடுக்கினார். குப்பை நிரம்பிய பையை எடுத்துச் சென்று வெளியிலிருக்கும் அதற்குரிய வாளிக்குள் போட்டு விட்டு வந்தார். பெரிய அதிகாரி என்ற தோரணையோ, தான் ஆணென்ற மிடுக்கோ இன்றி வீட்டு வேலைகளெல்லாம் தனக்கே உரியவை

என்பது போன்ற அவரது செயற்பாடு எனக்குள் வியப்பை ஏற்படுத்தியது.

இதையெல்லாம் எனது கணவரும் கவனிக்கிறார் என்பதில் எனக்குச் சந்தோசமாகக் கூட இருந்தது.

அரை மணித்தியாலத்தின் பின் மீண்டும் மேலே சென்ற திருவாளர். சீக்கிளர் தட்டை ஏந்தியபடி கீழே வந்தார்.

திருமதி சீக்கிளர் காலையுணவை முடித்திருந்தாள். கழுவவேண்டிய குவளைகளையும் கோப்பைகளையும் டிஸ்வோஷருக்குள் அடுக்கி விட்டு மீண்டும் „ஏதாவது குடிக்கிறீர்களா, சாப்பிடுகிறீர்களா?' என்றார் எம்மை நோக்கி.

இம்முறை 'ஏதாவது குடிக்கிறோம்' என்றோம். அப்பிள் ஜூசும் ஒறேஞ்ஜூசும் வெள்ளைச்சோடாவும் கொண்டு வந்து மேசையில் வைத்து, கிளாசுகளையும் வைத்தார். மீண்டும் மேலே போய் வந்தார்.

ஒரு மணி நேரத்துக்குப் பின் மிக மெதுவாக திருமதி சீக்கிளர் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந் தாள். அந்த இடைவெளியில் அவள் தலைமயிரைக் கழுவி, குளித்திருப்பது தெரிந்தது. மிகமெல்லிய சிறிய உருவம். சற்றுப் பிசகினாலும் ஒரு சூனியக் கிழவியின் தோற்றத்தை நினைவு படுத்தக்கூடிய முகம். அந்த முகத் தில் எப்போதும் போல ஒட்டி வைத்த ஒரு புன்னகை. திருவாளர் சீக்கிளரின் இயல்பான, அப்பாவித்தனமான சிரிப்போடு ஒட்டாத செயற்கை கலந்த புன்னகை. 50வயது என்று சொல்ல முடியாத விதமாக முக அலங் காரம். கூடவே இளமை தெளிக்கும் ஆடைத் தேர்வு.

திருவாளர் சீக்கிளர் விரைந்து சென்று படிகளி லேயே நின்றபடி அவளின் உதட்டோடு தன் உதட்டை உரசி "அன்பானவளே எப்படி இருக்கிறாய்?, நலம்

தானே?" என்று கேட்டார்.

திருமதி சீக்கிளர் அளந்து விட்டது போல "ஓம்" என்ற படி நேராக என்னிடம் வந்து நட்போடு கை குலுக்கினாள். தாமதமாக எழுந்துவந்ததற்காக மன்னிப்புக் கேட்டாள். எனது கணவரிடமும் சென்று கைலுகுலுக்கி நான்கு வார்த்தைகள் பேசி விட்டு மீண்டும் வந்து என் னோடு சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

„எனது இனிமையானவளே, என்ன குடிக்கப் போகிறாய்?' திருவாளர் சீக்கிளர் அவளிடம் கேட்டார்.

„சூடாக ஸ்ரோ பெரி தேநீர்" என்றாள்.

மீண்டும் தண்ணீர் கொதிக்க வைத்து, ஸ்ரோ பெரி தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தார்.

கொடுக்கும் போது மீண்டும் அவளது உதடுக ளோடு தனது உதட்டை உரசி, கண்ணுக்குள் கண்கள் பார்த்து 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்றார். அவளும் பதிலாக 'நானும் உன்னை மிகவும் காதலிக் கிறேன்' என்றாள்.

திரும்பிச் சென்றவர் எங்களுக்கும் இலங்கைத் தேயிலையில் தேநீர் தயாரித்து ஒரு குவளை நிறையத் தேநீரும் தனித்தனியாக பால், சீனியும் கொண்டுவந்து மேசையில் வைத்தார். கூடவே பட்டரும் கிரான்பெரி ஜாமும் தடவிய சில ரோஸ்பண்ணிய பாண்துண்டுகளும் சீஸ் சீவல்களும் கேக் துண்டுகளும் பிஸ்கிற்றுகளும் வைத்து சாப்பிடும் படி சொன்னார்.

எனது கணவரும் வந்திருந்து நால்வருமாக தேநீர் அருந்தி, சிறிதளவு அவைகளைச் சாப்பிட்டு, நிறையவே கதைத்தோம். இலங்கையைப்பற்றி மிகுந்த ஆர்வத்தோடு நிறையக் கேட்டார்கள். ஆறு வருடங்களின் முன், தாம் அங்கு கண்டிப் பகுதிக்கு சுற்றுலா போய் வந்ததாகச்

சொன்னார்கள்.

ஒரு மணி நேரம் கதைகளிலேயே கரைந்தது.

முடிவில் தமது ஐந்து மாடி வீட்டின் ஒவ்வொரு மாடியையும், எம்மை அழைத்துச்சென்று காட்டினார்கள் குளியலறைகளும் படுக்கையறைகளும் விருந்தினருக்கான அறைகளும் என்று அது ஒரு அரண்மனைபோலக் காட்சி அளித்தது. இருவருக்கு மிக அதிகம் அந்த வீடு.

வீட்டின் கீழே உள்ள நிலக்கீழ் அறைகளைக்கூட ஒரு அலுவலகமாக அழகாக உருவாக்கி வைத்திருந்தார் கள். கூடவே Sauna, Solarium என்று வீட்டுக்குள் வசதி கள் நிறைந்திருந்தன.

மீண்டும் கணவர் வேலையைத் தொடங்கி விட் டார். நானும் சஞ்சிகையில் மூழ்கி, ஏதோ ஒரு அரவத் தில் நிமிர்ந்த போது சமையலறையின் மூலையில் உதடு கள் பொருத்தி மிகத்தீவிரமாக முத்தமிட்டுக் கொண்டிருந் தார்கள் அந்த ஐம்பது வயதுத் தம்பதியர்.

சட்டென்று தலையைத் தாழ்த்திக் கொண்டேன். இது ஐரோப்பியாவில் சாதாரணம் என்றாலும் எனது மேலதிகாரிகளை அந்தத் தோற்றத்தில் பார்ப்பது சற்றுச் சங்கடமாகவே இருந்தது.

தொடர்ந்த ஒவ்வொரு பொழுதுகளிலும் திரு வாளர். சீக்கிளர், திருமதி. சீக்கிளருக்குத் தேவையான உதவிகள் மட்டும் என்றில்லாமல் தேவைக்கு மீறியவை களைக் கூடச் செய்துகொண்டிருந்தார்.

எனது கணவரும் அவருக்குப் பிடித்த மாதிரி டிஷைன் போட்டு முடித்தார்.

தம்பதிகள் இருவருமாக எமக்குப் பெரிய நன்றி சொல்லி உரிய பணத்தையும் கையில் தந்தார்கள்.

விடை பெற்ற போது ´ஆண்கள் இப்படியும் இருக்கலாம்‘ என்பதற்கு எடுத்துக் காட்டாக நடந்து கொண்ட திருவாளர். சீக்கிளரின் செயற்பாடுகளை எனது கணவரும் கவனித்தார் என்பதில்தான் எனக்குள் அதிக திருப்தியும் மகிழ்ச்சியும் ஊஞ்சலாடியது.

எல்லாம் கார்க் கதவைத் திறக்கும் வரைதான்.

காருக்குள் இன்னும் நான் சரியாகக் கூட ஏறி இருக்கவில்லை.

எனது கணவர் ‘‘உவன் என்ன சரியான விடு பேயனா இருக்கிறான். பொம்பிளையாப் பிறக்க வேண் டியவன்‘‘ என்றார்.

-12.11.2008

யுகமாயினி (December 2008)

அவள் வருகிறாள்

அலுமாரிக்குள் இருந்த அழகிய சிலைகளை பல தடவைகள் மாற்றி மாற்றி வைத்து விட்டேன். யன்னல் சேலைகள் சரியாகச் சுருக்கு மாறாது இருக்கின்றனவா எனவும் பல தடவைகள் பார்த்து விட்டேன். பூச்செடி கள், புத்தகஅலுமாரி, மேசைவிரிப்பு, சோபாவின் தலை யணைகள்.. என்று ஒவ்வொன்றையும் பலதடவைகள் சரி பார்த்து விட்டேன்.

குசினியிலிருந்து வீட்டின் எந்த மூலைக்குச் செல்லும் போதும் மீண்டும்மீண்டுமாய் அலுமாரிச் சிலை களை ஒரு சென்ரிமீற்றர் அரக்கி வைத்தால் நன்றாக இருக்கும் போலவும் யன்னல் சேலையின் சுருக்குகள் சற்று ஒழுங்கற்று இருப்பது போலவும் புத்தக அலுமாரி யில் புத்தகங்களை இன்னும் நேராக்கி விடலாம் போல வும் தோன்றிக் கொண்டே இருந்தன.

அவள் வரப் போகிறாள் என்பதில் எனக்குள் மிகுந்த பரபரப்பாகவே இருந்தது. 23வருடங்களின்பின் சந்திக்கப் போகிறேன். என்னைப் போல எடை போட்டிருப்பாளா? அல்லது அப்போது போலவே அழ காக இருப்பாளா? மனசு கற்பனை பாதியும் கேள்விகள் பாதியுமாக அவளின் வரவுக்காகக் காத்திருந்தது.

எத்தனை தடவைகள் புகைப்படங்கள் அனுப்பும் படி கேட்டிருப்பேன். "ம்.. கூம். நான் வருகிறேன் பார்" என்று சொல்லிச் சொல்லியே இத்தனை வருடங்களை இழுத்து விட்டாள்.

ஒரே வகுப்பில் ஒன்றாகத்தான் படிக்கத் தொடங் கினோம். ஒரே வகுப்பு என்பதையும் விட ஒரே ஊர் என்பது எங்களுக்குள் இன்னும் ஒட்டுதலை ஏற்படுத்தி யிருந்தது. என் வீட்டில் போல அவள் வீட்டில் அதீத மான கட்டுப்பாடுகள் இல்லை. எனக்கு மாலைவேளை களில் யார் வீட்டுக்கும் போய் விளையாடுவதற்கு அனு

மதி கிடைப்பதில்லை. அவள்தான் என் வீட்டுக்கு வருவாள்.

ஓடிப்பிடித்து, ஒளித்துப்பிடித்து, கெந்திப்பிடித்து, கல்லுச் சுண்டி, கொக்கான்வெட்டி, கரம் விளையாடி... எங்கள் பொழுதுகள் சிரிப்பும் கும்மாளமாகவுமே கரையும். என் தம்பி தங்கைமாரும் எமது விளையாட்டுக்களில் வந்து இணைவார்கள். சில சமயங்களில் சூரிய குமாரியும் எங்களுடன் இணைந்து கொள்வாள். யாருக்கும் தெரியாத இரகசியங்களும் எங்களுக்குள் இருக்கும்.

எட்டாம் வகுப்பில் பாடசாலையில் பிரிக்கும் போது அவள் ஆர்ட்ஸ்க்கும் நான் சயன்ஸ்க்கும் என்று பிரிந்து விட்டோம். இடைவேளைகளில் ஓடி வந்து என்னுடன் கதைத்துவிட்டுப் போவாள். இடையிடையே கிளித்தட்டு விளையாடும்போது அவளது வகுப்பும் எமது வகுப்பும் இணைந்து விளையாடுவோம். நெற்போல் (கூடைப்பந்து) என்றால் சொல்லவே தேவையில்லை. நேரம்போவதே எமக்குத் தெரிவதில்லை. மாலை வேளைகளில் தொடர்ந்தும் எமது வீட்டுக்கு வருவாள்.

நான் அவசரத்திருமணம் செய்துகொண்டபோதும் எனக்குக் குழந்தைகள் பிறந்தபோதும் ஓடிவந்து வியந்து வியந்து பார்த்தாள். நான் ஜேர்மனிக்குப் புறப்படும்வரை அவள் கல்யாணம் செய்து கொள்ளவே இல்லை.

சில வருடங்களில் அவள் திருமணமாகி கனடா சென்று விட்டதாக அம்மா எழுதியிருந்தா. அங்கிருந்து எப்படியோ எனது தொலைபேசி இலக்கத்தைத் தேடிப் பிடித்து அழைத்துக் கதைத்தாள். அவளுக்குக் குழந்தைகள் பிறக்கும் வரை அடிக்கடி தொலைபேசியில் உரையாடினோம். குழந்தைகள் வளரவளர நாங்கள் பேசும் இடைவெளிகளும் வளர்ந்தன. ஆனாலும் ஒவ்வொரு முறையும் "நான் உன்னிடம் வருகிறேன்" என்பாள். இன்றிரவு கணவர் குழந்தைகளுடன் வரப் போகிறாள்.

மனசு இன்னும் பரபரத்துக்கொண்டே இருந்தது. மீண்டும் மீண்டுமாய் வீடு அழகாக இருக்கிறதா எனச்

சரிபார்த்துக் கொண்டேன். அவளுக்குத் தோசை பிடிக் கும் என்பதால், அடுத்த நாள் தோசை சுடலாமென்ற நினைப்பில் உழுந்தை ஊறப் போட்டேன். சில கிலோ மீற்றர்கள் தள்ளியிருக்கும் ஆசியாக் கடைக்கு முதல் நாளே சென்று, வாங்கி வந்த தேங்காயை சுத்தியலால் அடித்து, உடைத்து சம்பலுக்காகத் துருவி எடுத்து குளிர் சாதனப் பெட்டியில் வைத்தேன். தோசைக்கு கத்தரிக் காய் வதக்கல் நல்லாயிருக்கும் என்று இன்னொரு கடைக்குச்சென்று வாங்கிய கத்தரிக்காயையும் வெட்டிப் பொரித்து எடுத்தேன். இரவுச் சாப்பாட்டுக்கு இடியப்பம் அவித்து, கோழி நெஞ்சு இறைச்சியில் பிரட்டல் கறி, பொரியல், வெந்தயச் சொதி.., என்று சமைத்து முடித் தேன். உள்ளியும் வெங்காயமும் பொரிந்தஎண்ணெயும் என்று கலந்த சமையல்மணம் வெளியில் போய் விடும் படியாக யன்னல்களையும் பல்கணிக்கதவையும் திறந்து வைத்தேன்.

எங்கள் படுக்கையறையைத்தான் ஒரு வாரத்துக் கும் அவர்களுக்குக் கொடுக்க இருப்பதால் படுக்கை விரிப்புகளை மாற்றினேன். அந்த ஒரு வாரத்துக்கும் எமக்குத் தேவையான எமது உடுப்புகளையும் மற்றைய அத்தியாவசியப் பொருட்களையும் மற்றைய சிறிய அறைக்குள் கொண்டு போய் வைத்தேன். இப்படியே தொட்டுத் தொட்டு வேலைகள் நீண்டு கொண்டே போயின. கால்கள் ஆறுதல் தேடின. மனம் எதையாவது கண்டு பிடித்துப் பிடித்து வேலை தந்து கொண்டே இருந்தது.

மாலையில் கொறிப்பதற்கென முதல் வாரமே கணவரின் உதவியோடு தட்டை வடை (பருத்தித்துறை வடை) செய்து வைத்திருந்தேன். அத்தோடு இன்னும் ஏதாவது பலகாரங்கள் செய்துவைத்தால் ஒரு கிழமையும் சுவையாகப் போகும் என்ற எண்ணம். அவளது பிள்ளைகளுக்கென சிப்ஸ், சொக்கிளேற்ஸ், பிஸ்கற்ஸ் எல்லாம் வாங்கி அடுக்கி வைத்தேன்.

சூரியகுமாரியும் கனடாவில்தான் இருக்கிறாளாம். அவளைப் பற்றியும் நிறையக் கேட்க வேண்டுமென

நினைத்துக் கொண்டேன். இன்னும், என்னோடு அரிவரியிலிருந்து கபொத உயர்தரம் வரை படித்த பல மாணவிகள் கனடாவில்தானாம். 'வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் சந்திப்பு' என்று சொல்லிச் சந்திப்பார்களாம். நெற்போல் விளையாடு வார்களாம்.

நெற்போல் என்றதுமே எனக்குள் சட்டென்று ஒரு ஆசை அலை மோதியது. ஜேர்மனியில் அனேகமாக எல்லாத் தமிழர்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தள்ளித்தள்ளித்தான் இருக்கிறோம். சேர்ந்து வருபவர்க ளில் ஒருவரேனும் என்னோடு படித்தவர்களாயோ அல் லது எனது ஊரவர்களாயோ இருப்பதில்லை. இந்த நிலையில் வடமராட்சி மாணவர்கள் சந்திப்பு என்பதைக் கனவில் கூட இங்கு நினைத்துப் பார்க்க முடிவதில்லை. எங்காவது சிறுவர் விளையாட்டு மைதானங்களில் நெற் போலுக்கான கூடையையும் பந்தையும் சேர்த்துக் கண் டால் போதும். பாடசாலை நினைவுகள் மனதில் நர்த்தன மிட நானும் ஒரு சிறுபிள்ளை போல ஓடிச்சென்று பந்தைக் கூடைக்குள் திரும்பத் திரும்பவாகப் போடுவேன்.

படிக்கும் காலங்களில் நெற்போல் என்றால் எவ்வளவு பைத்தியமாக இருந்திருக்கிறேன். ஏதாவதொரு பாடத்துக்கு ஆசிரியர் வரவில்லையென்றால் போதும். நான் பந்துடன் மைதானத்துக்குச் சென்று விடுவேன். அவள் வந்தபின் கண்டிப்பாக எங்கள் வீட்டுக்கு அருகே இருக்கும் சிறுவர் விளையாட்டு மைதானத்துக்குப் போய் அவளோடு நெற்போல் விளையாட வேண்டும் எனவும் நினைத்துக் கொண்டேன்.

இப்படியே மனம் நினைவுகளுடனும், கைகள் வேலைகளுடனும் என்று 90சதுர மீற்றர் வீட்டுக்குள் சுற்றிச்சுற்றி ஓடிக் கொண்டே இருந்தேன்.

எல்லாவற்றையும் முடித்து விட்டேன் என்றால் அவள் வந்து நிற்கும் ஒரு வாரமும் அவளுடன் கதைத்து, அவளோடு வெளியில்போய்... என்று கூடிய நேரங் களை அவளுடனேயே களித்துக் கழிக்கலாம் என்ற

பேராசை எனக்கு. அதற்காகவே ஒரு வாரம் வேலைக்கு விடுப்பும் எடுத்திருந்தேன்.

இரவும் வந்தது. அவளும் வந்தாள். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? இனம் புரியாத மகிழ் வலைகளில் திக்குமுக்காடினோம்.

காலங்களும் குடும்ப பாரங்களும் அவளிலும் நிறைய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. என்னை விட அதிக குண்டாக இருந்தாள். என் கற்பனைக்குள் துளியும் எட்டாத தூரத்தில் அவளது கணவன். கனேடிய ஸ்ரைலும் தமிழர் என்ற அடையாளங்களும் கலந்து அனேகமான எல்லா வெளிநாட்டுத் தமிழ்க்குழந்தைகள் போலவும் அவளது குழந்தைகள்.

கனடாவில் இருந்து வெளிக்கிட்டு லண்டனில் இரண்டுவாரம், ஸ்பெயினில் ஒரு வாரம்... என்று நின்று நின்று வந்ததில் கொஞ்சம் களைத்தும் இருந்தார்கள். ஆனாலும் கலகலத்தார்கள். சாப்பிட்டு, நிறையக்கதைத்து நித்திரைக்குச் செல்ல சாமமாகி விட்டது.

அடுத்தநாள் ஆறுதலாகவே அவர்களுக்கு விடிந் தது. கதையும் சிரிப்புமாய் இருந்துவிட்டு மதியஉணவைத் தயார் செய்யத் தொடங்கினேன்.

அவள் தனது சூட்கேஸைத் திறந்து பிளாஸ்டிக் பைகளால் சுற்றப்பட்ட இரு பெரிய பார்சல்களை வெளி யில் எடுத்தாள்.

ஏதோ 'அன்பளிப்பு' கொண்டு வந்திருக்கிறாள் என்ற நினைப்பில் மெலிதான ஆவல் என்னுள் தோன்ற, பார்த்துக் கொண்டு நின்றேன். பைகளைப் பிரித்து இருபதுக்கும் மேலான வீடியோக்கசட்டுகளை வெளியில் எடுத்து வைத்தாள்.

„என்னது?" ஆவல் ததும்பக் கேட்டேன்.

"இது இவ்வளவும் சித்தி, இதுகள் அரசி, இதுகள் கோலம், இதுகள் செல்லமடி நீ எனக்கு, இதுகள்... இது

கள்..." என்று சொல்லிச் சொல்லி கசட்டுகளைப் பிரித்துப் பிரித்து வைத்தாள்.

,,என்னது... படமா?"

"என்ன நீ! யூரோப்பிலை இருந்து கொண்டு இது கூட உனக்குத் தெரியாதே?" என்றாள்.

பின்னர்தான் விளங்கியது, அத்தனையும் தொலைக்காட்சித் தொடர்கள் என்பது. பயண அலுவல்களால் கனடாவில் நின்ற கடைசிச் சில வாரங்கள் அவளால் தொடர்களைப் பார்க்க முடியாது போய் விட்டதாம். எல்லாவற்றையும் ரெக்கோர்ட் பண்ணிக் கொண்டு வந்து விட்டாளாம். லண்டனில் கொஞ்சத்தைப் பார்த்து முடித்தாளாம். மிகுதியை இங்கு தொடரப் போகிறாளம்.

நான் சமைத்து முடித்து மேசையில் சாப்பாடுகளை வைத்த போதும் சரி தொடர்ந்த நாட்களிலும் சரி அவள் கண்களைத் துடைத்தும் மூக்கை உறிஞ்சியும் தொடர்களோடு கலங்குவதும் களிப்பதுமாய் இருந்தாள். கிடைக்கும் இடைவெளிகளிலும் சாப்பிடும் போதும் தொடர்களில் வரும் கதைகளையும் கதாபாத்திரங்களையும் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்.

ஒரு வாரம் முடிந்து அவளும் அவள் குடும்பமும் போன பின் சூரியகுமாரியும் கூடைப்பந்தும் இன்னும் பலவும் வழக்கம் போலவே நினைவுகளாயும் நிராசைகளாயும் எனக்குள்ளே மிதந்து கொண்டிருந்தன.

-18.7.2008

யுகமாயினி (August 2008)

சில பக்கங்கள்

நெருங்கிய உறவொன்றின் மரணம் பெரும் சுமையாக, ஆற்றமுடியாத துயராக, விடை கிடைக்காத கேள்வியாக என்னை அழுத்திக் கொண்டேயிருந்தது. வாழ்பவர்கள் அத்தனை பேரும் இறந்துதான் ஆக வேண் டும் என்ற நியதி மனதுக்கு ஒவ்வாததாக இருந்தது. ஏன் என்ற கேள்வி அடிக்கடி என்னைக் குடைந்தது. மரணம் ஏன் என்பதைவிட இந்த வாழ்வும் அதனோடு இணைந்த இன்ப துன்பங்களும் பிரிவுகளும் எதனால்? எதற்காக? மரணத்தின் பின்னே என்ன இருக்கிறது? மூச்சடங்கி, இரத்த ஓட்டங்கள் அஸ்தமித்து, உடல் வெறும் வெற்றுக் கூடாகி, சாம்பலாகி இதுவே நியதியாய்... ஏன்? மனதின் அலைவுகளைத் தவிர்க்க முடியாமலே இருந்தது.

ஒவ்வொரு மரணமும் அது சார்ந்த நெருங்கிய உறவுகளை அடித்துப் புரட்டிப் போட்டு விடுகிறது. சிலரை மனதளவில் அதள பாதாளத்தில் கூட வீழ்த்தி விடுகிறது. அதற்காக ஆதவன் தொடங்கி அத்தனை இயற்கைகளும் அசமந்து இருந்து விடுவதில்லை. உலகம் தன்பாட்டில் இயங்கிக் கொண்டேயிருக்கும். சம்பந்தப் பட்டவர்களும் அவரவர் மனங்களுக்கு ஏற்ப ஸ்தம்பித்து, உறைந்து, கண்ணீரில் கரைந்து, மீண்டும் மெது மெது வாக எல்லாவற்றுடனும் இணைவார்கள்.

நானும் மெது மெதுவாக என்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு வெளியோடு இணைய முயன்றேன். ஆதவனின் இருப்பு அதீதமாகவே தெரிந்தது. வெளியின் வெளிச்சம் மனதிலும் சிறிய புத்துணர்வைத் தந்தது. வசந்தம் வந்துவிட்டதாம். கடந்த சிலநாட்களில் கொட்டி விட்ட பனியின் சுவடே தெரியாமல் புற்கள் பசுமை காட்டின. இலைகள் துளிர்க்க முன்னமே சில மரங்கள் மொட்டவிழ்த்திருந்தன. வீதிகளின் ஓரங்களிலும் வீடு களின் முன்றல்களிலும் சிவப்பு, மஞ்சள், நீலம்... என்று பல வர்ணங்களிலும் பூக்களைத் தாங்கியபடி செடிகள் அசைந்தாடின. மௌனித்திருந்தவீதிகள் மனிதர்களினால்

ஆரவாரப்பட்டன. இத்தனைகோலாகலங்களிலும் கலந்து கொள்ளாமல் சில மரங்கள் இன்னும் பிடிவாதத்தோடு நிர்வாணமாகவே நின்றன. வெயில் சிரித்தாலும் கொஞ்ச மாய் குளிரும் உறைத்தது.

கடும் குளிருக்கான தடித்த உடைகளும் சப்பாத்து களும் தவிர்க்கப் பட்டதால் வேகமாக நடக்க முடிந்தது. இப்படியான பொழுதுகளில் பேரூந்தை விடுத்து நடந்தே வேலைக்குப் போய் விடுவது என் வழக்கம். மூளையில் பதியப் பட்டிருக்கும் சில நாளாந்த விடயங்கள் அதிக சிந்தனைகளுக்கு இடமின்றி தன்பாட்டில் நடந்து விடு வது போல நானும் பேருந்துத் தரிப்பிடத்தைத் தாண்டி மலைக்குன்றிலிருந்து கீழிறங்கும் படிக்குத் தாவினேன்.

வாகனங்களின் இரைச்சல்களிலும் புகைகளிலும் தவித்து தத்தளித்துக் கொண்டிருக்கும் பெருஞ் சாலை களை விட மரங்களும் செடிகளும் இரு மருங்கிலும் அசைந்தாடும் சிற்றொழுங்கைகளிலும் சிறுவீதிகளிலும் நடக்கும்போது ஒரு தனியான சுகம் கிடைக்கும். அனேக மான பொழுதுகளில் வேலைக்குச் செல்வதற்கு நான் தேர்ந்தெடுக்கும் பாதை ஆலன்(Aalen) நகரில் தொடங்கி எனது ஸ்வெபிஸ் ஹால் (Schwäbisch Hall) நகரை ஊடறுத்து நகர்ந்து கொண்டிருக்கும் நதியை ஒட்டிய கரைப் பாதையாகவே இருக்கும். அந்தப் பாதையில் நதியைப் பார்த்துக்கொண்டே அதன் சலசலப்பைக் கேட் டுக் கொண்டே எத்தனை மணித்தியாலங்கள் வேண்டு மானாலும் நடந்து விடலாம்.

இன்பத்திலும் சரி, துன்பத்திலும் சரி என்னைத் தழுவி, என்னோடு கலந்து எனது உணர்வுகளுக்கு வலு வும் உயிர்ப்பும் சேர்க்கும் இசை போல நதியின் சலசலப் பும் என் செவிகளினூடு புகுந்து மூளையின் ஒவ்வொரு உணர்வு நரம்புகளையும் சிலிர்க்க வைத்தது.

தவழ்ந்து கொண்டிருந்த தென்றல் முடியோடு சல்லாபித்தது. கன்னங்களை வருடியது. நெளிந்து வளைந்து நகர்ந்து கொண்டிருந்த நதியின் மேற்பரப்பில்

பட்டுத் தெறித்த சூரிய ஒளியில் கண்கள் பனித்தன. மரணம் பற்றிய கேள்விகள் தற்காலிகமாக என்னிடமிருந்து விடைபெற்றன. கவலைகளும் நினைவுகளும் என் மனதுக்குள் முட்டியிருந்தாலும் இயற்கையின் தழுவலில் ஒருவித கிறக்கம் என்னை ஆட்கொள்ள நான் விரைந்து கொண்டிருந்தேன்.

இன்று திருவாளர் சுறொத்துடன் ரெஷறியில் (Treasury யில்) வேலை செய்யவேண்டுமென கடந்த வாரமே அறியத் தந்திருந்தார்கள். சுறொத்துடன் வேலை செய்வது என்பது எனக்கு எப்போதுமே பிடிக்கும். சுறொத் இனிமையானவர். மென்மையானவர். சந்தோசமாகப் பழகக் கூடியவர்.

சுறொத்தை முதன்முதலாக சந்தித்தநாள் இன்னும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. நான் வங்கியில் வேலைக்குச் சேர்ந்து சில மாதங்களில் ஒரு நாள் திருமதி. சூமாகர் சுகவீன விடுமுறையில் போய்விட்டார் என்ற செய்தியைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு என்னைப் போகும்படி பணித்தார்கள். நான் செய்யும் வேலைக்கும் அந்த வேலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையாயினும் அது ரெஷறி என்பதால் நம்பிக்கையான ஆட்களை மட்டுமே அதனுள் அனுமதிக்கலாம் என்ற அடிப்படையில் என்னை அழைத்திருந்தார்கள். என்னோடு பல ஜேர்மனியப் பெண்களே வேலை பார்க்கும் போது அவர்களை விடுத்து என்னைத் தேர்ந்ததில் அவர்களிடம் சற்றுப் பொறாமை தெரிந்தது.

எனக்கோ பழகிய வேலையையும் பழகிய வேலைத் தோழிகளையும் விட்டு அந்தப் பிரிவுக்குப் போவதில் அரைமனதான சம்மதமே இருந்தது. மறுக்க முடியாத நிலையில் போனேன். தடித்த சுவர்களும் இரும்புக்கதவும் கொண்ட அந்த நிலக்கீழ்அறைக்குள் நுழையும் போது ஏதோ சிறைச்சாலைக்குள் செல்வது போன்ற உணர்வே மேலோங்கி என்னைப் பயமுறுத்தியது. உள்ளே நுழைந்துவிட்ட மாத்திரத்தில் வேறு உலகத்துக்குள் வந்துவிட்டதுபோன்ற உணர்வு தோன்றியது.

அப்படியொரு அழகான பெரியஅறை. சுவர்களில் இயற்கைக் காட்சிகளுடன் அமைந்த அழகான பெரிய பெரிய புகைப்படங்கள். ஒவ்வொரு புகைப்டத்திலும் திரு.சுறொத் அவர்கள் இளமைக் கோலத்துடன் அவர் மனைவியை அணைத்த படியும் மனைவியுடன் பனிச் சறுக்கல் செய்தபடியும் மலைகளில் கயிறுகளில் தொங் கியபடியும் ஏறியபடியுமென்று மிகமிக அழகான புகைப் படங்கள் தொங்கின.

சுறொத் மெல்லிய புன்சிரிப்புடன் கைகுலுக்கி என்னை வரவேற்றார். அவரைப் பார்த்ததுமே எனது அப்பாவின் நினைப்புத்தான் எனக்கு வந்தது. எனது அப்பாபோல வாட்டசாட்டமான உடலமைப்பு இல்லா விட்டாலும் அந்தப் புன்சிரிப்பிலும் கண்களை ஊடுரு விய அந்தப் பார்வையிலும் ஒருவித கனிவும் மிகுந்த நட்பும் தெரிந்தன.

அழகு என்பது தோற்றத்தில் மட்டுமல்ல, புன்சிரிப் பிலும் பார்வையிலும் பழகுதலிலும் கூட இருக்கிறது என் பதை நட்போடும் பண்போடும் பழகக்கூடிய அவரோடு வேலைசெய்யத் தொடங்கிய பின்தான் புரிந்து கொண் டேன்.

அந்தப்பாதுகாப்பான அறையினூடு இன்னொரு அறைக்குள் செல்லலாம். முதன் முதலாக அந்த அறைக் குள் நுழைந்த பொழுது என்னுள் ஒரு அதிர்வு ஏற் பட்டது. சுற்றிவர அறைச் சுவரெல்லாம் அலுமாரிகள் பொருத்தப் பட்டிருந்தன. அலுமாரிகளின் ஒவ்வொரு தட்டிலும் கட்டுக் கட்டாகப் பணங்கள். பணத்தாள்கள். வெறுமே படங்களிலோ புத்தகங்களிலோ பார்ப்பது போல அல்லாமல் நியமான பணக்கட்டுகள். தலை கிறுகிறுத்தது. இரண்டு கைகளாலும் தலையின் இரு பக்கங்களையும் அழுத்தியவாறு அப்படியே பேசமறந்து நின்று விட்டேன்.

என்ன திகைத்துவிட்டாயா? இன்றுதானே முதல் முதலாகப் பார்க்கிறாய். சிலகாலம் போக இதெல்லாம்

வெறும்தாள்கள் என்பதான உணர்வைத்தான் இவைகள் உனக்குத் தரும். என்னைப் பொறுத்த வரையில் இதெல் லாம் வெற்றுத்தாள்களே' என்றார் சுறொத்.

அன்றைய பொழுதில் என்னைவிட சுறொத்தான் அதிகம் கதைத்தார். கதைத்த படியே பார்ப்பதற்கு ஒரு சாதாரண ரைப்ரைட்டர் அளவில் இருக்கும் இயந்திரம் ஒன்றினுள் தட்டுக்களை வைத்து விட்டு மேலுள்ள துவாரத்தினுள் நாணயங்களைப் போட்டு சுவிச்சை அழுத்தினார். உள்ளே மளமளவென்று நாணயங்கள் கொட்டுப்படும் சத்தம் கேட்டது. சத்தம் நின்று பச்சை நிறத்தில் ஒரு பொத்தான் மின்னியதும் அந்தத் தட்டு களை ஒவ்வொன்றாக வெளியில் இழுத்து எடுத்தார். ஒவ்வொரு தட்டிலும் அதனதன் பெறுமதிக்கு ஏற்ப பிரிபட்டபடி நாணயங்கள் அடுக்கப் பட்டிருந்தன. ஒவ் வொரு தட்டிலும் எத்தனை நாணயங்கள் அடங்கும் என்பது முற்கூட்டியே தெரிந்திருப்பதால் அது எவ்வளவு பணம் என்பதை சுலபமாகக் குறித்து விட முடிந்தது. ஒவ்வொரு முறையும் தட்டுக்களை வெளியில் எடுத்த கையோடு அதனதன் பெறுமதிகளை பேப்பரிலும் எழுதி, கணினியிலும் குறித்தார்.

தட்டுக்கள் எல்லாம் நிறைந்ததும் சற்றுப் பெரி தாக மறுபக்கத்தில் இருந்த இன்னுமொரு விதமான இயந்திரத்தை அணுகினார். அந்த இயந்திரத்தின் முன் பகுதியில் மண்ணெண்ணெய் ஊற்றுவதற்கு நாம் ஊரில் பாவிக்கும் புனல் போன்ற வடிவம் கொண்ட ஒரு இரும் புக் கொள்கலன் இருந்தது. அதற்குள் பிரித்த நாணயங் களின் ஒரு யூரோ பெறுமதியுள்ள நாணயங்களைக் கொட்டி விட்டு, மறுபக்கத்தில் இருந்த ஒரு தட்டில் நாணயங்களைச் சுற்றுவதற்கான அளவான தாள்களை அடுக்கி விட்டு பொத்தானை அழுத்தினார். நாணயங்கள் முழுவதுமாகப் பேப்பரால் சுற்றப்பட்டு சிறுசிறு உருளை களாக வந்து விழுந்தன. இப்போது எண்ணுவதும் கணக்கெடுப்பதும் சுலபமாக இருந்தன. பத்து நாணயங் கள் கொண்ட ஒரு யூரோ உருளைகள் எத்தனை என எண்ணி, எழுதிக் குறித்து விட்டு சற்று அமர்ந்தார்.

மறுபக்கத்து மேசையில், திருமதி.பிராங்கே பணத் தாள்களை எண்ணி எண்ணி, நீல ஒளிபாய்ச்சும் இயந் திரம் ஒன்றினுள் அடுக்கி, அவை நியமான பணத்தாள் கள்தானா என்பதை உறுதிப் படுத்திய பின், அதற்குரிய மெல்லியதாளால் நடுவில் சுற்றி ஒட்டிக் கொண்டிருந் தார். இளம் பெண்ணான சபினே ஒட்டிய பணத்தாள் களை ஒவ்வொன்றாக எடுத்து, சரி பார்த்து தொகை யைக் குறித்துக் கொண்டிருந்தாள்.

நான் ஒவ்வொன்றையும் வியப்புடன் பார்ப்பதை அவதானித்த சுறொத் மெலிதான சிரிப்புடன் 'இப்போது சில வருடங்களாகத்தான் இந்த வசதியெல்லாம். நான் பதினேழு வயதில் இந்த வேலையில் சேர்ந்த பொழுது ஒவ்வொரு நாணயமாகப்பிரித்து, ஒவ்வொன்றாகஅடுக்கி இந்த இயந்திரங்கள் சில நிமிடங்களுக்குள் செய்த இந்த வேலைகளை மணித்தியாலக் கணக்கில் இருந்து செய் திருக்கிறேன்" என்றார்.

„பதினேழு வயதிலிருந்தே இந்த வேலையா?"

„ம்.. ம்.. அப்போது இந்த அறையில் 15 பேர் வேலை செய்தோம். இப்போது இந்த இயந்திரங்கள் 15 பேர் ஒரு நாள் முழுக்கச் செய்யும் வேலைகளை ஓரிரு மணித்தியாலங்களில் முடித்து விடுகின்றன. அதனால் அவர்கள் வேறு பிரிவுக்கு மாற்றப் பட்டு விட்டார்கள்" என்றார்.

கதைத்த படியே எழுந்து ஒரு அலுமாரியைத் திறந்தார். அதனுள்ளேயும் பணக்கட்டுகள் இருக்குமென நினைத்தேன். மாறாக தண்ணீர் பைப், சிங் இவைக ளோடு ஒரு கோப்பிமெசின் என்று ஒரு குசினி மிகச் சிறிய அளவில் அமைக்கப்பட்டு அந்த அலுமாரிக்குள் ஒளிந்திருந்தது. அழகாக, நேர்த்தியாக குடிக்கும், சாப் பிடும் கோப்பைகளும் கிளாசுகளும் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. கோப்பி இயந்திரத்தில் இருந்து துளித் துளியாக கோப்பி சிந்திக் கொண்டிருந்தது. கோப்பி வாசனை நன்றாக இருந்தது.

„நீயும் குடிக்கிறாய்தானே' என்ற படி ஒரு கோப்பை எடுத்து அதற்குள் கோப்பியை ஊற்றினார்.

"நன்றி. நான் கோப்பி குடிப்பதில்லை. தேநீர் மட்டுந்தான்‟ என்றேன்

.

அந்த அலுமாரிக்குள் இருந்த இன்னொரு சிறிய அலுமாரியைத் திறந்தார். பலவிதமான தேயிலைகளைக் கொண்ட பைகள் நிரம்பிய பெட்டிகள்.

„விரும்பியதை எடு‟ என்றார்.

நான் செம்பருத்திப்பூவில் செய்த தேயிலை நிரம் பிய பை ஒன்றை எடுத்து தேநீர் தயாரித்துக் கொண்டு அமர்ந்தேன்.

முன் சுவரில் அவரது படங்கள். அழகிய மனைவி யுடன். ஒரு புகைப்படத்தில் ஆல்ப்ஸ் மலையைப் பின் புலமாகக் கொண்ட போடன்சேயில் இருவரும் வள்ளத் தில் போய்க் கொண்டிருந்தார்கள். இன்னொன்றில் மலையில் ஏறிக் கொண்டிருந்தார்கள். இன்னொன்றில் மயோக்கா கடற்கரையில் ஒருவரோடு ஒருவர் சாய்ந்து ஒய்யாரமாக வெயில் குளித்தார்கள். இன்னும் ஒன்றில் எகிப்தின் பிரமிட்டுகளை ஆவல் ததும்பும் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மிகவும் அந்நியோன்யமான தம்பதிகளாய், வாழ்க் கையை அனுபவிக்கும் ஆர்வம் உள்ளவர்களாய், பார்ப்ப வர்கள் மனதில் சந்தோசம் ஊட்டுபவர்களாய் தெரிந்தார் கள். நான் ஒவ்வொரு படத்தையும் ஆர்வத்துடன் பார்ப் பதைப் பார்த்த அவர் வேலைகளின் மத்தியில் கிடைக்கும் அவ்வப்போதான இடைவெளிகளில் ஒவ்வொரு படமும் எங்கே எடுக்கப்பட்டது, எந்தச் சந்தர்ப்பத்தில் எடுக்கப் பட்டது, அன்றையநாளில் என்ன காலநிலை இருந்தது… என்றெல்லாம் விலாவாரியாகச் சொல்லிக் கொண்டி ருந்தார். எந்த நிலையிலும் எந்தக் கதையிலும் அவர் வேலையிலான நிதானத்தையிழக்காமல் மிகுந்த கவன

மாகச் செயற்பட்டார். சுறொத்தின் வேகத்துக்கு அங்கு யாரும் ஈடு கொடுக்க மாட்டார்கள். அத்தனை வேகமாக நாணயங்களை இயந்திரத்துள் கொட்டி வெளிவரும் உருளைகளை பெட்டிகளில் அடுக்கி கணக்குகளைக் குறித்துக் கொண்டிருந்தார். இந்தளவு வேலைகளையும் கைகள் செய்து கொண்டிருந்தாலும் எப்பொழுதும் புன்னகை மாறாத முகத்தோடு ஒவ்வொருவரையும் எதிர் கொண்டார்.

மேலே வங்கிக்குப் பணம்தேவைப்படும் போதெல் லாம் திருமதி. சிமித்தோ அன்றி திருவாளர். வாக்னரோ இந்த அறைக்குத்தான் வருவார்கள். சுறொத்தான் அவர்களிடம் பணத்தைக் கொடுத்து, குறித்துக் கொள்வார்.

மதியம் பன்னிரண்டுமணி என்றதும் எல்லோரும் கன்ரீனுக்கோ அன்றி வெளிக் கடைகளுக்கோ சாப்பிடப் போவார்கள். சுறொத் மட்டும் வீட்டுக்கு ஓடி விடுவார். மீண்டும் இரண்டு மணிக்கு வந்து வேலை தொடங்கி ஐந்து மணியானதும் ஒரு நிமிடம் கூடத் தாமதியாது போய் விடுவார்.

சுறொத்துடன் வேலை செய்யும் வாய்ப்பு எனக்கு எப்போதும் கிடைக்கும் என்றில்லை. இங்கு வேலை செய்பவர்களில் யாராவது விடுப்பில் போக வேண்டும். அந்த நாட்களில்தான் எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைக்கும். நான் இந்த வங்கியுடன் இணைந்து விட்ட 17 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் கண்டிப்பாகச் சில வாரங்களேனும் சுறொத்துடன் இந்த ரெஷறியில் வேலை செய்வேன். ஒவ்வொரு சந்தர்ப்பமுமே மகிழ்வான பொழுதுகளாகவே கழிந்தன. ஒவ்வொரு சந்தர்ப் பங்களிலும் எமது கதைகள் உலகத்தைச் சுற்றிவரத் தவறுவதில்லை.

நீண்ட மாதங்களின் பின் இந்த வருடத்திற்கான முதல் அழைப்பு இது. இப்போதெல்லாம் அந்தப் பணக் கட்டுக்களைப் பார்க்கும்போது எனக்கு எந்தத் திகைப்பும் ஏற்படுவதும் இல்லை. நெஞ்சு படபடப்பதும் இல்லை.

எல்லாம் வெற்றுத்தாள்கள் போலவே.

உள்ளே போனபோது சுறொத் கைகுலுக்கி வர வேற்றார். முதன்முதல் கண்ட சுறொத் 45வயதில் இருந் தார். இன்று அவர் 62வயதில். தனது கோப்பியோடு எனக்கு ஸ்ரோ பெரி தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து மேசையில் வைத்தார். மேசையில் செர்ரிப் பழங் கள் சேர்க்கப்பட்ட ´டொனாவெலே கேக்´ கும் இருந்தது.

„சாப்பிடுகிறாய் தானே...“ என்ற படி அதில் ஒரு துண்டு வெட்டி ஒரு சோஷரில் வைத்து, கரண்டியும் எடுத்துக் கொண்டு வந்து வைத்தார். „மனைவி முதல் நாள் 62வது பிறந்த நாளைக் கொண்டாடினாள்“ என்றார்.

கோப்பியில் இரண்டுமூன்று மிடறுகளை உறிஞ்சி விட்டு, எழுந்து சென்று பத்து சென்ற்களை(cents) இயந்திரத்துள் கொட்டி, பொத்தானை அழுத்தினார். பத்துசென்ற் உருளைகளைத் தொடர்ந்து, நெளிந்து வளைந்து கிறுக்குப் பட்டபடி சில வேற்று நாட்டு நாண யங்களும் வந்துவீழ்ந்தன. சிலசமயங்களில் சிலர் வேற்று நாட்டு நாணயங்களையும் போட்டு ஏமாற்றியிருப் பார்கள். கூடுதலாக வெளியில் நாட்டப் பட்டிருக்கும் சிகரெட் மெசின்கள், வாகனத் தரிப்பிடங்களில் உள்ள தரிப்புக்கான கட்டண மெசின்கள் போன்றவற்றில் போடப்படும் நாணயங்களில் இப்படியானவையும் வருவ துண்டு. மனிதர்களின் பார்வைகளை விட இந்த இயந் திரங்களின் பார்வைகள் கூர்மையும் அவதானமும் மிக் கவை. வேற்றுநாட்டு நாணயங்களை ஒரு புரட்டுப் புரட்டி தனியாகக் கக்கி விடுகின்றன. சுறொத் அவை களை நிரம்பி வழிந்து கொண்டேயிருக்கும் அதற்கான பெட்டிகளுக்குள் கொட்டினார்.

அந்த நாணயங்கள் எப்போதாவது உதவி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்றைய கதைகளில் சுறொத், தான் ஓய்வில்

போய் விடப் போவதாகச் சொன்னார்.

„ஏன் இத்தனை அவசரம், ஊருலா மோகமா?“ ஆச்சரியத்துடன் கேட்டேன்.

67 வயது வரை வேலை செய்தால்தான் முழு ஓய்வூதியமும் கிடைக்கும். இப்படி 62இலேயே போனால் ஓய்வூதியத் தொகை குறையும்.

„இல்லையில்லை. 20வருடங்களாக நாம் ஊருலா செய்வதில்லை. 20 வருடங்களுக்கு முன் திடீரென்று ஏற் பட்ட ஒரு சுகவீனத்தில் எனது மனைவியின் உடலின் சில பகுதிகள் இயக்கத்தை இழந்து விட்டன. இதுவரை வேலை தவிர்ந்த சிலமணிகளை மட்டுமே அவளுக்காகச் செலவழிக்க முடிந்தது. 45 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்துவிட்டால் முழு ஓய்வூதியத்துடன் ஓய்வு பெறலாம். அதற்காகத்தான் இதுவரை காத்திருந்தேன். இனி அவளருகில் இருந்து அவளைக் கவனித்துக் கொள் ளலாம்“ என்றார்.

இன்றுதான் அவர் முகத்தில் சோகத்தின் இழை களையே பார்த்தேன். எல்லாம் சில விநாடிகள்தான்.

சட்டென்று கவலையைக் களைந்துவிட்டு சிரித்த படியே நாணயங்களை இயந்திரத்தினுள் கொட்டத் தொடங்கினார்.

-3.5.2008
யுகமாயினி (June 2008)

தவிர்க்க முடியாதவைகளாய்...

என் கண்ணுக்குள் தெரிந்த உலகம் குளிரில் உறைந்து கிடந்தது. கால்கள் தன் போக்கிலே நடந் தாலும் மனசு வீட்டுக்குத் திரும்பிவிடு என்று கெஞ்சியது. குருவிகளினதும் கோட்டான்களினதும் கூச்சலும் சிறகடிப் பும் ஆற்றுப் படுக்கைக்கேயுரிய ஆத்மார்த்த சலசலப்பு களாயிருந்தன. ஆற்றைக் குறுக்கறுத்து நின்ற பாலத் தைக் கடக்கும் போது குத்தெனத் தெரிந்த ஆற்றின் மீது படர்ந்திருந்த குளிர்ந்த அமைதி சுனாமியை ஞாபகப் படுத்தி என்னைக் கிலி கொள்ளச் செய்தது. அழகான இயற்கை ஏதோ ஒரு கணத்தில் ஆக்ரோஷமாக உயிர் குடிக்கும் என்ற உண்மை இப்போதெல்லாம் அடிக்கடி மனசை உதைத்து விட்டுச் செல்கிறது.

நேற்றிரவு எரிமலை சஞ்சிகையில் வாசித்த, சித்திரா சுதாகரனின் ´மாபிள்கல் பதித்த விறாந்தை´ சிறுகதை நினைவுக்குள் உருண்டது. போர் எப்படியெல் லாம் எங்களைச் சிதைத்து விட்டது. இந்தக் குளிரிலும் பனியிலும் இராப்பகலாய் உழன்று வேலை செய்து மாபிள்கல் பதித்த விறாந்தையுடனான வீட்டுக்காக ஏங் கிய ஏழைத் தாய்க்கு பணம் அனுப்புகிறான் ஒரு ஐரோப் பியா வாழ் ஈழஅகதி. தாயும் அந்த வீட்டைக் கட்டு கிறாள். கட்டிமுடியும் தறுவாயில்தான் அந்தக் கொடுமை நடக்கிறது. அந்த மாபிள்கல் பதித்த தரையிலேயே அந்தத் தாயும் அவனது சகோதரியினது குடும்பமும் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை அவன் தொலைக் காட்சியில் பார்க்க நேர்கிறது.

அந்தக் கொடுமை மனசைப் படுத்தியது. அந்த நினைவில் சப்பாத்தையும் துளைத்துக் கொண்டு கால் விரலில் ஏறிய குளிரை மனசு கொஞ்சம் கொஞ்சமாக மறந்து கொண்டிருந்தது. நான் தனியே நடந்து கொண் டிருந்தேன்.

ஆற்றங்கரையும் அதையொட்டிய புல்வெளியும்

பனி போர்த்தியிருந்தன. தூரத்தில் அந்தப் பனியின்மேல் நின்று சில ஜேர்மனியர்கள் மிகவும் சிரத்தையாக உடற் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ஆணா னாலும் நீண்ட கூந்தலைப் பிடியாகக் கட்டியிருந்தார். மீண்டும் மீண்டுமாய் அந்த ஐரோப்பிய அகதி இளைஞ னும் அவனது குடும்பமும் மனசுக்குள் உருண்டார்கள். உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவர்களைத் தாண்டும் போது ஆசிரியர் பலதடவைகள் தலையை என் பக்கம் திருப்பினார். நான் நடந்து கொண்டிருந்தேன்.

இலக்கின்றிய, ஏகாந்த நடையென்றாலும் இன் னும் அரை மணியில் பேரூந்துத்தரிப்பிடத்துக்குத் திரும்பி விடவேண்டும் என்பது மட்டும் நினைவில் துருத்திக் கொண்டுநின்றது.

கோடைகாலத்தில் இப்படிப்பலரும் நடப்பார்கள். எனக்கு இந்தப் பனியிலும் இந்த வெளியில் நடப்பதில் ஏதோ ஒரு ஆர்வம். தினமும் காலைவேலை முடிந்ததும் என்னையறியாமலே என் கால்கள் இந்த வழியை ஏகும். பனி எவ்வளவு அழகானது. ரோஜாவின் முட்களைப் போல, இந்தப் பனிக்கு குளிர் மட்டும் இல்லாதிருந்தால் நான் என் வாழ்க்கையின் பாதிப் பொழுதுகளையேனும் இந்தப் பனியின்மேல் படுத்தும் புரண்டும்...என்று கழித்து விடுவேன்.

பனிப்பூக்கள் பூத்திருந்த ஹாசல்நட்ஸ் மரத்தில் சிறகடித்த ஒரு சிட்டுக்குருவி என்மேல் பனித்துளிகளைச் சிதற விட்டுக் கொண்டு அவசரமாய் பறந்தது. உடல் ஒரு தரம் சிலிர்த்தது. நினைவு துருத்தியது. திரும்பி பேரூந்துக்கான தரிப்பிடத்தை நோக்கி நடக்கத் தொடங் கினேன்.

"கோர்ஸ் ஒண்டு தொடங்குது. படிச்சால் நல் லது" என்று மருமகள் சில தடவைகளாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். நான்தான் "நான் அப்ப நதியைப் பார்க்கிறன். நீங்கள் போய்படியுங்கோ" என்று சொல்லி, பேத்தி நதியைப் பார்க்கும் பொறுப்பை எடுத்துக்

கொண்டேன். அதுதான் இந்த அவசரம்.

மருமகள், நதியை வெளிக்கிடுத்திக் கொண்டு வந்து என்னிடம் தந்துவிட்டு வகுப்புக்கு விழுந்தடித்து ஓடுவாள். திரும்பி வருகிற பொழுது களைத்துப் போயி ருப்பாள். ஆனாலும் இருந்து மெனக்கெடாமல் நதியை யும் கூட்டிக் கொண்டு போய் தனது வீட்டு வேலை களுடன் ஒன்றி விடுவாள்.

நதி நல்ல பிள்ளை. சொல்லுக் கேட்பாள். ஆனா லும் எனக்குக் கால்கட்டு மாதிரித்தான். முன்னரைப் போல நினைத்த மாத்திரத்தில் கடைக்கு அதுக்கு இதுக்கு என்று ஓட முடிவதில்லை. ஏதேனும் அவசரம் என்றா லும் வெளியின் குளிருக்கு ஏற்ப நதியை வெளிக்கிடுத்திக் கொண்டு புதையும் பனிக்குள் புஸ்செயரைத் தள்ளிக் கொண்டு போய் வருவதற்குள் போதும் போதும் என்றாகி விடும். இருந்தும் அலுத்துக்கொள்ளும் படியாக வும் இல்லை.

நதியோடு பொழுது போவதில் ஒரு அலாதியான சந்தோசம்தான். வானொலியோடும் கணினியோடும் மட்டும் பேசிக் கொண்டிருக்கக்கூடிய மனதின் அழுத்த மான மௌனங்களை நதியின் மழலை கலைத்துவிடும். எனது குழந்தைகளிடம் இருந்து எனக்குக் கிடைத்த அதி அற்புத பரிசுகளில் ஒன்றென நான் புளகாங்கிதம் அடை ந்து கொள்ளும் படியாகத்தான் நதி என் வீட்டிலும் என் மனசிலும் தவழ்ந்தாள்.

இப்போதெல்லாம் வாழ்க்கையே அவசரமாக விரைவது போன்றதொரு உணர்வு. காலையும் மாலை யும் திங்களும் வெள்ளியும் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக வேகமாக ஓடிக் கொண்டே இருப்பது போன்ற பிரமை. ஒவ்வொரு விடயத்தையும் செய்து முடிக்கும் வேகத்துக்கு முன் மணிகளும் நாட்க ளும் விரைந்து விடுகின்றனவே என்ற பரிதவிப்பு. இருந் தாலும் முன்னரைப் போன்ற அனாவசியச் சலிப்புகள் எப்படியோ என்னிடமிருந்து மறைந்திருந்தன.

பனி தாண்டி, குளிர் தாண்டி வீடு வந்து சேர்ந்த போது மெலிதான களைப்புத் தெரிந்தது. வெப்பமூட்டி யின் கதகதப்பு வீடு முழுக்கப் பரவியிருந்தது. அதிகாலை யிலேயே வேலைக்குப் போய்விட்டதால் இழுத்து விடப் படாதிருந்த யன்னல்களின் சட்டர்களை இழுத்து விட் டேன். மங்கலாக இருந்த வீட்டின் உட்புறம் சட்டென்று வெளிச்சமாகியது. ஆதவனின் ஆதிக்கத்தை விட வெண் பனியின் ஒளிர்வு தூக்கலாக இருப்பது போல இருந்தது. எதிர்வீட்டு மாது தனது வீட்டு ஜன்னலினூடு கை யசைத்தாள். புன்னகைகளும் கையசைப்புகளும் கூட மனதை வருடிவிடும் என்பதை இவர்கள்தான் எனக்கு அதிகமாக உணர்த்தினார்கள்.

வானொலியைத் தட்டி விட்டபோது கஜனி படத் தின் சுட்டும் விழிச் சுடரே.. பாட்டு இனிமையாக ஒலித் தது. இந்தப்பாட்டு நதிக்கும் பிடிக்கும். பாட்டுத் தொடங் கியதுமே தலையை அசைத்து அசைத்து ரசிப்பாள். இத் தனை தூரமான அவதானிப்பும் ரசிப்பும் இரண்டு வயது மழலையிடமே வந்துவிடும் என்பது என் குழந்தைகளை வளர்க்கும் போது எனக்குப் புரியவில்லை. நதி எனக்குப் பல ஆச்சரியங்களைத் தருவாள். இன்னும் சில நிமிடங் களில் வந்து விடுவாள்.

அதற்கிடையில் தேநீர் தயாரித்து நதிக்கான பாற் போத்தலுடன் வந்தமர்ந்த போது மருமகள் அவசரமாக வந்து நதியை என்னிடம் தந்து விட்டுப் பறந்தாள். அம்மா ஓடுகிறாளே, என்பதில் நதியின் முகத்தில் ஒரு மெல்லிய கவலை படர்ந்தது. சில வினாடிகள் வாசற் கதவையே பார்த்துக் கொண்டு நின்றவள், எனது கொஞ்சலில் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பினாள்.

பாலைக் குடித்ததும் இன்னும் உசாராகி வீட்டுக் குள் இயல்பாக தத்தித் தத்தி நடந்தாள். படுக்கையறைக் குள் சென்று லாச்சிகளைத் திறந்து ஆராய்ச்சிகள் செய் தாள். ஒரு லாச்சிக்குள் இருப்பதை எடுத்து இன்னொரு லாச்சிக்குள் போட்டாள். புத்தக ஷெல்பிலிருந்த புத்தக மொன்றை இழுத்தெடுத்த போது அதன் பாரத்துக்கு ஈடு

கொடுக்க முடியாது ´தொப்´பென விழுந்தாள். அப்ப டியே நிலத்திலிருந்து புத்தகத்தை விரித்து, படிப்பது போல பெரிய மனுசத் தோரணையுடன் புத்தகத்தைப் பார்த்தாள்.

அவள் இப்படிப் பராக்காக இருப்பதைப் பார்த்த தும் நான் கணினியின் முன் போய் அமர்ந்தேன். ஒரு கட்டுரை எழுதவேண்டும். பெண்கள்தினத்தை முன்னிட்டு கட்டுரையொன்று எழுதித் தரும்படி பத்திரிகையொன்று கேட்டிருந்தது. தருவதாகச் சொல்லி விட்டேன். ஆனால் இன்னும் எழுதுவதற்கான நேரம் வரவில்லை. வேலை, வீட்டுவேலை, சமையல்... என நேரங்கள் ஓடி விடுகின் றன. முன்னரைப் போல நினைத்த கையோடு இரவிர வாய் இருந்து எழுதி முடித்த காலங்கள் என்னைக் கடந்திருந்தன. இன்று எப்படியாவது எழுதிக் கொடுத்து விடவேண்டும். நாளை பேப்பர் பிறின்ற்க்குப் போகும்.

நான் கணினியின் முன் அமர்ந்ததைப் பார்த்ததும் புத்தகத்தைத் தள்ளிவிட்டு நதி தத்தித்தத்தி ஓடி வந்தாள். அவளுக்கு நான் கணினியின்முன் இருந்தால் பிடிக்காது. சிணுங்கிக் கொண்டு தூக்கச் சொன்னாள். அவளை மடியில் வைத்துக் கொண்டே சில இணையத்தளங்களை மேயத் தொடங்கியதில் நேரம் போனது தெரியவில்லை.

இனி மெதுவாகச் சமைக்கத் தொடங்கவேண்டும், என்று மூளை எச்சரிக்க, நதியுடன் குசினிக்குள் நுழைந் தேன். பாத்திரங்களை எடுத்து வைத்து, காய்கறிகளை வெட்டத்தொடங்கவே நதி கண்களைக் கசக்கிக்கொண்டு „அப்பம்மா.., தூக்குங்கோ“ மழலை பொழிந்தாள்.

ம்... அவளுக்கு நித்திரை வந்துவிட்டது. தூக்கித் தோளில்போட்டு முதுகை மெதுவாகத் தட்டினேன். ″கை வீசு.. அப்பம்மா, கை வீசு..″ என்றாள். கை வீசம்மா கை வீசு... பாடச் சொல்லிக் கேட்கிறாள். அது பாடி நிலா நிலா ஓடி வா... பாடிக்கொண்டு போக நித்திரையாகி விட்டாள். அவளைப் படுக்கையில் போட்டுப் போர்த்தி விட்டு ´மளமள´வென்று சமைத்து முடித்தேன்.

அத்தனை அவசரமாக நான் செயற்பட்டும் பாத் திரங்களைக் கழுவி முடிக்க முன்னர் தூக்கம் கலைந்து எழுந்து விட்டாள்.

„அப்...பம்...மா...‟ சிணுங்கலோடு கூப்பிட்டாள்.

„ஓமடா... என்ரை குஞ்சில்லே வந்திட்டன், வந் திட்டன்‟ ஓடிப்போய் தூக்கினேன்.

அப்படியே என் தோளில் சாய்ந்தாள். இனி இப் போதைக்கு குசினிப் பாத்திரங்களோடு மெனக்கெட முடியாது. நித்திரை கலைந்த இந்த நேரத்தில் சிறிது நேரத்துக்காவது என் மடியிலோ அல்லது தோளிலோ ஒய்யாரமாகச் சாய்ந்திருக்கத்தான் அவளுக்கு விருப்பம். அவளையும் தூக்கிக்கொண்டு போய் கணினியின் முன் அமர்ந்தேன்.

மடியில் நதியை வைத்துக் கொண்டு கணினி விசைப்பலகையைத் தட்டுவது கொஞ்சம் அசௌகரிய மாகத்தான் இருந்தது. சௌகரியம் பார்த்தால் இன்றும் எழுதி முடிக்க மாட்டேன். அதனால் அந்தக் கட்டுரையை எழுதத் தொடங்கினேன்.

ஏதாவது தினங்கள் வந்தாலே பத்திரிகைகளும் சஞ்சிகைளும் போட்டி போட்டுக் கொண்டு அவை பற்றிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள்.. என்று பிரசுரிப்பார்கள். இப்போதுபெண்கள்தினம். அது சம்பந்த மாகத்தான் எழுத வேண்டும்.

எதை எழுதினாலும் என்ன? சில விடயங்களில் முழுதான மாற்றங்கள் இன்னும் இல்லை. பல விடயங் கள் மாறிவிட்டனதான். ஆண்களும் சமைக்கிறார்கள் தான். பெண்களும் வேலைக்குப் போகிறார்கள்தான். ஆனாலும் சமையல் என்பது பெண்களினதுதான் என்ப தில் மாற்றம் இன்னும் வரவில்லை. ஆண்கள் வீட்டில் நின்றால் சமைப்பார்கள். பெண்கள் சமைக்கிறதுக்கா கவே வீட்டில் நின்றாகவேண்டிய அல்லது விழுந்தடித்து

வீட்டுக்கு ஓடி வரவேண்டிய நிலைமை.

ஐரோப்பியா வாழ் தமிழ்க் குடும்பங்களில் கூட இந்த நிலையில் பெரியளவான மாற்றங்கள் ஏற்பட வில்லை. அனேகமான ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் தனது வழமையான வேலை நேரத்தை விட சில நிமிடங் களே கூடச் செய்ய வேண்டிய நிலை வந்தாலும் பதறுகிறாள். பதட்டத்தில் வேலையிலான கவனத்தைச் சிதறடிக்கிறாள்.

இது பற்றிக் கண்டிப்பாக எழுத வேண்டும் என் றாலும் இந்தப் பிரச்சனையின் தார்ப்பரியத்தை ஒவ் வொரு தரப்பினரும் சரியான முறையில் புரிந்து கொள் ளக்கூடிய வகையில் எழுதுவதற்கு இன்றைக்குக் கிடைக் கும் நேரம் போதாது. அதனால் சமையலில் இருந்து இன்னும் சில வேலைகள் பெண்களுக்குத்தான் என்ற நிலை அடுத்த தலைமுறையிலாவது இல்லாமல் போகும் படியாக என்ன செய்யலாம் என்பதைக் கருவாகக் கொண்ட கட்டுரையை எழுதத் தொடங்கினேன்.

அது பெரிய நீண்டகட்டுரையாக வந்து விட்டது. 'உவ ஜேர்மனியிலை இருந்து பெண்ணியம் எழுதினாப் போலை இங்கை இந்தியாவிலை பெண் விடுதலை கிடைச்சிடுமோ' என்று யாராவது வலைப்பூக்களில் கிறுக்கி வைப்பார்கள்தான். அவர்களுக்கெங்கே தெரியப் போகிறது, ஜேர்மனியிலும் பெண்களுக்கு விடுதலை தேவைப்படுகிறது என்ற விடயம்.

எழுதியதை உடனேயே மின்னஞ்சல் மூலம் அனுப்புவதில் எனக்கு இஸ்டமில்லை. யாரோ ஒரு பிரபல எழுத்தாளர் "எழுதியதை ஊறுகாய் போடுவது போல வைத்து வைத்து எடுத்துத் திருத்தவேணும். அப்ப தான் அந்த எழுத்து நல்லா வரும்" என்று சொன்னது அடிக்கடி என் நினைவில் வந்து போகும்.

ஊறுகாய் போடுவது போல வைக்க முடியா விட்டாலும் சிலமணி நேரங்களுக்காவது வைத்து விட்டு

எடுத்துப் பார்த்தால் எழுத்துப் பிழைகள் ஏதாவது இருந்தால் தெரியும். திருத்திவிட்டு அனுப்பலாம் என்பது என் எண்ணம்.

நேரமும் ஒரு மணியாகி விட்டது. நினைத்ததை எழுதி முடித்து விட்டதில் என் மனதில் பெரியதொரு திருப்தி. அந்த நிறைவோடு நதிக்கு சாப்பாட்டைக் கொடுக்க நினைத்தேன். இன்று மருமகளையும் சாப் பிடச் சொல்லலாம் என்ற நினைப்பில் சோற்றையும் கறிகளையும் மேசையில் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தேன்.

தன்பாட்டில் விளையாடிக் கொண்டிருந்த நதி திடீரென மழலைதழுவக் கேட்டாள் „அப்பம்மா, அப்பா வுக்கோ சாப்பாடு? அப்பா இண்டைக்கு இங்கையோ சாப்பிட வருவார்?"

-25.3.2008
யுகமாயினி (May 2008)

அக்கரைப்பச்சைகள்

ரொறென்றோ மாநகரின் வீதியின் இருமருங்கிலும் கட்டிடங்கள் வானளாவ எழுந்திருக்க, வீதிகள் வாகனங்களால் நிறைந்திருந்தன. என் மகன் கார் கண்ணாடிகளினூடே உலகப் பிரசித்தி பெற்ற CN ரவரை தனது கமராவுக்குள் அடக்கிக் கொண்டிருந்தான். அவன் இப்படித்தான். கமரா கையில் கிடைத்தால் போதும். பாலு மகேந்திரா ஆகிவிடுவான்.

உயரங்களில் அழகு பிரதிபலிக்க, கீழே சாலையோரங்களில் உருண்டு கிடந்திருந்த கோலா ரின்களும் உருட்டிப் போடப்பட்டிருந்த அழுக்குப் பேப்பர்களும் கனடா மீதான எனது பிரமைகளை ஒவ்வொன்றாகக் களைந்து கொண்டிருந்தன.

´ஜேர்மனியின் சுத்தத்துக்கும் ஒழுங்குகளுக்கும் மத்தியில் கனடா எந்த மூலைக்கு வரும்‘ மனம் தன்னையறியாமலே ஒப்பீடு செய்யத் தொடங்கியது.

தற்போதெல்லாம் எந்த நாட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாலும் சட்டென்று இப்படியொரு எண்ணம் தோன்றி விடுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கிறது. எனது தாய்நாட்டுக்கு அடுத்தபடியாக நான் பல வருடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஜேர்மனியை நேசிக்கிறேன் என்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

ஆனாலும் எம்மவரில் பலர் ஜேர்மனியில் வதிவிட உரிமை கிடைத்ததும் லண்டனுக்கு ஓடி விடுவதும் கனடாவுக்கு ஓடி விடுவதும் நடக்காமலில்லை. புகலிட அந்தஸ்து கிடைக்காது என்று தெரியும் பட்சத்தில் இன்னொரு நாட்டுக்கு ஓடி, தம்மைக் காத்துக்கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் புகலிட அந்தஸ்து கிடைத்த பின் வருடக்கணக்காக வாழ்ந்த நாட்டைவிட்டு இன்னொரு நாட்டுக்கு ஓடுவது ஏதோ அக்கரைப் பச்சைத்தனமாகவே எனக்குத் தெரிந்தது.

மல்லிகாவும் அப்படிக் குடும்பமாக ஜேர்மனியை விட்டு ஓடிப் போனவர்களில் ஒருத்திதான்.

அது 1993ம் ஆண்டின் ஓர் நாள் என்றுதான் எனக்கு ஞாபகம். வேலை முடிந்து வீடு திரும்பும் போது இரவு எட்டுமணிக்கு மேலாகியிருந்தது. ரீன்ஏஜ் பருவக் குழந்தைகள் வீட்டில். வேலை முடிந்து விட்ட ரிலாக்ஸ் மனதில் இருந்தாலும் என் வரவுக்காய் காத்திருக்கும் பிள் ளைகள் பற்றிய கவலைகள், யோசனைகளுடன் பதட்ட மும் என்னிடம் இருந்தது. வீட்டுக்குள் நுழைந்த போது எனது சிந்தனைகளோடு ஒட்டாது வீடு இருந்தது. வர வேற்பறை கலகலப்பால் நிறைந்திருந்தது. மல்லிகாவும் அவளது கணவரும் அவர்களது ஐந்து குழந்தைகளும் சிரித்த முகங்களுடன் என்னை வரவேற்றார்கள். எனது குழந்தைகள் தமது படிப்பு, மற்றைய விடயங்கள் எல்லா வற்றையும் விட்டுவிட்டு அவர்களுடன் அளவளாவிக் கொண்டு இருந்தார்கள்.

வீட்டு உடைக்கு மாறி, எனது குழந்தைகளின் அன்றைய பொழுதுகள், தேவைகள் பற்றிய அளவளா வல்களுக்கான எனது சுதந்திரத்துடன் கூடிய சின்ன சந் தோசம் சட்டென என் கனவுகளிலிருந்து கலைய அவர்க ளது கலகலப்புடன் நானும் கலந்து கொண்டேன்.

மல்லிகா குடும்பத்தினது திடீர் விஜயம், அதுவும் முன்னறிவுப்பு ஏதுமின்றிய அந்தவரவு எனக்குள் கேள் விக்குறியாகவே குந்தியிருந்தது.

"ஏதாவது குடிச்சனிங்களோ? ரீ போடட்டோ?" என்ற போது எனது கணவர் அவசரமாக "பிறிட்ஜ்க் குள்ளை இருந்து இறால்பக்கற் எடுத்து வைச்சிருக்கிறன்" என்றார்.

´ம்.. சமைக்க வேண்டும். சாப்பிடாமல்தான் வந்தி ருக்கிறார்கள்.' அந்தநேரத்தில் சமைக்கவேண்டுமென்பது எனக்குச் சுமையாகவே தெரிந்தது. பிள்ளைகளுக்கும் கணவருக்குமான உணவை காலைவேலைக்குப் பின் சமைத்துவைத்து விட்டே மாலைவேலைக்குச்சென்றேன்.

இப்போது எனக்குத் தேவையாக இருந்தது பிள்ளைகளையும் கணவரையும் கவனித்து விட்டு ஒய்யாரமாக எனது சோபாவில் அமர்ந்து ஒரு தேநீர் அருந்துவதே. இருந்தாலும் மனசின் சோர்வை வெளி யில் தெரியவிடாமல் சில நிமிடங்கள் அவர்களோடு அளவளாவிவிட்டு எழுந்து குசினிக்குள் சென்றேன்.

பின்னால் தொடர்ந்து வந்த கணவர் "அவையள் நாளைக்கு இரவு கனடாவுக்குப் புறப்படுகினமாம். திரும்பி வாற எண்ணம் இல்லை. சொல்லிப் போட்டுப் போகத்தான் வந்திருக்கினம்" என்றார்.

எனது சோர்வு, களைப்பு எல்லாம் சட்டென என்னை விட்டுப் பறந்தன. நம்ப முடியாதிருந்தது. ஓரிரு தடவைகள் மல்லிகா கனடா பற்றி அங்கலாய்த்திருக் கிறாள்தான். எல்லாம் வெறும் பேச்சுக்குத்தான் என்று நினைத்திருந்தேன். ஒன்றிலிருந்து பத்தாம் வகுப்புவரை படித்துக் கொண்டிருக்கும் ஐந்து பிள்ளைகளின் படிப்பு கள், நட்புகள், இன்னும் எத்தனையோ விடயங்கள். எல்லாவற்றையும் குழப்பிக் கொண்டு புறப்படுவாள் என்ற எண்ணம் எனக்குக் கனவிலும் வந்ததில்லை.

"புட்டு விருப்பமோ, இடியப்பம் விருப்பமோ?" என வெளியில் சென்று மல்லிகாவைக் கேட்டேன்.

"இடியப்பம் எண்டால் இதுகள் வாயிலையும் வையாதுகள்" என்ற படி அவளும் எழுந்து குசினிக்குள் வந்தாள்.

"கனடாவுக்குப் போப்போறம். எல்லாம் சரிவந்திட் டுது. நீங்களும் இங்கை இருந்து என்ன செய்யப் போறி யள். வெளிக்கிடுங்கோ. ஒண்டாப் போவம்" என்றாள்.

இல்லை, என்னாலை ஏலாது. ஏழு வருசங்கள் இங்கை வாழ்ந்திட்டம். பிள்ளையள் இங்கை படிக்கினம். இதை எல்லாம் குழப்பிக் கொண்டு..."

"என்ன சொல்லுறிங்கள்? நீங்கள் எத்தினை வரு

சமா வாழ்ந்த உங்கடை நாட்டையும் ஊரையும் விட்டுப் போட்டு வந்தனீங்கள். இது பெரிய விசயமே? உங்கடை அவர் நீங்கள் ஓமெண்டால் வருவாராம். உங் களைச் சமாளிக்கிறது என்ரை பொறுப்பெண்டு சொல் லீட்டார். உங்கடை கையிலைதான் இருக்கு. வாங்கோ"

எனக்குத் தெரியுந்தானே எனது கணவரைப் பற்றி. தனக்குப் பிடிக்காத ஒன்றென்றால் என்னைச் சாட்டிவிட்டு தான் நல்ல பிள்ளைக்கு இருந்திடுவார். பரவாயில்லை.

இருப்பதில் நிலைப்படுவதிலேயே பிரியம் கொண் டவள் நான். அங்கு இங்கு என்று தாவுவதில் எனக்கு எப்போதுமே ஆர்வம் இருந்ததில்லை. அப்படி இருக்கும் போது நாடு விட்டு நாடு பாய என் மனத்தில் துளி எண்ணமும் இல்லை.

'போனால் இலங்கை. இருந்தால் ஜேர்மனி' இதற்கு மேல் கேட்க வேண்டாம் என்ற விதமாக, திட மாக எனது மறுப்பைத் தெரிவித்தேன். மல்லிகாவுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகவே இருந்தது. எப்படியாவது கதைத்து என்னை மாற்றலாமென்ற அவளது நம்பிக்கை தளர்ந்ததில் அவள் முகம் வாடிப்போயிற்று.

பிட்டும் இறால் பிரட்டலும் மதியம் வைத்த போஞ்சியும் கத்தரிக்காய் வதக்கல் குழம்பும் என்று எல்லோரும் ஒரு பிடி பிடித்தார்கள்.

எனது குழந்தைகளுக்கும் அவர்களது குழந்தைக ளோடு அரட்டையடிக்க முடிந்ததில் வலுவான சந்தோ சம். அவர்கள் புறப்பட இரவு11மணிக்கு மேலாகிவிட்டது.

வாசலில் நின்றும் "நல்லா யோசிச்சுப் போட்டு நாளைக்கு போன் பண்ணிச் சொல்லுங்கோ. நல்ல சந்தர்ப்பத்தை விட்டிடாதைங்கோ" என்றாள் மல்லிகா.

யோசிக்க எதுவுமே இல்லை. எனது முடிவு ஜேர் மனி அல்லது இலங்கைதான். இதில் எந்த மாற்றமும்

இல்லை, என்பதை நான் சொல்ல நினைத்தும் சொல்லா மலே கையசைத்து விடை கொடுத்தேன்.

இந்த மல்லிகாவின் வீட்டை நோக்கித்தான் நாம் கனடாவின் வீதியொன்றில் பயணித்துக் கொண்டிருந் தோம்.

அவர்கள் ஜேர்மனியில் இருந்த போது எனது கணவர்தான் அவர்களது வீட்டுக்கு அடிக்கடி சென்றிருக் கிறார். மல்லிகாவின் கணவரும் எனது கணவரும் ஏதோ ஒரு அமைப்பு ரீதியான நண்பர்கள்.

நான் ஒரேயொரு தடவைதான் அவர்கள் வீட் டுக்குச் சென்றேன். ஐந்து பிள்ளைகள் உள்ள பெரிய குடும்பம். மல்லிகாவைப் போலவே அழகான குழந்தை கள். வீடு விலையுயர்ந்த பொருட்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஆனாலும் எனது ரசனைக்குள் அகப்படாத ஏதோவொரு குப்பைத்தனம். மூலைகள், முடுக்குகளில் எல்லாம் கவனம் செலுத்தவில்லை என்று எண்ணும் படியாக சிலந்திப் பின்னல்கள். ஆங்காங்கு எறும்புகளின் ஊர்வலம். குசினிக்குள் முற்றுமுழுதாகக் கரப்பான் பூச்சி களின் இராச்சியம்.

"ஏன்?" தாங்க முடியாமல் கேட்டு விட்டேன்.

"அது தமிழாட்கள் எல்லாற்றை வீட்டிலையும் இருக்கும். அதுக்கு ஒண்டும் செய்யேலாது" என்றாள் மல் லிகா.

ஊரில் கரப்பான்பூச்சி தவிர்க்க முடியாததாய் இருக்கலாம். ஜேர்மனியில் அப்படியல்ல. ஜேர்மனியர் யாருடைய வீட்டிலும் கரப்பான்பூச்சிகளைக் காணவே முடியாது. இப்படியானவற்றை அழிப்பதற்கான மருந்து களும் வசதிகளும் இங்கு ஏராளம்.

வீட்டுக்குத் திரும்பும்போது எனது உடைகளோடு ஏதாவது வந்து விடுமா என்ற பயம் எனக்குள்ளே இருந் தது.

இனிமையானதொரு சந்திப்பைப் பற்றிய கனவுகளோடு அந்தக் கரப்பான்பூச்சிகளின் ஊர்வலமும் தவிர்க்க முடியாமல் நினைவில் வந்து கொண்டே இருந்தது. மூன்று வருடங்களின் பின் சந்திக்கப் போகிறோம்.

எப்படி இருப்பார்கள்? பிள்ளைகள் வளர்ந்திருப்பார்களோ? என்ற பல கேள்விகளுடன் அவர்களது வீட்டைச் சென்றடைந்தோம்.

வரவேற்பு இனிமையாக, சந்தோசப் படுத்தியது. மல்லிகா எப்போதும் போல் அழகாகவே இருந்தாள். பிள்ளைகள் ஒரு படி வளர்ந்திருந்தார்கள். தோசை, இட்லி, பிட்டு.. என்று சாப்பாடு அமர்களமாக இருந்தது.

சாப்பிட்டுவிட்டு, சோபாவில் அமர்ந்தபோதுதான் கவனித்தேன். காலடியில் கரப்பான்பூச்சி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென மகன் கீச்சிட்டான்.

பார்த்தால், சுவரில் எனது தலைக்கு மேலே கரப்பான் பூச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன.

-13.2.2009
யுகமாயினி (April 2009)

தீர்வுகள் கிடைக்குமா?

***வீ**ட்டுக்குள் நுழைந்த போது வழமையாக கணினிக்கு முன்னால் உட்கார்ந்து இணையத்தில் உலகம் முழுவதும் அரட்டை அடிக்கும் என் கடைக்குட்டி வரவேற்பறையில் France 98, உலக வெற்றிக்கிண்ண கால்பந்துப் போட்டி பார்த்துக் கொண்டிருந்தான். நான் வந்ததே தெரியாத அளவுக்கு விளையாட்டு வீரர்களி டமும் அவர்களிடம் உதைபடும் பந்திடமும் தன்னை மறந்து ஊன்றிப் போயிருந்தான். அவனுக்கு அருகில் இருந்து France 98 ஐப் பார்த்துக் கொண்டிருந்த என் கணவர் மட்டும் திரும்பி கேள்விக் குறியுடன் என்னை நோக்கினார்.*

'என்ன வேலை முடிஞ்சு வழக்கம் 20.10க்கே வந்திடுவாய். இண்டைக்கென்ன, அதுவும் இந்த இரவு நேரம் 21 மணி தாண்டி..." என்பது போல் இருந்தது அவரது நோக்கல்.

நான் மெல்லிய சிரிப்பை மட்டும் உதிர்த்துவிட்டு நேரே எனது அறையுள் போய் உடைகளை மாற்றி, குளியலறைக்குள் புகுந்து கொண்டேன். தண்ணீரை அள வான சூட்டில் விட்டு சவரைப் பிடித்த போது உடம் புக்கு இதமாக இருந்தது. ஆனாலும் மனதுக்குள் இன்னும் புழுக்கமாகவே இருந்தது.

வேலை முடிந்து என் சக வேலையாட்களுடன் பேரூந்துக்காக விரைந்தபோது எனது ஸ்வெபிஸ் ஹால் நகரம் கோடைகாலத்துக்கே உரிய கலகலப்புடன் தெரிந் தது. ஆங்காங்கு உணவுச்சாலைகளின் முன்பும் சிற்றுண் டிச் சாலைகளின் முன்பும் ஐஸ்கிரீம் கடைகளின் முன்பு மாக பெரியவர்கள், சிறியவர்கள், காதலர்கள், நண்பர் கள் எனப் பலரும் கும்பல் கும்பலாக இருந்து எதையா வது சுவைப்பதுவும் கதைப்பதுவும் சிரிப்பதுவுமாக இருந் தார்கள். வீதிகள் கண்பார்த்துக் கதைபேசும், உதட்டோடு உதடுரசும், இடை வளைத்து உடல் உரசித் தமைமறந்து

செல்லும் ஜோடிகளும் ஆங்காங்கு சிறுவர்கள் சிறுமியர் ளும் என்று நிறைந்திருந்தது.

விருட்சமாக விரிந்திருந்த கஸ்தானியன் மரங்க ளில் வெள்ளைப் பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத் திருந்தன. இன்னும் ஒரு மாதத்தில் கஸ்தானியன் காய் கள் காய்த்து விடும்.

வீதியோரங்களில் சிவப்பாய், வெள்ளையாய், மஞ்சளாய் என்று பல வர்ணங்களில் மலர்கள் சிரிக்க, இதமானகாற்று உடலைவருட வேலை முடிந்து விட்டது, இனி வீட்டுக்குத்தானே என்ற நினைப்புடன் நடக்கை யில் சந்தோசமாக இருந்தது.

கதையும் பகிடியும் சிரிப்புமாய் வந்த நானும் என் சக தோழியரும் பேரூந்துத் தரிப்பிடத்துக்கு வந்ததும் பிரிந்து எமக்கெமக்கான பேரூந்துகளை நோக்கி நடந் தோம்.

மைக்கல் தேவாலய மணிக்கூடு எட்டு முறை அடித்து ஓய்ந்தது. பக்கத்திலிருந்த பெயர் தெரியாத மரத்தின் வெள்ளைப் பூக்கள் என்னை ஈர்த்தன. அந்தப் பூக்களில் லயித்துப் போய் நின்ற என் மனதையும் கண் களையும் வலுக்கட்டாயமாக பேரூந்தின் பக்கம் திருப்பி பேரூந்தில் ஏற முற்பட்ட போதுதான் பேரூந்து நிலையத் துக்கு அருகில் வீதியோரமாக இருந்த மரவாங்கிலில் மல்லாக்காகப் படுத்திருந்த அவன் என் கண்களில் தென் பட்டான். அவன் படுத்திருந்த விதம் வித்தியாசமாகவே இருந்தது.

அவன் யாரோ அல்ல. எனதுநாட்டவன். எனக்கு என்ன செய்வதென்று தெரியாத தடுமாற்றமாய் இருந் தது. சொற்ப விநாடிகளில் எனது பேரூந்து புறப்படப் போகிறது.

என்ன செய்வது..? எனது நாட்டவன் ஒருவன் அப்படி இருக்க பாராமுகமாய் சென்று விடவும் மனசு

ஒப்புக் கொள்ளவில்லை.

என்ன பிரச்சனையாக இருக்கும்? அவன் போக வேண்டிய இடத்துக்கான பேருந்து வந்திருந்தும் அவன் அதைப் பொருட்படுத்தாது ஏன் அப்படி? ஏதாவது சுக வீனமோ..? எனக்குள் குழப்பமான கேள்விகள் எழுந்தன.

என்னைச் சட்டை செய்யாது எனது பேருந்து புறப்பட்டு விட்டது. சற்று நேரத்துக்கு முன்னர் இருந்த சந்தோசத்தில் ஏதோ குறைந்து விட்டது போலிருந்தது. நான் அந்த வாங்கிலை நோக்கி நகர்ந்தேன்.

அருகில் சென்றதும் அவன் என்னைக் கண்டு திடுக்கிட்டு தட்டுத்தடுமாறி எழுந்தான். கையில் இருந்த பியர் பேணியை அவசரமாய் பின்பக்கம் மறைத்தான். அக்கா..! என்று சங்கடப் பட்டான்.

எனக்கு அவனது கோலம் ஆச்சரியமாகவும் நம்ப முடியாததாகவும் இருந்தது. பத்து வருடங்களாக நான் வாழும் இந்த ஸ்வெபிஸ் ஹால் நகரில் என்னையும் என் கணவரையும் எனது பிள்ளைகளையும் விட்டால் மருந்துக்குக் கூட வேறு தமிழர்கள் இருக்கவில்லை. இரண்டு வருடங்களின்முன்புதான் 1989வரை அமெரிக்க இராணுவத்தினரின் முகாமாக இருந்த Dolan Barracks, அகதிகள் முகாமாக்கப்பட்டு அங்கு பல்வேறு நாட்டு அகதிகளோடு நாற்பது தமிழர்களும் குடியமர்த்தப் பட்ட னர். அவர்களுள் இப்போ என் முன்னால் பியர் பேணி யோடு நிற்கும் கோபுவும் ஒருவன்.

எமது நகரத் தினசரிப் பத்திரிகையொன்றில் நாற் பது தமிழர்களின் வரவு செய்தியாக வந்தபோது, எமது நகரில் தமிழரா, என்று மனசு சந்தோசத்தில் துள்ள குடும்பமாகச் சென்று அவர்களைச் சந்தித்திருந்தோம்.

கோபுவையும் அன்றுதான் முதன் முதலாகச் சந்தித்தோம். மிகவும் அடக்கமானவனாகக் காணப் பட் டான். அவன் தாயகத்திலிருந்து புறப்பட்டதில் இருந்து

பாங்கொக், உக்ரையின்.. என்று ஏஜென்சியால் அலைக் கழிக்கப்பட்டு, உக்ரையின் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டு, சில வருடங்களோடு, தனது வாழ்க்கையின் சில வசந்தப் பொழுதுகளையும் தொலைத்திருந்தான்.

அவனிடம் மட்டுமல்ல. வந்திருந்த நாற்பது பேரிட மும் விரக்தியான சோகமான உண்மைக்கதைகள் பல இருந்தன. அவர்களுக்குள் இவன் படித்த, பண்பான குடும்பத்திலிருந்து வந்த ஒருவனாகவே தெரிந்தான். தந்தை பாடசாலை அதிபர் என்றான்.

அவனைப் பின்பும் பலமுறை சந்தித்திருக்கிறேன். ஓரளவு தேறியிருந்தான். பொறுப்புள்ளவனாக ஊர்க் கனவுகளைச் சுமந்தவனாக வேலை தேடிக் கொண்டிருந் தான்.

சிலமாதங்களின்பின் மீண்டும் ஒருமுறை சந்தித்த போது பிற்சாக்கடை ஒன்றில் நிலத்தைக் கழுவிக் கொண்டிருந்தான். என்னைக் கண்ட போது வெட்கப் பட்டு ஒழித்தான்.

"இதிலை ஒண்டும் வெட்கமில்லை. அடுத்தவன் கையை எதிர்பார்க்காமல் அடுத்தவனை ஏமாற்றாமல், யாருக்கும் தீங்கு விளைவிக்காத, உங்களாலை முடிஞ்ச வேலையை நீங்களே செய்து பணம் சம்பாதிக்கிறது ஒண்டும் வெட்கமான விசயமில்லை" என்றேன். அதன் பின்னர் அவன் நிலம் கழுவிக் கொண்டிருக்கும் போது என்னைக் கண்டாலும் கூச்சப்படாமல் "அக்கா" என்று கூப்பிட்டு "வணக்கம்" சொல்லுவான்.

அப்படிப் பண்போடும் மரியாதையோடும் பழகும் அடக்கமான, பொறுப்பான கோபுவைத்தான் எனக்குத் தெரியும். இன்று இப்படி குடிபோதையில் தோய்ந்து போயிருந்த கோபு எனக்கு முற்றிலும் புதியவன்.

"என்ன கோபு, ஏன் இன்னும் வீட்டை போகே ல்லை? உங்கடை பஸ்ஸில்லோ வெளிக்கிடப் போகுது?"

‟இல்லை அக்கா, போப்போறன்... என்று தடு மாறியவன்

‟நீங்கள் போங்கோ அக்கா நான் அடுத்த பஸ் ஸிலை போறன்‟ என்றான்.

‟இல்லை, மெனக்கெடாமல் இப்பவே ஓடிப் போய் அந்த பஸ்ஸிலை ஏறி வீட்டை போய்ச் சேருங்கோ‟ என்றேன்.

அவன் எனக்குத் தெரியக் கூடாது என்ற பிரயத்தனத்துடன் கையிலிருந்த பியர்பேணியை மெது வாக அவனருகில் நாட்டப்பட்டிருந்த குப்பைவாளியினுள் போட்டான்.

நான் கண்டும் காணாத மாதிரி நின்றேன். அதற் கிடையில் அவனது பேருந்தும் போய் விட்டது.

‟பார்த்திங்களே, இப்ப பஸ்ஸை விட்டிட்டிங்கள்‟

‟வீட்டைபோயும் என்னத்தைச் செய்யிறதக்கா?‟

‟இந்த ரோட்டிலை நிண்டு மட்டும் என்ன செய்யப் போறிங்கள்? நாளைக்கு வேலையில்லையோ? ‟

‟இல்லை நான் வேலையை விட்டிட்டன்‟

‟ஏன்? அப்ப காசுக்கு என்ன செய்யிறிங்கள்? அம்மாக்கு காசு அனுப்பினனிங்களோ? அக்கான்ரை தாலிக்கொடியை அத்தானுக்கும் தெரியாமல் அடைவு வைச்சில்லே உங்களை இங்கை அனுப்பினவையள். மறந்திட்டிங்களோ?‟

அவன் தள்ளாடியபடி மௌனமாய் நின்றான்.

நான் மேற்கொண்டு எதுவும் கேளாது ஒரு ரக்சி யில் ஏற்றி அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்.

இரவு நேரமாதலால் ஒரு மணி நேரம் கழித்தே எனது அடுத்த பேரூந்து வந்தது.

வழியெல்லாம் ´ஏன் இவன் இப்படியானான்?´ என்ற கேள்வி என்னைக் குடைந்து கொண்டே இருந் தது. அவன் மீது கோபமாகக் கூட இருந்தது.

பேரூந்துத்தரிப்பிடத்தில் எத்தனை பேர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். எல்லோருக்கும் அவன் எனது நாட்டவன் என்பது புரிந்திருக்கும். அவமானம் அவனுக்கு மட்டுமா? அல்லது அவனுக்கும் எனக்கும் மட்டுமா? எங்கள் நாட்டுக்கும் அல்லவா! தமிழரையே கேவலமாக நினைப்பார்களல்லவா!

ஏன் இப்படி எம்வர்கள் மாறிப் போகிறார்கள் என்று யோசித்ததில் எரிச்சலாகவும் மனசுக்குள் புகைச்ச லாகவும் இருந்தது. வெளிநாட்டுக்கு வந்து எமது இளையவர்கள் கெட்டுப் போகிறார்கள் என்ற சிலரின் வாய்ப்பாட்டை உண்மையாக்குவது போலல்லவா இவன் நடந்து கொண்டிருக்கிறான்.

குளித்துமுடித்து வெளியில் வந்தபோது காற்பந்து மிகவும் சுவாரஸ்யமாகப் போய்க்கொண்டிருந்தது. தேநீர் தயாரித்து கணவருக்குக் கொடுத்த போது கண்களைத் தொலைக்காட்சியில் இருந்து விலத்தாமலே தேநீரை வாங்கிச் சுவைக்கத் தொடங்கினார்.

கோபு ஒழுங்காக வீடு போய்ச் சேர்ந்து விட் டானா என்பதை அறிந்து கொள்வதற்காக, நான் எனது தேநீரை உறிஞ்சிய படியே தொலைபேசியில் கோபுவின் வீட்டு இலக்கத்தை அழுத்தினேன். அவனோடு கூட வாழும் அவனது நண்பன்தான் அழைப்பில் வந்தான்.

“கோபு வாந்தி எடுத்திட்டுப் படுத்திட்டான்“ என்றான். அவனிடம் கோபுவைப்பற்றி விசாரித்த போது முதலில் சங்கடப்பட்டு எதையும் சொல்லாது மழுப்பிய வன் பின்னர் சொல்லத் தொடங்கினான்

"என்னத்தைச் சொல்லுறது அக்கா, இவனுக்கு அங்கை ஊரிலை ஒரு காதலி இருக்கிறாள். அவளை இங்கை வந்த உடனை கூப்பிடுறதாச் சொல்லிப் போட்டுத்தான் இவன் இங்கை யேர்மனிக்கு வந்தவனாம். பாங்கொக், மொஸ்கோ எண்டு அலைஞ்சதிலை அங்கை அவளுக்கு ஒழுங்கா கடிதம் ஒண்டும் போகேல்லை. பிறகு இரண்டு வருசம் உக்ரையினிலை ஜெயில்லை இருந்த விசயம் உங்களுக்குத் தெரியும்தானே. அந்த நேரம் இவனைப் பற்றி ஒரு தகவலும் அங்கை ஒருத்தருக்கும் கிடைக்கேல்லை. அவன் ஒரே அவளின்ரை நினைவாத்தான் இருந்தவன். ஆனாலும் அவள் இவனை நம்புகிறாள் இல்லை. அவள் நினைச்சிட்டாள், இவன் இவ்வளவுகாலமும் இங்கை யேர்மன்காரியோடை சுத்திப் போட்டு இப்ப அலுத்துப் போக தனக்கு ரெலிபோன் அடிக்கிறான் எண்டு. இவன் ரெலிபோன் அடிச்சாலே, „வையடா ரெலிபோனை" எண்ட பதில்தான் வருது. நானும் இவனுக்காண்டி அவளோடை கனதரம் கதைச்சுப் பார்த்திட்டன். ஒண்டுமே சரிவரேல்லை. இவனுக்கு ரெலிபோன் காசு தலைக்கு மேலை ஏறினதுதான் மிச்சம்.

இப்ப இங்கையிருந்து ´காட்' கிடைச்ச வேறை ஒருவன் அங்கை போயிருக்கிறானாம். அவனுக்கும் அவளுக்கும் கல்யாணம் நிச்சயமாகிட்டுதாம். அந்த விரக்தியிலைதான் இவன் இப்படியாப் போனான்"

எனக்குக் கோபுவின் நிலைமை புரிந்தது. ஆனால் புலம் பெயர்ந்தவர்களின் இப்படியான அவலங்களை தாயகஉறவுகளுக்கு எப்படிப் புரியவைக்கலாம் என்பது தான் புரியாமல் இருந்தது.

-10.4.1999
Thinnai.com

விவாகரத்து

யன்னலினூடு தெரிந்த கஸ்தானியன்மரங்களோ, அதை அசைத்துக் கொண்டு வந்த தென்றலோ இன்று யாரையும் இதமாகத் தழுவவில்லை. றோசியின் புறு புறுப்பும் கரகரப்பும் இடையிடையே தெறித்து விழுந்து கொண்டிருந்த அநாகரிகமான வார்த்தைகளும் அறையி லிருந்த எல்லோரையும் ஓரளவுக்கு மௌனிகளாக்கி விட்டிருந்தன.

அவளது தொணதொணப்பு அவளருகில் இருந்த எனக்குத் தாங்கவில்லை. வந்ததிலிருந்து கீறுபட்ட கிராம போன் (gramophone)போல ஒன்றையே சொல்லிக் கொண்டிருந்தாள். எள்ளும் கொள்ளும் அவளது முகத் தில் வெடித்துக் கொண்டே இருந்தன.

எனக்கு இதற்கு மேல் கேட்க முடியவில்லை என் பதை அவளுக்கு உணர்த்துவதற்காக இரண்டாவது தட வையாகவும் எழுந்து சென்று தேநீர் போட்டு, குசினிக் குள்ளேயே நின்று குடித்து விட்டு வந்தேன்.

வந்து இருந்ததும் மீண்டும் தொடங்கி விட்டாள். "இந்தமுறை நான் தீர்க்கமான முடிவெடுத்திட்டன். அந் தப் பன்றியை எப்பிடியாவது விவாகரத்துச் செய்யப் போறன். என்ன நினைக்கிறான் அவன். சரியான இடியட்..."

அவள் பன்றி என்றது அவளதுகணவனைத்தான். என்னிடம் ஸ்வைனுக்கான(Schwein) தமிழ்ச் சொல்லை தனது கணவனைத் திட்டுவதற்காகவே கேட்டுப் பாட மாக்கி வைத்திருக்கிறாள்.

வழமை போலவே நேற்று மதியமும் இவள் சமைத்த பன்றிப்பொரியலும் உருளைக்கிழங்கு சலாட்டும் அவனுக்குப்பிடிக்கவில்லையாம். பிடிக்காததற்குக்காரணம்

சுவை சம்பந்தமானதல்ல. முதல்நாளிரவு அவன் குடித்து விட்டுத் தள்ளாடிக் கொண்டு வந்ததால், இவள் நாய்க் கத்தல் கத்தி விட்டு அவனை வரவேற்பறையில் படுக்க விட்டிருக்கிறாள். அதற்கான பழி தீர்ப்புத்தான் அது.

பன்றிப்பொரியல் பிடிக்கவில்லையென்று அவன் சாப்பிடாமல் போயிருந்தால் இவளுக்கு இத்தனை தூரம் கோபம் ஏற்பட்டிருக்காது. நானும் இந்தத் தொண தொணப்பில் இருந்து தப்பியிருப்பேன். அவன் அதைச் சாப்பிட்டுக் கொண்டே இவளது முக அலங்காரத்தைப் பற்றி நையாண்டியாகச்சொல்லியிருக்கிறான். ''உன்னை விடக் குரங்கு வடிவு'' என்று நெளித்தும் காட்டி இருக் கிறான். அதுதான் இவளை உச்சக்கட்டக் கோபத்துக்குத் தள்ளியிருக்கிறது.

''நாளையிலை இருந்து எனக்கு விடுதலை. அப்ப பாரன் இவன் எவ்வளவு பாடுபடப்போறான் எண்டு..'' மீண்டும் தொடங்கினாள்.

''இப்ப நீ இதை எத்தனையாவது தரம் சொல் லிப் போட்டாய்? நூறாவது தடவையா? இருநூறாவது தடவையா? அல்லது ஆயிரமாவது தடவையா?'' இரண் டாவது மேசையிலிருந்த றெகீனா எரிச்சலும் கோபமும் பீறிட கேலித் தொனியில் கேட்டாள்.

''நீ சும்மாயிரு. அந்த ஸ்வைனைப் பற்றி உனக் கென்ன தெரியும். இதுக்கு மேலையும் என்னாலை அவ னோடை வாழேலாது. நான் தீர்க்கமான முடிவுக்கு வந்திட்டன். கண்டிப்பா அவனை விவாகரத்துச் செய்யப் போறன்'' றோசி கோபம் தொனிக்கக் கூறினாள்.

''எனக்கு உன்ரை கணவனைத் தெரியுமோ இல் லையோ, உன்னை நல்லாத் தெரியும். உன்னோடை வேலை செய்யிற இந்தப் 13 வருசத்திலை.. நான் நினைக்கிறன், ஆயிரம் தடவைக்கு மேலை உன்ரை கணவனை விவாகரத்துச் செய்யிறதாய் சொல்லிப்

போட்டாய். ஆனால் இன்னும் செய்யேல்லை. நான் உனக்குச் சொல்லக் கூடியது என்னெண்டால் உடன டியாக விவாகரத்தைச் செய். அப்பதான் நாங்கள் தொடர்ந்து இந்த வேலையிலை இருக்கலாம். இல்லை எண்டால் உன்ரை தொணதொணப்பைக் கேட்டே எங்களுக்குத் தலை வெடிச்சிடும்''

''ஏ...ய். கத்தாதை. என்ரை புருசன் எனக்குக் கடுப்பேத்தினது காணும். நீயும் பிறகு என்ரை எரிச் சலைக் கிளறாதை. இந்த முறை கண்டிப்பா விவாக ரத்துத்தான். நான் வீடுகூடப் பார்த்திட்டன். தளபாடங் கள்தான் பிரச்சனை. அதுகளை நான் வங்கியிலை கட னெடுத்தாவது வாங்கிப் போடுவன்.''

இம்முறை அவள் சொல்வதைப் பார்த்தால் நிய மாகவே விவாகரத்து செய்துவிடுவாள் போல இருந்தது. நாளைக்கே வீடு மாறக்கூடிய விதமாக ஒரு நண்பி அவளது வீட்டின் மேல் மாடியை ஒதுக்கிக் கொடுத்து விட்டாளாம். என்ன இருந்தாலும் பதின்மூன்று வருடங் களாக என்னோடு வேலை பார்க்கிறாள். அவளைச் சமாதானப்படுத்தி விவாகரத்து எண்ணத்திலிருந்து மீட்க வேண்டும். மனம் எண்ணிக் கொண்டது.

''இஞ்சை பார். விவாகரத்துச் செய்து போட்டுத் தனிய வாழுறது மட்டும் பெரிய நல்ல விசயமெண்டு நினைக்கிறியே. மொக்குவேலை பார்க்காமல் நல்லா யோசிச்சு ஒரு முடிவெடு. விவாகரத்து எண்டிறது விளையாட்டில்லை''

''நான் நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தனான். இவனோடை என்னாலை வாழேலாது''

''விவாகரத்துச் செய்துபோட்டு எத்தினை காலத் துக்குத் தனிய வாழப் போறாய், அடுத்ததா கிடைக்கப் போறவன் இவனைவிட நல்லவனா இருப்பான் எண்டிற துக்கு என்ன உத்தரவாதம்?''

“சும்மா பேய்க்கதைகதைக்காதை. இவனை விடக் கூடாதவன் இந்த உலகத்திலையே இருக்க மாட்டான்”

அந்த நேரம் அவளோடு தொடர்ந்து கதைப்பதில் எந்தப் பயனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என்ன நடக்குமோ, என்று மனது சற்று அச்சப் பட்டது. அவள் தொடர்ந்தும் தொணதொணத்துக் கொண்டே இருந்தாள்.

கலகலப்பாகக் கழிய வேண்டிய எங்கள் வேலை நேரம் இவளது தொண தொணப்பில் விரயமாகக் கரைந்து போனது. வேலைகள் கூடச் சரியானமுறையில் முடியவில்லை.

நேற்றைய சண்டை காரணமாக “காரைத் தொடக் கூடாது” என அவன் சொல்லி விட்டானாம்.

அவசரமாய் ஜக்கெற்றைப் போட்டுக் கொண்டு கைப்பையையும் கொழுவிக் கொண்டு சூஸ்(bye bye) சொல்லிய படி எங்களுக்காகக் காத்திராமல் லிப்றுக்குள் புகுந்து கொண்டாள். பேரூந்தைப் பிடிக்க வேண்டும் என்ற அவசரம் அவளுக்கு. அவளை விட அவசரமாய் லிப்ற் இறங்கியது.

நானும் மற்றவர்களும் நிதானமாக எமது ஜக்கெற்றுகளைப் போட்டுக் கொண்டோம். அவளுக்காக ஒரு சிலர் பரிந்துரைத்து அவளது கணவனை மனங்கொண்ட மட்டும் திட்ட… ரெகினா மட்டும் உதட்டைநெளித்துச் சிரித்தாள்.

“இப்பத்தான் காதுக் குடைச்சல் தீர்ந்தது. பிறகு நீங்களும் தொணதொணக்காதைங்கோ” என்றாள்.

ஒருவரும் யன்னலைப் பூட்டுவதாகத் தெரிய வில்லை. ´வளவளா´ என்று கதை அளப்பதிலேயே குறி யாக இருந்தார்கள்.

கஸ்தானியன் மரங்களின் அசைவில் யன்னல் சேலைகள் ஆடிக்கொண்டே இருந்தன. ஓடிச் சென்று யன்னலைப் பூட்ட முனைந்த நான், ஏதோ ஒரு ஈர்ப்பில் வெளியில் எட்டிப் பார்த்தேன்.

ம்... யாரது? யன்னலுக்கு நேரே கீழே... பெரிய பூங்கொத்து ஒன்று கைகளில் மலர்ந்திருக்க, றோசியும் அவளது கணவனும் உதட்டோடு உதடு பதித்து... இறுக அணைத்து.. நான் கண்களைக் கசக்கிப் பார்த்தேன். அவர்களேதான்.

´என்னை மன்னிச்சுக்கொள்´ என்ற வாக்கியம் பூங்கொத்தில் சொருகப் பட்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

என் காதுகளுக்குள் இன்னும் அவளது தொண தொணப்பு ஒட்டிக் கொண்டே இருந்தன. அவர்களோ ஒருவரின் இடுப்பை ஒருவர் கைகளால் வளைத்த படி நடக்கத் தொடங்கினார்கள். இடையிடையே கண்களால் நோக்கி உதடுகளைக் கவ்வி... உலகின் அதி அற்புதமான காதல் ஜோடிகளில் ஒரு ஜோடி போல...

திரும்பினேன்.

இவர்கள், அதுதான் எனது சக வேலைத் தோழி யர் றோசியின் விவாகரத்துப் பற்றி அனுதாபத்தோடும் அது சரியா, பிழையா என்பது பற்றி அக்கறையோடும் விவாதித்துக் கொண்டு லிப்றை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

-12.9.2004

Pathivukal.com

பயணம்

இன்று புகையிரதத்தில்தான் பயணிக்க வேண்டு மென நேற்றிரவு முடிவான பொழுதே எனக்குள் மெல் லிய சந்தோச அலை அடிக்கத் தொடங்கி விட்டது. எனது கணவர் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்துக்கு வேளைக்கே போய் முடிக்கவேண்டிய வேலைகள் இருக் கிறதாம். அதனால் அதிகாலையிலேயே தான் காரில் போய் விடுவதாயும் என்னை பின்னர் புகையிரதத்தில் வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

எப்போதும் இந்தக் காரில்தானே..! அதுவும் அதி வேக வீதியில் அவசரமாய் பயணிப்பது. நீண்ட பொழுது களின் பின் புகையிரதத்தில் பயணிக்க இப்படியொரு வாய்ப்பு என்றதும் உண்மையிலேயே எனக்குச் சந்தோ சந்தான். எனக்குத் தேவையான எல்லாவற்றையும் காருக்குள்ளேயே அடைத்து அனுப்பி விட்டேன். சிறிய கைப்பையுடன் ஒரு கொப்பியும் பேனையுமாக ஏறிய போது புகையிரதத்தினுள் யன்னலோரமாக இருக்கை கிடைத்தது. மனசுக்குள் சந்தோசம் துள்ளியது.

வெயிலின் முறைப்பும் இல்லாமல், குளிரின் குத்தலும் இல்லாமல் காலைச் சிலிர்ப்போடு இயற்கை கண்களை இதமாக வருடியது. காற்று யன்னல் வழி மேனியைத் தழுவியது. இயற்கையை ரசித்த படி மனசு ஏகாந்தத்தில் சுகிக்கத் தொடங்கியது. புகையிரதம் தாலாட்டியது. வெளி அழகாய்... மரங்கள் எல்லாம் அவசரமாய் நகர்ந்து கொண்டிருந்தன. குருவிகள் கெந் துவதும் ஏதோ நினைத்து விட்டு மீண்டும் பறந்து மரங் களில் குந்துவதுமாய் இருந்தன. கவிஞர். சோலைக்கிளி இதைக் கண்டால் கட்டாயம் ஒரு குருவிக்கவிதை புனைந்திருப்பார். எனக்கும் ஏதேதோ மனசுக்குள்பூத்தன. கவிதையாய் வடிக்க வார்த்தைகள்தான் வர மறுத்தன.

´இனிது இனிது ஏகாந்தம் இனிது´

ஔவைப் பாட்டியின் வரிகளின் அர்த்தம் புரிந்தது.

திடீரென்று, புரியாத ஏதோ ஒரு பாசையில் யாரோ கதைக்கும் பெரிய சத்தம் கேட்டது. ம்... புகையிரதம் நின்றது கூடத் தெரியாமல் நான். அதற்கிடையில் அடுத்த தரிப்பு நிலையம் வந்து விட்டது. ஏறுவோரும் இறங்குவோரும் தத்தமது திசைகளில் விரைய ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த சில பெண்களும் ஒரு ஆடவனும் தமது உயர்ந்த குரல்கள் மற்றவர்களைத் தொந்தரவு செய்யுமே என்ற எந்தவித பிரக்ஞையுமின்றி அடிக்குரலில் உரத்துப் பேசியபடி நானிருந்த பெட்டியினுள் ஏறினார்கள்.

நான் மீண்டும் யன்னல் வழி பார்வையைச் செலுத்தி இயற்கையுடன் ஐக்கியமாகினேன். மனசுக்குள் இனிமையான கவிதையொன்று பிரசவமாவது போன்றதொரு மகிழ்வான உணர்வு. சோதியா, சோலைக்கிளி... போன்றோரின் கவிதைகள் இப்படியான சந்தர்ப்பங்களில் தான் பிரசவித்தனவோ! விஜயராகவனின் நுங்குக் கவிதை அடிக்கடி மனசுக்குள் எட்டிப்பார்த்தது. அவருக்கு கவிதையை அழகாக வாசிக்கவும் தெரியும். ஒரு தரம் அவரது நுங்குக் கவிதையை ஐபிசி-தமிழ் வானொலியில் கேட்டு விட்டு இரவெல்லாம் ஒரே நுங்குக் கனவு. பாட்டா சீக்காய்களை எல்லாம் ஒரு பக்கமாய் ஒதுக்கி விட்டு, தன் வீட்டு முன்றலில் நின்ற ஒற்றைப் பனையிலிருந்து கந்தசாமியைக் கொண்டு இறக்குவித்த பருவ நுங்கைப் பக்குவமாய் சீவி பெருவிரலால் குத்தி, இழுத்து பனைமுகிழில் விட்டு... ம்...ம்... நாக்கில் சுவை நரம்புகள் சுரந்து...

பக்கத்தில் அடிடாஸ் ஆஃப்ரர்சேவின் வாசனை கமகமக்க "ஹலோ" என்றது ஒரு குரல். நுங்கை அப்படியே அந்தரத்தில் விட்டு விட்டு நிமிர்ந்து பார்த்தேன். சற்று முன்னர் வந்த ஆபிரிக்கப்பிரஜைகளில் ஒருவனான அந்த ஆடவன்தான் என் அருகில் அமர்ந்தான். இவனோடு கூட வந்த பெண்களுக்கருகில் இவனுக்கு இடம் கிடைக்கவில்லைப் போலும்.

பதிலுக்கு "ஹலோ" சொல்லி விட்டு மீண்டும் யன்னலினூடு இயற்கையிடம் சென்றேன்.

"மன்னிக்கோணும், உனக்கு என்ன பெயரென்று சொல்லுவியோ?" ஆபிரிக்கன் ஜேர்மனிய மொழியில் வினவினான்.

திரும்பி "சந்திரா" என்றேன்.

"ம்... சந்..தியா.. நல்ல பெயர்" எனது பெயரை அவன் அப்படித்தான் உச்சரித்தான். நன்றி சொல்லி விட்டு அவனது பெயரைக் கேட்காமலே மீண்டும் யன்னல் வழி வெளியோடு ஐக்கியமானேன்.

"சந்தியா, எங்கை போறாய், Stuttgart க்கோ?"

"ம்..."

"அங்கை வேலை செய்யிறியோ?"

"இல்லை. எங்கடை நாட்டுக் கலைநிகழ்ச்சி ஒன்றுக்குப் போறன்."

"உன்னை எனக்குத் தெரியும். நீ உன்ரை தங்கைச்சியை சங்கீத வகுப்புக்குக் கூட்டிக் கொண்டு வாற பொழுது நான் காணுறனான்"

"அப்பிடியோ..! எனக்கு உன்னைத் தெரியாது. நான் உன்னை ஒரு நாளும் கண்டதில்லை. அதுபோக அது என்ரை தங்கைச்சி இல்லை... மகள்"

„நான் நம்ப மாட்டன். நீ இவ்வளவு இளமையா இருக்கிறாய். ஆசியப் பொம்பிளையள் எல்லாரும் இப் பிடித்தான் அழகாக இருப்பினையோ?

ம்... தொடங்கி விட்டான். ´இந்த ஆண்களே இப் படித்தானோ! தமது மனைவியர் அல்லாத வேறு எந்தப்

பெண்ணைக் கண்டாலும்... நீ அழகு... நீ இளமை... என்று..´ சின்னதான எரிச்சல் மனசுக்குள் தோன்றியது. மீண்டும் யன்னல் வழி வெளியே லயிக்க முனைந்த போதெல்லாம். "சந்..தியா.., சந்..தியா.."என்று அழைத்து எனக்குக் கோபமூட்டினான். ஒவ்வொரு தரிப்பிலும் இறங்குவோரும் ஏறுவோருமாகப் பயணிகள் மாறிக் கொண்டிருக்க இவன் மட்டும் என்னருகில் என் தனிமை யைக் குலைக்க என்றே இருந்தான். என் சந்தோசத்தை மெதுமெதுவாகச் சூறையாடினான்.

"சந்..தியா, என்னோடை ஒருநாளைக்கு கோப்பி குடிக்க வருவியோ..?"

ம்.. ஜேர்மனியில் ஒருவன் ஒரு பெண்ணை இப்படிக் கேட்கிறான் என்றால், அதன் அர்த்தம் வெறு மனே கோப்பி குடிப்பதற்கான அழைப்பல்ல. அதற்கும் மேலான சம்மதம் தேடல் அது. அருகமர்ந்து அரைமணி நேரம் கூட ஆகவில்லை. அதற்கிடையில் அவன் தேடல். அவனைச் சொல்லிக் குற்றமில்லை. இது ஜேர்மனிய நாகரிகங்களில் ஒன்று.

"இல்லை. எனக்கு நேரமில்லை" வார்த்தைக ளோடு எரிச்சலும் ஒட்டியபடி வெளியில் கொட்டியது.

"பிளீஸ்... ஒரு நாளைக்கு. ஒரே ஒரு நாளைக்கு"

"இல்லை, எனக்கு இவைகளுக்கு நேரமுமில்லை. இவைகளில் ஆர்வமுமில்லை. நான் திருமணமானவள். எனக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள்"

„அதனாலென்ன? நானும் திருமணமானவன்தான்"

`அப்பிடியெண்டால், உன்ரை மனைவியோடை போய் கோப்பியைக் குடியன்`

சொல்ல வந்த வார்த்தைகளைச் சொல்லாமல்

விழுங்கிக் கொண்டேன்.

அவனது கரைச்சல் தொடர்ந்தது. கெஞ்சிக் கேட்டான். பொதுவாக ஜேர்மனியர்கள் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள். ´எனக்கு நேரமில்லை´ என்று ஒரு தரம் சொன்னால் போதும். அப்படியே ஒதுங்கி விடுவார்கள். நாளாந்தம் சந்திப்பவர்களாக இருந்தால் அந்த எண்ணத்தை அப்படியே விட்டு விட்டு மீண்டும் நட்பாகப் பழகத் தொடங்கி விடுவார்கள். இவன் ஆபிரிக்க நாட்டவன் என்பதாலோ என்னவோ எனக்கு விருப்பமில்லை என்று சொன்ன பின்னும் "தொலைபேசி இலக்கத்தைத் தாறியோ.. முகவரியைத் தாறியோ..?" என்று கரைச்சல் படுத்திக் கொண்டே இருந்தான்.

இயற்கையோடு நான் ஒன்றும் போதெல்லாம் என்னைக் குழப்புவதிலேயே குறியாக இருந்தான்.

அவனைத் திசை திருப்ப எண்ணி, வெளியிலே தாயின் கையைப் பிடித்த படி செல்ல நடை போடும் ஒரு குழந்தையைக் காட்டி „அந்தக் குழந்தையைப் பார்த்தியா? எவ்வளவு அழகாக இருக்கிறது?" என்றேன்.

உண்மையிலேயே அந்தக் குழந்தை துறுதுறுத்த கண்களுடன் துடிப்பாய் தெரிந்தது. கன்னத்தை கிள்ளிப் பார்க்க வேண்டும் போல ஆசை வந்தது. ஆனால் அவனால் அந்தக் குழந்தையிடம் லயிக்க முடியவில்லை. என்னைச் சம்மதிக்க வைப்பதிலேயே மும்முரமாக இருந்தான்.

எனது தனித்த ரெயில் பயணத்தில், ஏகாந்தமாய் இருக்கலாம் என்ற என் இனிமையான நினைப்பு தொலைந்து வெகு நேரமாகியிருந்தது.

´இதற்கு மேலும் தாங்காது வேறு எங்காவது போய் இரு´ என்று மனசு சொல்லியது. எரிச்சலோடு எழுந்து பார்த்தேன். எல்லா இருக்கைகளுமே நிரம்பி வழிந்தன. பரவாயில்லை, ஏதாவதொருமூலையில் போய் நிற்பது உத்தமமெனத் தீர்மானித்தபடி எனது கைப்பை

யையும் கொப்பியையும் பேனையையும் எடுத்துக் கொண்டு அவனைத் தாண்டி நடந்தேன்.

"சந்..தியா, எங்கை போறாய்?"

"அங்காலை போய் இருக்கப் போறன்"

"ஏன்..?"

நான் பதில் சொல்லவில்லை. விரைந்து நடந்தேன். இருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. வெளிச் செல்வதற்கான கதவோடு அண்டிய ஒரு மூலையில் போய் நின்று எனது கொப்பியைப் பார்த்தேன். அது எதுவுமே எழுதப்படாமல் வெறுமையாக இருந்தது.

நேரத்தைப் பார்த்தேன்.

ம்.. இன்னும் சில நிமிடங்களில் ஸ்ருட்கார்ட் வந்துவிடும். ஏமாற்றத்தின் நடுவே ஒரு நிம்மதிப் பெரு மூச்சு.

-10.6.2003

பூவரசு (July-Aug2003)
ஈழமுரசு-பாரிஸ் (19-25Feb2004)

உபதேசம்

நேற்று மாலதி நாட்டிலிருந்து திரும்பியிருப்பாள். அவளிடம் நாட்டுப் புதினங்களைக் கேட்க வேண்டும். மனசு அவாப்பட்டது. நேற்றே தொலைபேசியில் அழைத் திருக்கலாம். பயண அலுப்புகளின் மத்தியில் என் தொல்லை வேறு அவளுக்கு வேண்டாம் என நினைத்து பொறுமை காத்தேன்.

என்னை விடப் பத்து வருடங்கள் இளையவ ளானாலும் நட்போடு பழகக் கூடியவள். நான் எனது சிறு குழந்தைகளுடன் ஜேர்மனிய வாழ்க்கையை ஆரம் பித்த சிலகாலப் பொழுதுக்குள், ஒரு நாள் ஸ்ருட்கார்ட் புகையிரத நிலையத்தில் அவளை முதல் முதலாகச் சந்தித்தேன். அப்போதுதான் திருமணமாகி அவளும் அவ ளது கணவனும் கல்யாணக்களை கலையாத புத்தம் புதுத் தம்பதிகளாய் தெரிந்தார்கள். அவளது பேச்சும் அவளிடம் இருந்த நாட்டுப் பற்றும் முதற் சந்திப்பிலேயே என்னுள் அவள் பால் ஓர் பிடிமானத்தை ஏற்படுத்தி விட்டன. தொடர்ந்த ஓரிரு முறைகளிலான சந்திப்பில் வயதுவித்தியாசம் பாராது நாங்கள் நட்பாகி விட்டோம்.

தமிழ்ப்பெண்களைக் காணுவதே அரிதான அந்தக் காலகட்டத்தில், அவள் எனக்கு ஒரு பெரிய வரப் பிரசாதமாகவே தெரிந்தாள். அதனால் தூரம் என்றும் பார்க்காமல் மாதம் ஒரு முறையாவது பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு, ரெயின் ஏறி அவளைச் சந்தித்து வருவேன். எனது பிள்ளைகளுடன் அவள் பேசும் விதமே எனக்கு மகிழ்வூட்டுவதாக இருக்கும்.

உறவுகள் என்று சொல்லிக் கொள்ள ஒருவரும் இல்லாத அந்நியதேசத்தில், அவள் ஒரு மாமியாய், சித்தி யாய்.. நின்று என் பிள்ளைகளுக்கு புத்திமதிகள் சொல் லும் போது ஒரு நெருக்கமான உறவு கிடைத்து விட்ட தான உணர்வில் மனம் நிறைவேன்.

எனது மகனுக்கு அவளை நன்கு பிடிக்கும். "மாலதியக்கா! மாலதியக்கா!" என்று அன்போடு பழகு வான். அவளும் அவனோடு அன்பாகப் பழகுவாள். எப் போதும் நாட்டைப் பற்றியே பேசுவாள். "நாங்கள் எல் லாரும் எப்பிடியாவது நாட்டுக்குப் போயிடோணும்" என்பாள். ஏதாவது அந்தரம், அவசரம் என்று வந்தால் கூட நம்பி அவளிடந்தான் எனது பிள்ளைகளை விட்டுச் செல்வேன்.

என்னோடு பேசும் போதெல்லாம் "அக்கா, எனக் குப் பிள்ளையள் பிறந்தால், ஒரு பத்துப் பன்னிரண்டு வயசுக்குமேலை அதுகளை இந்த நாட்டிலை வைச்சிருக்க மாட்டன். எப்பிடியாவது எங்கடை நாட்டுக்குக் கூட்டிக் கொண்டு போடுவன். இங்கை இருந்தால் பிள்ளையள் கெட்டுப் போடுங்கள். நீங்களும் உங்கடை பிள்ளை யளை பிறந்தநாள் விழா, அது இது எண்டு சொல்லி ஜேர்மன் பிள்ளையளின்ரை வீடுகளுக்கோ அல்லது வேறை ஜேர்மன் களியாட்டங்களுக்கோ விட்டிடா தைங்கோ" என்பாள்.

எனது பிள்ளைகள் வளர்ந்து கொண்டு வரும் போது அவள் சொன்னது போல வளர்ப்பது என்பது கடினமான காரியமாகவே இருந்தது. வகுப்புப் பிள்ளை களின் பிறந்தநாள் விழாக்களுக்கோ அல்லது எமது நகரில் நடைபெறும் களியாட்டங்களுக்கோ என்பிள்ளை கள் செல்வதை என்னால் தடுக்க முடியவில்லை. பத்துப் பன்னிரண்டு வயது வந்ததும், அவர்களது படிப்பைக் குழப்பிக் கொண்டு, ஒரு சுமுகநிலைக்கு வராத எனது நாட்டுக்கு ஓடவும் முடியவில்லை.

அதன் பின்னான பொழுதுகளில் மாலதி என்னை அடிக்கடி கடிந்தாள். "நீங்களக்கா, பிள்ளையளுக்கு அள வுக்கு மிஞ்சி இடம் குடுக்கிறிங்கள். இப்ப இந்த வய சிலை இப்பிடி ஜேர்மன்பிள்ளையளின்ரை வீடுகளுக்கு விட்டிங்கள் எண்டால் நாளைக்கு 14, 15வயசு வரக்கை டிஸ்கோவுக்கும் விடவேண்டி வரும்" என்றாள்.

ஒருதரம் எனதுமுத்தவன் சினிமாப்பாடல் ஒன்றை மிகவும் ரசித்துக் கேட்ட போது, அவள் அவளது கணவனோடு சேர்ந்து "பாருங்கோ அக்கா... இவன் கேட்கிற பாட்டை! இவனக்கா மெதுமெதுவா நாட்டை மறக்கிறான். எல்லாம் நீங்கள் குடுக்கிற இடந்தான்" எனக் கடிந்தாள். இன்னொரு தரம், மைக்கல் ஜக்சனின் பாட்டு ஒன்று தொலைக்காட்சியில் போன போது, தொலைக் காட்சியின் சத்தத்தையும் கூட்டி விட்டு, உடம்பை நெளித்து நெளித்து ஒரு ரசனையுடன் அவன் ஆடிய போது, அவள் போட்ட கூச்சலில் நானே ஆடிப் போய் விட்டேன்.

அவளது இப்படியான உபதேசங்கள் எமக்கிடையேயான நட்புக்கு எந்தக் குந்தகமும் விளைவிக்காத போதும் அவள் சொல்வது போல என்னால் என் பிள்ளைகளை வளர்க்க முடியவில்லை என்பதால் அவளிடம் அடிக்கடி செல்வதை நான் தவிர்த்துக் கொண்டேன்.

இந்த இடையில் அவளுக்கும் ஒவ்வொன்றாக மூன்று குழந்தைகள் பிறந்து விட்டார்கள். அந்த சந்தோசங்களில் கலந்தும் அடிக்கடி தொலைபேசியும் எங்களுக்குள்ளான உறவைத் தொலைத்து விடாது காத்து வந்தேன். ஆனாலும் காலப்போக்கில் ஐரோப்பிய அவசரங்களுக்குள் தொலைபேசும் இடைவெளிகள் கூட நீண்டு கொண்டே போயின. அவளது பிள்ளைகளும் வளர்ந்து கொண்டிருக்கும் போது அவளுக்கான அவளுடைய நேரங்களும் குறுகிப்போயின. நேரடிச்சந்திப்புகள் மிகவும் அரிதாக, இப்படித்தான் ஏதாவதொரு விடயம் சாட்டாக வரும்போது தொலைபேசிக் கொண்டோம். இப்போது அவள் நாட்டுக்குப் போய் வந்தது சாட்டாகி விட்டது. அழைத்தேன்.

தொலைபேசியின் சிலதரச் சிணுங்கல்களுக்குப் பின்பே இணைப்பில் வந்தாள். கொஞ்சம் களைப்பாக இருந்தாள். பயண அலுப்பு இன்னும் தீரவில்லை என்பது தெரிந்தது.

பின்னணியில் "சுற்றிச் சுற்றி வந்தீக..." படையப்பா படப் பாடல் சத்தமாகக் கேட்டது.

"கொஞ்சம் சத்தத்தைக் குறை" என்று திரும்பிக் கத்தி விட்டு "இவன் சஞ்சுதன் அக்கா, படையப்பா பாட்டுப் போடாமல் சாப்பிட மாட்டான். ஒரு நாளைக்கு மூண்டு தரத்துக்குக் குறையாமல் எங்கடை வீட்டை படையப்பா ஓடுது" சலிப்படைந்த பாவனையுடன் பேசினாலும் அதைச் சொல்லும் போது ஏதோ ஒரு பெருமிதம் அவள் குரலில் ஒலித்தது.

"எப்பிடி நாடிருக்கு?" நான்தான் ஆவலோடு கேட்டேன்.

"சா, அதையேன் கேட்கிறிங்களக்கா? ஒரே இலையான், வெய்யில்.. சீ..எண்டு போச்சுது"

தொடர்ந்து நிறையவே கதைத்தோம்.

"இனி எப்ப நாட்டுப் பக்கம் போற ஐடியா?"

"நாட்டுக்கோ...! இதுதான் கடைசியும் முதலும் அக்கா. இந்தப் பிள்ளையளாலை அதைத் தாங்கேலாது. பாவம் பிள்ளையள். அந்த வெய்யிலும் இலையானும். காய்ஞ்சு போய்க்கிடக்கு எல்லாம். இதுக்குள்ளை நுளம்பு வேறை. இதுகளுக்கு அந்த நாடு ஒத்து வராது. இனி அந்தப்பக்கமே போறேல்லை, எண்டு தீர்மானிச்சிட்டன்"

பேசுவது மாலதிதானா? மனசு வினாவியது. அதற்குமேல் எனக்குப் பேச்சே வரவில்லை.

-4.11.2004
ஈழமுரசு-பாரீஸ்

சில நேரங்களில் சில சந்திப்புகள்

பகலில் என்றால் எட்டிலிருந்து பத்து நிமிடங்களும் இரவில் சுற்றுப்பாதையால் வருவதால் 15 இல் இருந்து 20நிமிடங்களும் எடுக்கும் வேலைக்கான அந்தப் பேருந்துப் பயணத்தின் அந்தச் சில நிமிடங்களுக்குள் எத்தனையோ பேரைச் சந்திப்பேன். சில நேரங்களில் எதிர்பாராதபடி தெரிந்தவர்கள் யாராவது பயணத்தில் இணைவதால் அவை இனிய சந்திப்புக்களாகி என்னை மகிழ்சியில் ஆழ்த்தியும் இருக்கின்றன. சில நேரங்களில் துயரமும் நிரம்பி வழிந்துள்ளன.

நூர்ஜான்

அன்று வந்தவள் நூர்ஜான். அவள் எனது மகள் தீபாவுடன் சின்னவகுப்பில் படித்தவள். எமது வீட்டுக்கு அருகிலேயே அவளது வீடும் இருந்ததால் வளர்ந்து வேறுவேறு பாடசாலைகளில் படிக்கும் போதும் அவளும் தீபாவும் நட்பாகவே இருந்தார்கள். தற்போது பல வருடங்களாக அவளுக்கும் தீபாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையாயினும் என்னைப் பேரூந்தினுள் கண்டால் அவள் வந்து என்னருகில் அமர்ந்து விடுவாள். ஏதோ, எனது நண்பிபோல மிக உற்சாகமாக என்னுடன் கதைத்துக்கொண்டு வருவாள். இம்முறை, சந்திப்பு கிட்டத்தட்ட ஐந்து மாத இடைவெளிகளின் பின்னேயே நடந்தது.

நாங்கள் சந்தோசமாகக் கதைத்துக் கொண்டு வந்தோம். அவள் தனது வேலையிடத்து அனுபவங்களைச் சொல்லிக் கொண்டு வந்தாள். பேரூந்து உரிய இடத்துக்கு வருவதற்குச் சற்று முன்பாக, வழமைக்கு மாறாக “உனது அப்பா எப்படி இருக்கிறார்?” என்று கேட்டேன்.

ஒரு நாளுமே நான் அவளது அப்பாவைப் பற்றி அவளிடம் கேட்டதில்லை. அன்று ஏனோ கேட்டு விட் டேன். அவளது கண்கள் அப்படியே குளமாகி விட்டன.

“அப்பா போன நவம்பரில் இரத்தப் புற்றுநோய் வந்து இறந்திட்டார்” என்றாள்.

நான் அதிர்ந்த போது “நாங்களுந்தான் அதிர்ந் தோம். சும்மா காய்ச்சல்தான் வந்தது. குடும்ப வைத்திய ரிடம் போன போது மருத்துவ மனைக்கு அனுப்பினார். இரண்டு கிழமைகள் மருத்துவ மனையிலேயே இருந்த அப்பா வீடு திரும்பவில்லை. இறந்திட்டார்” என்றாள்.

சொல்லி முடிக்கும் போது அவள் குமுறி அழத் தொடங்கி விட்டாள்.

பேரூந்து நிலையத்திலிருந்து வீட்டுக்கு நடக்கும் போது என் மனதும் கனத்துப் போயிருந்தது. அவளது அப்பாவைப் பலதடவைகள் கண்டிருக்கிறேன். ஆனாலும் அவளோடு அவர் பற்றி ஒரு போதும் பேசியதில்லை. அன்று ஏன் கேட்டேன் என்று எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. அவளது சோகத்தைக் கிளறியதால் வருத்த மாகவும் இருந்தது.

-11.9.2006

அனெக்கிரேட்

அன்று எனது பேரூந்துப் பயணத்தில் என்னோடு இணைந்து கொண்டவள் அனெக்கிரேட். இவளை நான் கடைசியாகச் சந்தித்தது நூர்ஜானைச் சந்திப்பதற்குச் சில மாதங்களின் முன்பு. அனெக்கிரேட் எனது கடைசி மகன் துமிலனுடன் முதலாம் வகுப்பில் இருந்து பாட சாலை இறுதி ஆண்டு வரை ஒன்றாகப் படித்தவள். இறுதிப் பரீட்சையில் நல்ல புள்ளிகளைப் பெற்றிருந் தாள். ஆனாலும் அவள் விரும்பிய இசைத்துறைக்கான

இடம் பல்கலைக்கழகத்தில் அவளுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவளோடு படித்தவர்கள், நண்பர்கள் என்று அனேகமான எல்லோருமே வேலை, மேற்படிப்பு என்று வேறுவேறு இடங்களுக்குச் சென்றுவிட இவள் கொஞ் சம் தனிமை உணர்வோடு எமது நகரிலேயே இருந்தாள். அந்த நேரத்தில் அடிக்கடி அவளை நான் சந்திப்பேன். எப்போதும் ஒரு இசைக்கருவியை தன்னுடன் கொண்டு திரிவாள். இசை வகுப்புக்குப் போகிறேன் என்பாள். அவ ளோடான சந்திப்பு எப்போதுமே மிக இனிமையாக இருக்கும். சிரித்துச் சிரித்து நிறையக் கதைப்பாள். பாட சாலைக் காலங்களில் பெற்றோர்களுக்கான ஒன்று கூடலிலும் பிள்ளைகளோடான பிக்னிக்குகளிலும் அவ ளது தாயும் பங்கு கொள்வதால் தாயோடும் எனக்கு ஓரளவு பழக்கம் இருந்தது. தாயும் இவளைப் போலவே சந்தோசமாகப் பழகக் கூடியவள்.

ஒரு நாள் அனெக்கிரேட்டை பேரூந்தினுள் சந் தித்தபோது தனக்கு வடக்குயேர்மனியில் ஒரு பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்திருப்பதாக மிகவும் சந்தோசமா கச் சொன்னாள். ஒரு மாதத்தில் போய் விடுவேன் என்றாள். பின்னர் சற்றுக் கவலையாக அம்மாதான் தனித்து விடுவாள் என்றாள்.

„ஏன்... உனது அப்பா..?“ என்றேன்.

„எனக்கு நான்கு வயதாக இருக்கிற பொழுதே அப்பா அம்மாவை விட்டிட்டுப் போயிட்டார்“ என்றாள். எனக்கு அப்போதுதான் எப்போதுமே அவளது அம்மா தனித்து வருவது சிந்தனையைத் தொட்டது.

„உனக்கும் உனது அப்பாவுக்கும் தொடர்பு இருக் கிறதுதானே?“ கேட்டேன்.

அவள் முகத்தில் ஒருவித ஏமாற்றம் கலந்த வெறுப்புத் தோன்ற „எனக்கு ஏழு வயசா இருக்கிற போதே அப்பாவை மெயின் ரோட்டிலை இருக்கிற அவற்றை வீட்டுக்கு முன்னாலை ஒரு குழந்தையோடை பார்த்தனான். என்ரை அப்பா இன்னொரு குழந்தை

யைத் தூக்கி வைச்சிருக்கிறது எனக்குச் சகிக்கேல்லை'' என்றாள்.

தொடர்ந்தகதையில் அவள் அதன் பிறகு அவளது அப்பாவைக் காணவோ அவரோடு பேசவோ விரும்ப வில்லை என்பது தெரிந்தது. வழமைக்கு மாறாக அன் றைய அவளோடான சந்திப்பு சற்று மனதைச் சங்கடப் படுத்த நாங்கள் விடைபெற்றோம்.

அவள் அப்பா இல்லாமலே வளர்ந்திருக்கிறாள் என்ற உண்மை அத்தனை வருடங்களில் எனது கவனத்துக்கு எட்டாதது எப்படி என்ற ஆச்சரியம் எனக்குள்ளே தொடர்ந்து இருந்தது. அதன்பின் அவளது அம்மாவைச் சந்தித்த ஒரு பொழுதில் „அவள் அடிக்கடி இங்கு வர மாட்டாள். நியாயமான தூரம்'' என்றாள்.

அப்படி இடையிடையே அவள் எமது நகருக்கு வந்தபோதும் எதேச்சையாகத்தான் என்றாலும் அவளை நான் சந்திக்கும் வாய்ப்புகளை எனது பேரூந்து எனக்குத் தந்து கொண்டுதான் இருந்தது.

ஒரு கட்டத்தில் அவளை ஒவ்வொருமாதமும் சந்தித்தேன். இன்னும் சிலகாலங்கள் செல்ல ஒவ்வொரு வாரமும் சந்தித்தேன். „என்ன இப்படி அடிக்கடி வருகி றாய்?'' என்ற போது மிகுந்த சந்தோசமாக „எனக்கிப்ப இங்கை ஒரு நண்பன் இருக்கிறான். அவனைச் சந்திக் காமல் இருக்க முடியவில்லை'' என்றாள்.

„அப்படியா? சந்தோசம்'' என்று அவளை வாழ்த்தி விட்டு வேறு கதைத்தேன். விடைபெறும் போது „நீ என்ரை நண்பனைப் பார்க்கவில்லையே! பொறு! நான் அவன்ரை புகைப்படத்தைக் காட்டுறன்'' என்று சொல்லி தனது கைப்பையிலிருந்து எடுத்தாள். நான் அதிர்ந்து போனேன். அந்தப் புகைப்படத்திலிருந்தவன் அவளின் அப்பாவின் வயதை ஒத்த 45 வயதுகள் நிரம்பிய ஒரு மெக்சிக்கன் ஆண்.

-14.9.2006

சூசி

இவள் சூசி. வயது 24. இவளைத் தினமும் காண்பேன். நான் வேலை முடிந்து திரும்பும் போது எனது பஸ் தரிப்பிடத்துக்கு முதல் தரிப்பிடத்தில் பேரூந் தில் ஏறுவாள்.

இரவு எட்டு மணியளவில் அவள் பேரூந்தில் ஏறும் போது ஆரம்பத்தில் நண்பனைச்(காதலன்) சந்திக் கவோ அன்றி டிஸ்கோவுக்கோ செல்கிறாள் என்றுதான் நினைத்தேன். பின்னர்தான் ஒருநாள் ஒரு உணவகத்தில் உணவு பரிமாறிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

மிகவும் அழகானவள் என்று சொல்ல முடியா விட்டாலும் மிக அழகாக ஒரு குழந்தை போலச் சிரிக்கக் கூடியவள். குண்டாக இருந்தாலும் ஆசைப்பட வைக்கும் குழந்தைத்தனமான முகம். இவள் நூர்ஜான் போலவோ அன்றி அனெக்கிரேட் போலவோ என்பக்கத்துக்கு வர மாட்டாள். ஆனால் என்னைக் கண்டதுமே மிகவும் நட்பாகச் சிரித்து „ஹலோ" என்பாள். அந்தச் சிரிப்பும் பார்வையும் வார்த்தைகளையும் விட அர்த்தமானவை.

இவளும் என் கடைசிமகன் துமிலனுடன் கின்டர் கார்டனிலிருந்து படிக்கத் தொடங்கினாள். ஆனால் நான்காம் வகுப்பில் தரம் பிரிக்கும் போது வேறு வகுப் புக்குப் போய் விட்டாள். ஒரே பாடசாலைதான்.

முன்னர் இவளை எப்போதுமே இவளது தந்தை யுடன்தான் காண்பேன். அவரும் மிகவும் நட்பாகச் சிரித் துக் கொண்டு „ஹலோ" சொல்வார்.

இவளைக் காணும் போதெல்லாம் முதலாம் வகுப்பில் நடந்த அந்தச் சம்பவம் என் நினைவில் வந்து போகும்.

அப்போது, துமிலனின் வகுப்புமாணவர்கள் எல் லோரையும் பட்டம் விட்டு விளையாட அழைத்துச் செல்லப் போவதாக, அவனின் வகுப்பு ஆசிரியர் அறிவித்

திருந்தார். அதற்கான பட்டத்தைக் கட்டுவதற்கு முதல் நாளே பெற்றோரும் வந்து உதவ வேண்டும் எனவும் பட்டம் விடும் நாளில் அங்கு பார்பிக்கியூவும் செய்வார் கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

முதல்நாள் பாடசாலைக்குச் சென்று துமிலனுடன் சேர்ந்து பட்டம் கட்டினேன். பெற்றோர்கள் பலருடன் கதைக்கும் வாய்ப்பும் கிடைத்தது. சந்தோசமாக அன் றைய பொழுது கழிந்தது. அடுத்தநாள் பட்டம் கட்டியது பற்றி எமது நகரப் பத்திரிகையிலும் புகைப்படங்களுடன் வந்திருந்தது.

பார்பிக்கியூவுக்கான உணவுகளுடன் நானும் துமிலனும் பாடசாலைக்குச் சென்று, உரிய இடத்துக்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர்களுடன் பயணமா னோம். அது ஒரு குதூகலமான பயணம். அவ்விடம் மலைக் குன்றுகளைக் கொண்ட, சோலைகள் போல அடர்ந்த அழகான இடம். சிலரது தாய்மார், சிலரது தந்தையர் என்று அனேகமான ஒவ்வொரு மாணவரு டனும் பெற்றோர்களில் ஒருவர் வந்திருந்தார். அப்போது எனக்கு டொச் (ஜேர்மனிய மொழி) ஒரு பெரிய பிரச் சனையான விடயமாக இருந்தாலும் ஆங்கிலமும் கலந்து முடிந்தவரை அவர்களுடன் உரையாடினேன்.

பட்டம் விட்டு, பார்பிக்கியூ முடித்து எல்லோரும் ஓய்வாக அமர்ந்த போது பெற்றோர்கள் ஒரு இடத்திலும் மாணவர்கள் எல்லோரும் இன்னொரு இடத்திலும் என்று கூடினார்கள். சிறிது நேரத்தில் எனக்கு பெற்றோ ரோடு இருப்பதை விட மாணவர்களிடம் போனால் நல்லாயிருக்கும் போலிருந்தது.

நான் எழுந்து அவர்கள் பக்கம் போன போது தான் சூசி என் பார்வையில் பிரத்தியேகமாகப் பட்டாள். ஒருசிறிய குன்றின் மேல் ஒரு நீண்ட சுள்ளித்தடியுடன் நின்ற அவளைச் சுற்றி கீழே மற்றைய மாணவர்கள் நின் றார்கள். அவள் தனது முகத்துக்குத் துளியும் ஒவ்வாத பாவனையில் ஒரு கோபக்காரி போல நின்றாள். „நான் தான் உங்களின் அம்மா“ என்றாள். இடையிடையே

மாணவர்களில் யாராவது ஒருவரின் பெயரைக் கூப் பிட்டு „நீ சரியில்லாத பிள்ளை. நீ படிக்கவில்லை. நான் உன்னை அடிப்பேன்..“ என்றெல்லாம் பல வாறாகக் கத்திக் கத்தித் திட்டினாள். சிலரைத் தன்னிடம் கூப்பிட்டு அடிப்பது போலப் பாவனை பண்ணினாள். தலைமயிரைப் பிடித்து உலுப்பினாள். ஒரு மாணவனைக் கூப்பிட்டு „இன்று நீ உனது கட்டிலில் படுக்க முடியாது. வெளியில்தான் படுக்க வேண்டும்“ என்று கோபமாகச் சொன்னாள். தடியை சுழற்றிச் சுழற்றிக் கொண்டு குன் றிலே அங்கும் இங்குமாய் திரும்பினாள். தொங்கினாள்.

அது ஒரு விளையாட்டு என்றாலும் என்னால் அதை ரசிக்க முடியாதிருந்தது. அவளது குழந்தைத்தன மான முகத்துக்கு ஒவ்வாத அந்த விளையாட்டை அந்த மாணவர்கள் அத்தனை பேரும் ரசித்தார்கள்.

வீட்டுக்குத் திரும்பிய பின்னும் அவளது அந்த விளையாட்டு என்னை உறுத்திக்கொண்டே இருந்தது. ஒரு சில நாட்கள் கழித்து துமிலனிடம் „சூசி எப்படி யான பிள்ளை?“ எனக் கேட்டேன்.

„நல்ல பிள்ளை. ஆனால் அவ்வளவு படிக்க மாட் டாள்“ என்றான்.

சிறிது நேரம் கழித்து „அவளது அம்மா எப்படி?“ என்றேன்.

„அவளின்ரை அம்மா அவளையும் அவளின்ரை அப்பாவையும் விட்டிட்டுப் போட்டாவாம். சேர்ந்து இருந்த போதும் நல்லாக் குடிப்பாவாம். சூசியை அடிப் பாவாம். அப்பாவோடை எப்பவும் சண்டை போடுவா வாம்... அவ வேறை அப்பாவோடை போட்டாவாம்..“

அவன் சொல்லிக் கொண்டே போனான்.

-18.9.2006

குட்டைப் பாவாடைப் பெண்

பலத்த காற்றும் சிணுங்கும் மழையும் மரங்கள் சொரிந்த இலைகளை தெரு முழுவதும் இழுத்துக் கொண்டு திரிந்த அந்தக் குளிர்ந்த இரவில் அவள் அந்தத் தரிப்பிடத்தில் காத்திருந்தாள். பேரூந்து நிற்க முன்னரே குட்டைப் பாவாடையுடன் பளிச்சென்று தெரிந்த அவளைக் கண்டு சில கண்கள் அகல விரிந்தன.

பேரூந்தினுள் அவள் ஏறியதும் ஒட்டுமொத்தப் பேரூந்துப் பயணிகளின் பார்வைகளும் அவள் பக்கம் ஒரு தரம் திரும்பின. அவள் என்னைத் தாண்டும் போது 'ஹலோ' என்ற படி அழகாகச் சிரித்துக் கொண்டாள். தாண்டிய பின்னும் தாண்டாமல் நின்ற, அவள் விட்டுச் சென்ற கமகமக்கும் உயர்தர வாசனைத்திரவியம் என்னுள் ஒருவித சந்தோச உணர்வைத் தோற்றுவித்தது.

ஆண்களில் சிலர் ஒரு தரம் அவளைத் திரும்பிப் பார்த்து விட்டு எட்டாதகனி என்ற பாவனையுடன் அமைதியானார்கள். பெண்களில் கூடச் சிலர் திரும்பிப் பார்த்தார்கள்.

'ஆடையின்றிய ஒரு பெண்ணின் முன் 100 சத வீதமான ஆண்களின் கண்களும் அகல விரிந்து கொண்டன' என்று எங்கோ எப்போதோ வாசித்த ஞாபகம். அதே புத்தகத்தில் இருந்த இன்னொரு செய்தி தான் என்னுள் அதிகப் படியான வியப்பை ஏற்படுத்தியது. ஆடையின்றிய பெண்ணின் முன் 80 சத வீதமான பெண்களின் கண்களும் அகல விரிந்து கொண்டனவாம். குறிப்பாக பெண்களின் மார்பகங்கள் பெண்களையே வியக்க வைக்கின்றனவாம்.

இந்தச் செய்தி எந்தளவுக்கு உண்மையானது என்பதில் எனக்கு எந்த வித உறுதிப் பாடும் இல்லை. ஆனால் இப்போது குட்டைப் பாவாடையின் கீழ் பளிச்சென்று தெரிந்த இவளது தொடைகள் தான் அந்த

ஆண்களைத் திரும்ப வைத்தன என்றால் பெண்களை எது திரும்ப வைத்திருக்கும் என்று எனக்குத் தெரிய வில்லை.

நானே ஒரு மனிதப்பிறவியாக இருக்கும் போது, சில சமயங்களில் நான் தள்ளி நின்று மற்றைய மனிதர் களைப் பார்த்து எனக்குள்ளே நகைத்துக் கொள்வேன். இன்றும் அப்படியொரு நகைப்பு எனக்குள். இந்த மனி தர்கள்தான் எவ்வளவு பலவீனமானவர்கள். நான் மட் டும் இதற்கொன்றும் விதிவிலக்கானவள் அல்ல. ஆனா லும் இன்று கொஞ்சம் அதிகமான நகைப்பும் மனிதர்கள் பற்றிய ஆய்வும் எனக்குள்.

அந்தக் குட்டைப்பாவாடைப் பெண் பன்னிரண்டு வயதுகள் வரை எனது கடைசி மகன் துமிலனுடன்தான் படித்துக் கொண்டிருந்தாள்.

இப்போதுதான் எனக்குள் எப்படித் தொடர்வது என்ற குழப்பமான சிந்தனை குறுக்கிடுகிறது.

அப்போது பல தடவைகள் எங்கள் வீட்டுக்கும் வந்திருக்கிறான். சில தடவைகள் எனது சமையலைச் சுவைத்தும் இருக்கிறான். கடைசியாக வந்த போது நான் ஸ்பக்கற்றியும் (Spaghetti) தக்காளி சோஸும் செய்து கொடுக்க, சீஸ் துருவலை அதற்கு மேலே தூவி தனக்கு மிகவும் பிடித்த உணவு என்று சொல்லிச் சந்தோசமாகச் சாப்பிட்டு விட்டுச் சென்றான்.

அதற்குப் பின் இரு வருடங்களாக அவ்வப்போது வீதிகளில் மட்டுந்தான் நான் அவனைச் சந்தித்தேன். படிப்பில் சற்றுப் பின் தங்கி வகுப்பேற்றப் படாமல் துமிலனை விட ஒரு வகுப்பு கீழே நின்று விட்டான்.

பின்னொரு சமயத்தில் துமிலன் சொன்ன அந்தச் செய்தி என்னை அதிர்ச்சியடைய வைத்தது. வெறுமே புத்தகங்களிலும் பத்திரிகைச்செய்திகளினூடுந்தான் பிறப் பிலே ஆணான ஒருவன் சத்திரசிகிச்சைகள் மூலம் பெண் ணாவது பற்றி அறிந்து வைத்திருந்தேன். இவனுக்கும்

ஆணாக இருப்பதில் இஸ்டம் இல்லையாம். பெண்ணா கப் போகிறானாம்.

இதெல்லாம் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்ற சிந்தனை என்னுள் ஒருவித நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தியிருந்தது. ஆனால் ஆகும் என்பதற்கு அறிகுறி யாக முதற்படியாக, முதல் முதலாக அவனை ஒப்பனை யுடன், பெண் உடையுடன் கண்டேன். அப்போதும் கூட முழுவதுமான நம்பிக்கை எனக்கு வர வில்லை.

இப்போது அவன் பெண்.

கண்டவர்களைச் சுண்டிஇழுக்கும்படியாக கவர்ச்சி யாக உடையணிந்து, கண்ணுக்கு மைதீட்டி, உதட்டுக்குச் சாயம் பூசி, இந்தக் குளிருக்குள்ளும் கால்கள் பளபளக் கும் படியான காலுறை அணிந்து இனி இவன் என்றோ, அவன் என்றோ நான் விழிக்க முடியாத படி இவளாகி விட்டவன். அவனுக்கு 18 வயதானபோது சத்திரசிகிச்சை செய்து முழுவதும் பெண்ணாக மாறிக் கொண்டான். அவன் உணர்வுகள் அப்படி இருப்பதால் அவன் மாறியே ஆக வேண்டும் என்று அவனது மருத்துவரே சிபாரிசு செய்ய, மருத்துவத்திற்கான சலுகைகளை முழுவதுமாகப் பெற்றுக்கொண்டு பெண்ணானான்.

இப்போது 24 வயதுகள் ஆகி விட்ட இவளது முன்சரித்திரம் பலருக்கும் தெரியாது. இவள் வேலை செய்யும் சுப்பர்மார்க்கெட்டில் இவளைத் தாண்டிச் செல் லும் ஆண்களில் பலர் இவளது புன்சிரிப்பில் தடுமாறு வதும் அடிக்கடி நடப்பதுண்டு. இருந்தும் ஸ்ரெபான் ஆக இருந்து தற்போது ஸ்ரெபானி ஆகி விட்ட இவளது குடும்ப வாழ்க்கை எப்படி அமையப் போகிறது என்பது, எப்போதும் போல என்னிடம் கேள்விக்குறியே!

-25.10.2006
வெற்றிமணி

எமக்கான கதவு

மனநிலை சரியில்லாதிருந்தது. வேலையிலிருந்து விரைவாக வீட்டுக்குப் போய் விட வேண்டும் போல ஒரு அந்தரமாகவும் இருந்தது.

"என்ன, இண்டைக்கு ஆழ்ந்த அமைதியில் இருக் கிறாய், பேச்சையேகாணோமே'' என்று எனது வேலைத் தோழியர் ஒவ்வொருவராகக் கேட்டு வைத்தார்கள்.

"தலையிடிக்குது" என்று பொய் சொல்லிவிட்டு வேலையைச் செய்து கொண்டிருந்தேன். என்னதான் அவசரமாக இருந்தாலும் வேலை முடிந்து விட்டது என் றாலும் சரியான காரணம் காட்டி, பிரத்தியேக அனுமதி எடுக்காத பட்சத்தில் குறிப்பிட்ட நேரம் வரை அங்கு இருந்துதான் ஆக வேண்டும். கடனே என்று இருந்து முடித்தேன்.

அடுத்து, பகுதி நேர வேலை. அதை நான் எவ் வளவு வேகமாகச் செய்கிறேனோ, அவ்வளவு கெதியில் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

விரைவாக வேலையை முடித்து விரைவாக வீட்டுக்கு ஓடிவிட வேண்டுமென்ற எண்ணத்தில் மிகவும் அவசரமாகச் செய்துகொண்டிருந்தேன். இடையிடையே மேலதிக வேலைகள் வந்து சேர்ந்ததால் வேலைகளை முடித்து நேரத்தைப் பார்த்த போது நேரம் 20.39ஆகி இருந்தது. 20.40க்குப் பேரூந்து.

இனி ஓடினாலும் பேரூந்தைப் பிடிக்க முடியாது என்பதில் மனம் சோர்ந்து விட்டது. இத்தனை அவசர மும் வேகமும் காட்டியும் நினைத்ததைச் சாதிக்க முடி யாது போய் விட்டதே என்பதில் கவலையாகி விட்டது.

இரவு நேரம் என்பதால் அடுத்த பேரூந்து 40 நிமிடங்கள் கழித்து 21.20க்குத்தான் வரும். வழமையில் 30நிமிடங்கள் நடந்தாவது வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து

விடுவேன். இன்றைய மனநிலையில் நடப்பதற்கான எந்தவித ஆர்வமும் இருக்கவில்லை. அத்தோடு கோடை காலத்துக்கு ஒவ்வாத குளிர்காற்றும் வீசிக் கொண் டிருந்தது. இன்னொரு பிரச்சனையும் கூடவே இருந்தது.

நான் வழமையாகச் செல்லும் பாதையில் "இந்தப் பாதையில் உள்ள மரங்களில் மயிர்க்கொட்டிகள் வாழ் கின்றன. அதன் மயிர்கள் நச்சுத் தன்மை வாய்ந்தவை. அவை உங்கள் உடலிலும் தோலிலும் பாரதூரமான ஒவ்வாமையை உண்டு பண்ணக் கூடியவை. இந்த எச்சரிக்கையமீறி நீங்கள் இந்தப் பாதையால் சென்று உங்களுக்கு ஏதாவது ஆகி விட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல" என்ற வார்த்தைகளுடன் பெரிய பதாதை கொழுவியிருந்தது.

அனேகமான பொழுதுகளில் வேலை முடிய, வேலையிடத்தில் இருக்கும் Treadmiller இல் அரைமணி நேரம் ஓடுவேன். இன்று அதற்கான மனநிலையும் துளியும் இருக்கவில்லை.

சோர்ந்த மனதுடன் வெளிக்கிட்டு, படிகளில் இறங்கிய போதுதான் அந்தப் பெண்ணைக் கவனித் தேன். அவளும் என்னைப் போலவே லிப்றைப் பாவிக்காமல் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள். முதலே அவளை நான் அந்த அலுவலகத்தின் வேறொரு பகுதியில் கண்டேன்தான். ஆனாலும் அவள் அவ்வள வாக என் கவனத்தைக் கவரவில்லை.

இப்போது என்னைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டு போனாள். அவளை விட வேகமாக நான் நடந்ததில், அவளருகில் போன போது மெலிதாகச் சிரித் தாள். ஏதாவது கதைக்க வேண்டுமென்று தோன்றியது.

„ஹலோ" என்றேன்.

அவளும் "ஹலோ" என்றாள். சேர்ந்து நடந்து கொண்டிருந்தோம். சும்மா கதைத்தோம். வேளைக்குப்

போக வேண்டும் என்ற முனைப்போடு அவசரமாக வேலை செய்தும் எனது பேருந்தை விட்டு விட்டேன் என்ற ஆதங்கத்தை அவளிடம் சொன்னேன்.

"ஓ..'' என்று அவள் எனக்காகக் கவலைப் பட்டாள்.

"எங்கே இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

இடத்தைச் சொன்னதும் „நான் உனது வீட்டைத் தாண்டித்தான் போகவேண்டும்'' என்று சொல்லி தனது இடத்தைச் சொன்னாள்.

தன்னோடு என்னை வரும்படி இன்முகத்துடன் அழைத்தாள்.

காரினுள் ஏறும் போதுதான் "உனது முகம் என்னுள் எதையோ ஞாபகப் படுத்துகிறது. நீ எந்த நாட்டைச் சேர்ந்தவள்?" என்று கேட்டாள்.

"சிறீலங்கா" என்றேன்.

"அப்ப உனக்கு திலீயைத் தெரியுமா?" கேட்டாள்.

எனது மகன் திலீபனைத்தான் கேட்கிறாள் என்பது புரிந்தது.

"திலீ, எனது மகன்தான் என்றேன்"

மிகுந்த சந்தோசமாகி விட்டாள்.

கிட்டத்தட்ட பத்து வருடங்களின் முன், தான் திலீபனின் 12ம், 13ம் வகுப்பு பிரெஞ் பாஷைக்குரிய ஆசிரியராக இருந்ததில் இருந்து தொடங்கி அவனின் கெட்டித்தனம் பற்றி, நட்புடன் பழகும் தன்மை பற்றி என்று மிகுந்த சந்தோசமாக என்னோடு பேசிக்கொண்டு வந்தாள்.

திலீபனுக்கு மறக்காமல் தனது வாழ்த்தைச் சொல்லும் படி வேண்டினாள்.

வீட்டடியில் இறங்கும் போது "பார்த்தியா, சந்திப்புகள் எப்படி எப்படி வரும் என்றே தெரியாது. உன்னை இன்று சந்தித்தது ஒரு அதிசயமே. எனக்கு மிகுந்த சந்தோசமாக இருக்கிறது. மீண்டும் சந்திப்போம்" என்றாள்.

நான் பேரூந்தில் வருவதையும் விட வேகமாக வீட்டுக்கு வந்து விட்டேன். அந்தச் சந்திப்பு ´எதற்காகவும் சோரத் தேவையில்லை. எங்கோ ஒரு கதவு எமக்காகத் திறந்திருக்கும்´ என்ற நம்பிக்கையை எனக்குத் தந்தது.

என் மனதும் ஓரளவு லேசாகியிருந்தது.

-9.7.2007

பொட்டு

***பொ**ட்டு வைப்பதற்கான காரணம் என்னவாக இருக்கும், அதனால் என்ன பயன்? என்பவை பற்றிப் பெரிதாக எதுவும் அலட்டிக் கொள்ளாமல், அம்மா வைத்துப் பழக்கிய பொட்டை நானும் தொடர்ந்து வைத்து வந்தேன்.*

சின்னவயசில் சின்னச்சீரகம் உட்பட மூலிகைகள் கொண்டு காய்ச்சி வடித்து, சிரட்டையில் ஊற்றிக் காய வைத்த கறுத்தப் பொட்டை தண்ணீர் தொட்டு உரைத்து நெற்றியில் அம்மா வைத்துவிடுவா. சின்னதாக கன்னத் திலும் ஒரு பொட்டுப் போட்டு விடுவா. அதனால் நெற்றிப் பொட்டின் நரம்புகள் குளிர்மையும் நன்மையும் பெறுமாம். அம்மாதான் சொல்லுவா.

வளர்ந்த பின் சிவந்த சாந்துப் பொட்டு. அது கூட மூலிகைகள் கலந்து செய்ததுதானாம். பயன் இருந்திருக்கும்.

`பொட்டு வைத்திருக்கும் ஒரு பெண்ணை ஹிப்னோட்டிச வாதியால் ஒன்றுமே செய்ய முடியாது என்றும் சில ஆண்கள் தமது பார்வையின் வசீகரத்தால் தனியாகச் செல்லும் பெண்களை தமக்கு அடிமைகளாக்கி விடுவார்கள். அப்படியான ஏமாற்று வேலைகளெல்லாம் பொட்டு வைத்த பெண்களிடம் கை கூடாதென்றும்' அப்பா சொல்லுவார்.

திருமணத்தின் பின் குங்குமப் பொட்டு. அதுவும் மூலிகைகள் கொண்டு செய்த நல்ல பயன் தரு அரும் பொருளாம்.

ஆனால் வெளிநாட்டில் ஸ்ரிக்கர் பொட்டு. இதனால் என்ன பயன்? பல தடவைகள் யோசித்துப் பார்த்து ஸ்ரிக்கர் பொட்டு வைப்பதில் பயனேதுமில்லை

என்பதால் பொட்டு வைப்பதை விட்டு விட்டேன்.

இன்று மாடிப்படிகளில் ஏறிக் கொண்டிருக்கும் போது ஏழு வயதுகள் நிரம்பிய மேல்மாடித் துருக்கியப் பெண்குழந்தை டிலாரா கீழே இறங்கி வந்து கொண் டிருந்தது.

என்னைக் கண்டதும் பல நாட்களாகக் கேட்க நினைத்து கேட்காமல் விட்டதை இப்போ கேட்பது போன்ற பாவனையில் "ஏன் நீ இப்போ பொட்டு வைப்பதில்லை" என்று கேட்டது.

சிரித்து விட்டு "இப்போ எனக்கு அதில் ஆர்வம் இல்லை" என்றேன்.

"ம்... நீ பொட்டோடு எவ்வளவு வடிவாக இருப்பாய். நெற்றியில் சிவப்பாக ஒரு பொட்டு. அது அழகு" உதடுகளை நெளித்து, நட்போடு சிரித்து அழகாகச் சொல்லிக் கொண்டு என்னைத் தாண்டி இறங்கிப் போனது.

ம்... ஸ்ரிக்கர் பொட்டினால் என்ன பயன்? இதுவோ..!

-23.09.2003

அவன் ஆம்பிளை நான் பொம்பிளை!

“உனக்குத் தெரியுமோ குதிரைச்சவாரி சரியான இதமானது. இன்பமானது. அந்தப் பொழுதுகளில் நான் இனியில்லை எண்ட அளவுக்கு மகிழ்ச்சியாக இருப்பன்“

மிருகங்களைத் தூரஇருந்து இரசிப்பதில் மட்டுமே விருப்பமுடைய எனக்கு அன்ரோனெலாவின் பேச்சு ஆச் சரியத்தையே தந்தது.

அவள் கண்களை மூடிச் சுகித்தபடி தொடர்ந்தாள் “குதிரைக்குக் குளிக்க வார்க்கிற பொழுது ஒரு வாசம் வருமே! அது மிகமிகச் சுகமானது“

மிருகங்களைத் தொடுவதோ தடவுவதோ என் னால் முடியாத காரியம். எனக்கு அது அருவருப்பான ஒரு விடயமும்கூட. இவளுக்கு குதிரை குளிக்கிறபொழுது வருகிற வாசம் பிடிக்குதாம்.

“நான் குதிரையைச் சுத்தம் செய்து முடிஞ்சதும், அது தன்ரை பின்னங்கால்களை மடிச்சு, மண்டியிட்டு நன்றி சொல்லுமே, அப்ப எனக்கு உச்சி குளிரும்“

“உண்மையாகத்தான் சொல்லுறியோ?“ நம்ப முடியாது கேட்டேன்.

“ஓம் உண்மை“

“ஒவ்வொரு முறையும் நீ சுத்தம் செய்த பிறகு அது மண்டியிடுமோ?“

“ஓம் மண்டியிடும். அதுஒருஆனந்தமானபொழுது“

எனக்கு அது ஆச்சரியமான பொழுது. மனசுக்குள்

அவளை விசித்திரமாக உணர்ந்தேன்.

அன்ரோனெலா இத்தாலி நாட்டைப் பிறப்பிட மாகக் கொண்டவள். நான் வேலை செய்யும் வங்கியின் மேலதிகாரி ஒருவரின் காரியதரிசி. யேர்மனியமொழியை மிகச் சரளமாகப் பேசக் கூடியவள். அவளது முகத்தைப் பார்க்காமல் தொலைபேசியில் பேசும் எவரும் அவளை இத்தாலி நாட்டவள் என்று கண்டுபிடிக்க மாட்டார்கள். அத்தனை நேர்த்தியாக யேர்மனிய மொழியை உச்சரிப் பாள். நேரே பார்த்தால் மட்டும் ஏதோ ஒன்று அவள் யேர்மனியைச் சேர்ந்தவள் அல்ல என்று காட்டிக் கொடுத்துவிடும். அழகானவள். ஆனால் குள்ளமானவள்.

கிழமையில் இரண்டுநாட்கள் குதிரைச்சவாரிக்குச் செல்வாள். அந்த நாட்களில் அவளில் ஒரு தனிக்களை தெரியும். மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவாள்.

இவ்வளவு குள்ளமானவள் எப்படிக் குதிரையில் ஏறுவாள். பிறகு எப்படிக் கீழே குதிப்பாள் என்று ஒரு கணம் மனசுக்குள் கற்பனை பண்ணிப் பார்த்தேன்.

அன்ரோனெலாவுக்கு எப்போதுமே சிரித்த முகம். யார் என்ன கேட்டாலும் முகம் சுளிக்க மாட்டாள். மிக மென்மையாகச் சிரித்தபடியே பதில் சொல்வாள். மறுப் புக்களைக் கூட மலர்ந்த முகத்துடனேயே கோபமோ எரிச்சலோ ஏற்படாத விதமாக ஒரு வித லாவண்யத் துடன் சொல்லக் கூடியவள். அவள் இந்த வேலையில் சேரும்பொழுதே அதற்கான பயிற்சியையும் கொடுத்திருப் பார்களோ என அடிக்கடி எண்ணிக் கொள்வேன்.

வேலை நேரங்கள், சம்பளங்கள், விடுமுறை விண்ணப்பங்கள், இன்னும் பல முக்கியமான விடயங் கள் என்று வங்கி ஊழியர்கள் அத்தனை பேரது பிரச் சனைகளையும் தேவைகளையும் கவனத்தில் எடுத்துச் செயற்படும் பிரத்தியேக பகுதியில் அவள் இருப்பதால் எங்கள் எல்லோருக்கும் அவள் மிகமுக்கியமானவளாகவே

தெரிந்தாள்.

எங்களின் பிரச்சனைகள் என்னவாக இருந்தாலும் அவளினூடாகத்தான் நாங்கள் மேலதிகாரியுடன் தொடர்பு கொள்ளமுடியும். மின்னஞ்சல்கள்கூட அவளின் பார்வைக்குப் பின்னரே மேலதிகாரியைச் சென்றடையும். மேலதிகாரியின் அறைக்கென ஒரு தனிக்கதவு இருந்தாலும் அவளின் அறையினூடாகச் சென்றுதான் நாம் மேலதிகாரியைத் தரிசிக்க முடியும்.

சின்ன வயதிலேயே யேர்மனிக்கு வந்து விட்டாளாம். படித்து, பட்டம் பெற்றது மட்டுமல்லாமல் ஒரு யேர்மனியனையும் திருமணம் செய்துகொண்டுவிட்டாள். ஐம்பது வயதைத் தொடுவதற்குத் தயாராக இருந்தாலும் பார்ப்பதற்கு நாற்பது போலவே இளமையாகத் தெரிந்தாள். அவள் நினைத்தால் எங்கள் எல்லோருடனும் அதிகாரத் தோரணையுடன் பேசலாம். நடந்து கொள்ளலாம். அப்படியொரு பதவியும் முக்கியத்துவமும் அவளுக்கு. இருந்தாலும் எந்தச் செருக்கும் இல்லாமல் வீதியில் கண்டால் கூட நின்று ஓரிரு கதையாவது கதைத்து விட்டுத்தான் செல்வாள்.

அன்றும் அப்படித்தான் எதேச்சையாக வங்கியின் கொரிடோர் ஒன்றில் சந்தித்த போது குதிரைக் கதை வந்து விட்டது. அன்று அவளுக்குக் குதிரைச்சவாரி இருந்தது. அதனால்தான் நான்கு மணிக்கே வேலையை முடித்துக் கொண்டு வெளிக்கிட்டிருந்தாள்.

"என்ரை மனுசனுக்குச் சரியான பொறாமை. நான் குதிரைச்சவாரிக்குப் போறது அவனுக்குப் பிடிக்காது" அன்ரோனெலா தொடர்ந்தாள்.

"ஏன்?" ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"நான் என்ரை குதிரையோடை அத்தனை நெருக்கமாக இருக்கிறது அவனுக்குப் பிடிக்கிறேல்லை. தன்னை விட குதிரையை நான் அதிகம் நேசிக்கிறனோ எண்ட பயம்

கலந்த எரிச்சல் அவனுக்கு" சொல்லியபடியே விடை பெற்று விட்டாள்.

குதிரை உண்மையிலேயே அப்படி நடந்து கொள்ளுமா? குளிக்க வார்த்த பின் பின்னங்கால்களை மடித்து மண்டியிட்டு நன்றி சொல்லுமா? என்ற கேள்வி கள் எனக்குள் ஆச்சரியங்களாகின. சந்தர்ப்பம் கிடைத் தால் ஒரு தரம் நேரேசென்று பார்க்க வேண்டும் என நினைத்த படியே நானும் அவ்விடத்தை விட்டு நகர்ந் தேன்.

இன்று அவளை மீண்டும் சந்திக்க வேண்டிய தேவை வந்தது. எனது கோடை விடுமுறைக்கான விண்ணப்பத்தை அவளிடம் கையளித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. என்னோடு ரெகினாவும் வந்தாள்.

இன்றைய நாள் குதிரைச்சவாரி இல்லாதநாள் என்பதால் ஆறுதலாகத்தான் வேலையைமுடித்து வெளிக் கிடுவாள் என்ற நம்பிக்கையுடன் அவளது அறைக் கதவை தட்டிவிட்டு உள் நுழைந்தோம்.

சிரித்தபடி அவள் எம்மை வரவேற்றாலும் அவ ளிடம் ஒரு பதட்டம் காணப்பட்டது. அவசரமாகத் தனது உடைமைகளைக் கைப்பையுள் திணித்துக் கொண்டிருந் தாள். வேலையை முடிப்பதற்கான ஆயத்தங்கள் அவை என்பது தெரிந்தது.

"என்ன இன்றும் குதிரைச்சவாரியோ?" ஆச்சரி யத்துடன் கேட்டேன்.

இல்லையில்லை. இண்டைக்கு என்ரை மனுசன் வீட்டிலை நிற்கிறான்.

"அதுக்கு..?" ரெகினா கேட்டாள்.

"கெதியிலை போகோணும். அவன் வீட்டிலை

நிற்கிற நேரத்திலை நேரத்துக்குப் போயிட்டன் எண்டால் பிரச்சனை இல்லை. கொஞ்சம் தாமதமாப் போனாலும் அவனுக்குப் பிடிக்காது. தேவையில்லாமல் சண்டை வந்திடும். அதுதான்... அவள் இழுத்தாள்.

"வழக்கத்திலை நீ வேளைக்குப் போடுவாய். அவன் அதுக்குப் பிறகு தாமதமாத்தானே வாறவன். அப்ப உனக்கும் அது பிடிக்காமல் போகலாம்தானே. நீயும் சண்டை பிடிக்கலாம்தானே" ரெகினா கேட்டாள்.

"என்ன இருந்தாலும் அவன் ஆம்பிளை. அவன் வேலையாலை வரத் தாமதம் எண்டால் அதுக்கு அர்த்தம் அவனுக்குச் சரியான வேலை, அவன் களைச்சுப் போய் வந்திருக்கிறான் என்றிருக்கும். நான் பொம்பிளைதானே! நான் வேலையாலை வீட்டை போய்ச் சேரத் தாமதம் எண்டால் அதுக்கு அர்த்தம் நான் யாரோடையோ போட்டு வாறன் அல்லது என்ரை மேலதிகாரி என்னை வைச்சிருக்கிறார்... எண்டு இன்னும் கனக்க விசயங்கள் இருக்கும்.

சொல்லிய படியே கணினியை நிற்பாட்டினாள். எழுந்து தனது சால்வையைக் கழுத்தில் சுற்றினாள்.

நானும் ரெகினாவும் அவளிடம் இருந்தும் அவளுக்கென அவளது அறையிலேயே இருந்த இரு உதவியாளர்களிடம் இருந்தும் விடைபெற்றோம்.

படிகளில் இறங்கும் போது ரெகினா "எனக்குத் தான் உந்தப் பிரச்சனை இருக்குதெண்டு நினைச்சன். அன்ரோனெலாவுக்குக் கூட இந்தப் பிரச்சனை இருக்கு" என்று எனது காதுக்குள் குசுகுசுத்தாள்.

-19.02.2016
வெற்றிமணி (பங்குனி 2016)

ஓர் அசாதாரண நாள்

உடற்பயிற்சி நிலையத்திலிருந்து வெளியில் வந்த போது வெயில் நன்கு எறித்தாலும், மெல்லிய குளிர்ந்த காற்று உடலைத் தழுவியது. அருகில் உள்ள உணவகத் தின் முன் பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் சாப்பிட்டு முடித்து ஐஸ்கிறீம் சுவைத்துக் கொண்டிருந் தார்கள். எனக்கும் வயிற்றைக் கிள்ளியது. வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போக வேண்டும்.

மனசு அவசரப்பட்டது. கால்கள் விரைந்தன. பேரூந்துத் தரிப்பிடத்தைத் தாண்டும் போது முகஸ்துதி களும் நட்பார்ந்த சிரிப்புகளும் மனதுக்கு இதமாக இருந்தன.

வழமை போலவே இலங்கைத் தமிழன் ஒருவன் குப்பை வாளிக்குள் வெற்றுப் போத்தல்களைத் தேடிக் கொண்டிருந்தான். அவனை அந்தக் கோலத்தில் காணும் போதெல்லாம் மனசு கொஞ்சம் சங்கடப்படும். விற்றால் அவனுக்கு ஒரு போத்தலுக்கு 25சதங்கள் கிடைக்கும்.

அவனையும் தாண்டி வீதியை அண்மிக்கும் பொழுதுதான் அவ்விடம் சற்று அசாதாரண நிலையில் இருப்பதை உணர்ந்தேன். நான்கைந்துபெண்கள் சூழ்ந்து நிற்க, ஒரு பெண் ஒரு ஆடவனை பட்டம் விடுவது போல் ஒரு கையில் இழுத்துப் பிடித்து வைத்திருந்தாள். அவனும் வலித்துக்கொண்டு ஓடுவதற்குத் தயாரானவன் போல இழுத்துக் கொண்டு நின்றான்.

குளிர்காற்று அவனை ஒன்றுமே செய்யவில்லை. முகமெல்லாம் வேர்த்து ஊற்றிக் கொண்டிருந்தது. கல வரம் படர்ந்திருந்தது.

என்ன நடக்கிறதென்று அனுமானிப்பதற்கு எந்த அவகாசமும் எனக்குக் கிடைக்கவில்லை. திடீரென அந்தப் பெண்ணின் கையிலிருந்து தன்னை விடுவித்துக்

கொண்டு மின்னல் வேகத்தில் ஓடியவன், சட்டென்று நடுவீதியில் மல்லாக்காகப் படுத்தான். படுத்தான் என் பதையும் விட விழுந்தான் என்பது தான் பொருத்தமாக இருக்கும்.

அருகே கைக்குழந்தையுடன் நின்ற ஒரு இளம் பெண்ணைப் பார்த்து ‘‘என்ன நடக்கிறது இங்கே?‘‘ என்றேன்.

‘‘சாகப்போகிறானாம். வாழ இனி விருப்பமில்லை யாம். பொலிசுக்கு அறிவித்து விட்டோம்...‘‘ அவள் சொல்லி முடிக்கவில்லை .வேகமாக வந்த கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாத குறையாக ‘கிறீச்´ சத்தங்களுடன் அவன் முன்னே வரிசையாகத் தரித்தன.

முதல் காரில் இருந்தவன் காரை விட்டு இறங்கி ஓடி வந்தான். விழுந்தவனை அழுங்குப் பிடி பிடித்து இழுத்துவந்து ஒரு படியில் இருத்தி ‘‘என்ன பிரச்சனை?‘‘ என்று கேட்டான்.

30-35 வயதுகள் மட்டுமே மதிக்கத்தக்க அந்த ஆடவன் ‘‘நான் சாகப்போகிறேன். என்னைச் சாகவிடுங் கள்‘‘ என்று உச்சாடனம் செய்து கொண்டே இருந்தான்.

இப்போது பிடித்திருப்பவனின் பிடியிலிருந்து அவன் மீண்டும் வீதிக்கு ஓட முடியாது என்பது திடம். எனக்கும் அவசரம். மனம் அங்கேயே நிற்க நான் அவ் விடத்தை விட்டு நகர்ந்தேன். இல்லை விரைந்தேன்.

பத்திரிகையில் அவனைப் பற்றிய செய்தி வரும் என நினைத்துக் காத்திருந்தேன். வரவேயில்லை. அங்கு நின்றிருந்த பெண்களில் எவரும் எனக்கு முன் அறிமுக மானவர்கள் அல்லர். அதனால் அவன் இப்போது எப்படி இருக்கிறான் என்று யாரையும் கேட்க முடியவில்லை.

மனசுக்குள் அந்த ஆடவனின் முகம் உறுத்திக்

கொண்டே இருந்ததால், பத்திரிகாலயத்தில் கடமையாற்றும் எனது மகன் துமிலனைத் தொடர்பு கொண்டு ''இப்படியொரு சம்பவம் நடந்ததே, ஏன் அது பற்றி எதுவுமே பத்திரிகையில் வரவில்லை?'' எனக் கேட்டேன்.

''தற்கொலை சம்பந்தமான விவரணங்கள் எதுவுமே முடிந்தவரை எமது பத்திரிகையில் பிரசுரமாகாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

எமது பத்திரிகையால் யாரும் தற்கொலைக்குத் தூண்டப்பட்டு விடக்கூடாது'' என்றான்.

-22.9.2014

வாய் இருந்தால் வங்காளம் போகலாம்

ஒரு கோடைவிடுமுறைக்கு எனது பேத்திகள் பிரித்தானியாவில் இருந்து வந்திருந்தார்கள். அன்று நாங்கள் ஒரு சுற்றுலாவை மேற்கொண்டிருந்தோம். எங் களுடன் இன்னும் சில உறவினர்களும் சேர்ந்து கொண் டிருந்தார்கள்.

அன்றும் வழமை போல இடையில் இறங்கி கார்களுக்கு பெற்றோல் அடிக்க வேண்டிய தேவை இருந்தது. அதையும் விடப் பெரியதேவை Toilet. இது ஆண்களை விட பெண்களுக்கு அடிக்கடி தேவைப்படும் மிக அவசியமான தொன்று. ஆரம்ப காலங்களில் நான் இப்படி எங்கு போனாலும் Toilet தேடுவதால் எனது கணவரின் முகச் சுளிப்புக்கு ஆளாகியிருக்கிறேன். „வெளிக்கிடும் போது வீட்டில் ஒரு தடவை போயிட்டு வந்திருக்கலாம்தானே" என்பார். அல்லது „தண்ணீரைக் குறைவாகக் குடித்து விட்டு வந்திருக்கலாம்" என்பார். தொடர்ந்த காலங்களில் எங்கள் வீட்டுக்கு விருந்தின ராக வரும் அத்தனை பெண்களும் என்னை விட அதிகமாக Toilet தேடியதால் இப்போதெல்லாம் கணவர் எங்கு போனாலும் தானாகவே „அந்தா Toilet இருக் கிறது. போவதானால் போட்டு வா" என்பார்.

ஜெர்மனியில் அது ஒரு பெரும் வசதி. எங்கு போனாலும் கண்டிப்பாக ஒரு மலசலகூடம் இருக்கும். மலசலகூடங்கள் இல்லாத அறைகளோ, விளையாட்டு மைதானங்களோ, பூங்காக்களோ.. எதுவுமே ஜெர்மனி யில் இல்லை என்றே சொல்லலாம். அது விடயத்தில் அவ்வளவு அக்கறையுடன் ஜெர்மனி செயற்படுகிறது. ஆனாலும் என்ன! ஒரு பிரச்சனை. அதிவேக வீதிகளில் உள்ள பெற்றோல் நிலையங்களிலும் புகையிரத நிலையங்களிலும் இன்னும் சில பொது வெளிகளிலும் உள்ள மலசலகூடங்களின் உள்ளே செல்வதற்கு ஐம்பது

சதம், எண்பது சதம், ஒரு யூரோ என்று அறவிடுவார் கள். அந்தக் காசைப் போட்டால்தான் உள்ளே போவ தற்கான கதவு அல்லது தடுப்பு திறக்கும்.

அவர்கள் அப்படி அறவிடுவதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காசை அந்த மலசலகூடங்களைத் துப்பரவாக வைத்திருப்பதற்குப் பயன் படுத்துவார்கள்.

அன்று நாங்கள் போன இடத்தில் எண்பது சதம் போடவேண்டும். நாங்கள் எல்லோரும் தாள் காசுகளைக் கொடுத்து, சில்லறைகளாக மாற்றி, நீண்ட வரிசையில் காத்து நின்று காசைப் போட்டு, உள்ளே போய்க் கொண்டிருந்தோம்.

எனது பேத்தி சிந்துவின் முறை வந்தது. அப் போது அவளுக்கு 12வயதாக இருந்தது. அவளுக்கு காசை மெசினுக்குள் போட மனம் வரவில்லை. அங்கு பொறுப்பாக நின்ற பெண்ணைப் பார்த்துக் கேட்டாள் „கட்டாயம் காசு போடவேண்டுமா?“ என்று. அந்தப் பெண் சொன்னாள் „போட்டால்தான் நீ உள்ளே போகலாம்“ என்று. சிந்து விடவில்லை. „நான் பிரித்தா னியாவில் இருந்து எனது விடுமுறையை அனுபவிக்க உங்கள் ஜெர்மனிக்கு வந்திருக்கிறேன். என்ன, உங்கள் நாட்டில் Toilet க்குப் போவதற்கும் காசு வசூலிப்பீர் களோ?“ என்று கேட்டாள். அந்தப் பெண்ணுக்கு மிகுந்த சங்கடமாகி விட்டது. உடனே தனது திறப்பால் சலூன் கதவுபோல இருந்த அந்த ஆடும் சிறிய கதவைத் திறந்து „நீ காசு தரவேண்டாம். போ“ என்று விட்டு விட்டாள்.

சிந்து திரும்பி வரும்போது 'உனது விடுமுறையை மிகுந்த சந்தோசமாக அனுபவி" என்று மலர்ந்த முகத் துடன் சொல்லி வாழ்த்தியும் அனுப்பி விட்டாள்

-20.06.2017

இவை
இருப்பை இடம் பெயர்த்து
இன்னொரு புலத்துக்கு மாற்றி விட்டு
விருப்போடு அமர முடியாது
வாடியிருந்த பொழுதுகளையும்
காலநிலை, மொழி,
கலாச்சாரம், பண்பாடு... என்று
எல்லாவற்றிலும் மாறுபட்ட
புலம்பெயர் தேசத்தில்
வசப்பட்ட வாழ்வையும்
கூறும் கதைகள்!

9 783981 300260
மனஓசை வெளியீடு